ஆக்பர் சக்கிரவர்த்தி.

ம-ா-ா-ஸ்ரீ

ச. திருச்சிற்றம்பலம்பிள்ளை

அவர்களால் இயற்றப்பட்டு,

G. V. ஷண்முகமுதலியாரால்

சென்னை:

வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

(All Rights Reserved.)

INTRODUCTION.

At my request, the author of this little Tamil work in prose has written it, with a view to make it useful not only to the student, but also to the humble villager, who has not, at the present moment, a good prose literature, with which to while away his leisure hours in his village home. All that he has at present is poetry, which he does not understand. There are, no doubt, stories written in indifferent prose, wherein the characters are made to fly in the air, performing imposssible acts, and men are made to wed women unlike them even in bodily shape. Histories describing hard stern facts and stories relating to the actual realities of life have yet to be clothed in forms suited to modern times. The tastes of the reading public have now to be entirely changed. All this is very difficult, considering the character and the temperament of a people, who are extremely conservative and religious, who have been used to modes of thinking, that have been in existence from time immemorial, and who will not swerve one inch from ways settled for them by their forefathers. I give one instance. A Hindu friend of mine, who took this book from me to read, was

surprised to find Akbar marrying Hindu wives. "I read from that book that Akbar married a number of R: jput wives," said he, "a Mohammedan marrying Hindu wives! I dont believe it. It is impossible." But with my friend, it is possible for a king's son to go to other worlds on horses with wings flying in the air! In the present condition of things, therefore, such a book as the present is much to be welcomed.

There is still another reason why I consider a book of the kind as highly necessary for the people. "Whatever else she may have wanted" says Dr. Miller, "India has never wanted poetry". This is more true of Southern India than any other part of this vast continent. The piety of the Hindu here consists invariably in reciting poetry written in praise of the Creator. Men, on whom the spirit of God had descended, exhibited the same by their power of composing songs *impromptu*. Great saints and prophets of religion had taught through poetry and poetry alone. It was after the recitation of a number of verses, that the doors of a temple opened of their own accord, that the incurable disease of a king was cured, that the dead boy bitten by a serpent was restored to life. Again, it is poetry that is said to have peculiar charms like the *open sesame* of old, and curses and anathemas have

their particular metrical forms. Such then the great influence of poetry on the people's minds. No wonder, therefore, that, when that pious Christian Missionary, Beschi, came to India in the eighteenth century to preach the religion of his master, he first studied the language of this country and then familiarised the life of Christ by his great Tamil poem the *Thembavani* and it is chanted even to this day in almost every Roman Catholic household in Southern India. Apart from religion, other departments of knowledge were made known to the people only through metrical works. Our books on Architecture, Astrology, Medicine &c., were invariably written in metre Tamil lexicons are in poetry. The result is that we have no prose work that could at all be considered classic, the oldest prose work in Tamil being a translation of the Sanskrit Panchatantra, written about 50 years ago by a great Tamil Scholar Tandavaroya Mudaliar. I except, of course, the commentaries written on some great Tamil works of poetry.

I therefore welcome this book and gladly recommend it to the public, in the hope that it will be read extensively. The life of a man like Akbar deserves to be widely known. The ordinary Hindu is in blissful ignorance of the history of his own country and his knowledge of the Emperors of Delhi is confined

only to that Pacha of Delhi, to whom the great Vishnava reformer Ramanuja went to plead before him for the return of a historical idol taken away to Delhi and this incident is celebrated every year in South Indian Temples in connection with the festival in honor of that great religious teacher. That there was one at least among the Emperors of Delhi, who was tolerant of other religions and who administered the country on the broad principles of justice and equality of treatment, deserves to be widely known. What a contrast this life to that of his great grandson Arungzebe, who said, on his deathbed, thinking of the cruel deeds that he performed, while in power, in the cause of his religion, "Whichever way I look, I see only the divinity and that an offended divinity." With regard to the book itself, it is written in a simple and natural style and I am sure the reader will find it interesting and instructive. I introduce this book to the public, in the hope that the author will write more books of a similar nature and in the hope also that Tamil scholars, who have the ability and the leisure to enrich our literature, will work in this direction and change for the better the tastes of the people.

THÓTTAKKADU HOUSE,
MADRAS.
24th January 1900,

T. RAMAKRISHNA.

விஞ்ஞாபனம்.

இந்நூல் பெரும்பான்மை Colonel. G. B. Malleson C. S. I. அவர்களால் இங்கிலீஷில் இயற்றப்பட்டிருக்கும் ஆக்பர் சரித்திரத்தையும் சிறுபான்மை Colonel Tod என்பவரால் இயற்றப்பட்டிருக்கும் இராஜஸ்தான வரலாற்றையும் தழுவியே எழுதப்பட்டிருக்கின்றது. "தமிழில் பேசுகிற நடைக்கும் எழுதுகிற நடைக்கும் வித்தியாசம் அதிகமாக இருக்கின்றது. அது சீக்கிரம் பரிகரிக்கப்படவேண்டும்" என்று விவேகிகள் பலரும் பலமுறையும் பத்திரிகைகளில் எழுதிவரக்கண்டு இந்நூலில், நடையைக் கூடியவரை எளிதாக்க முயன்றிருக்கின்றேன். இதனுள்வரும் இடுகுறிகளையெல்லாம் ஏறக்குறைய இங்கிலீஷில் வழங்குகிற விதமாகவே எழுதியிருக்கின்றேன். இந்நூல் அச்சாயினபின் எனக்கே தோற்றியனவும் என் நண்பர்கள் எடுத்துக்காட்டியனவுமாக இதன் பதிப்புவிஷயத்தில் செய்யவேண்டிய விருத்தியம்சங்கள் சில உண்டு. அவற்றையெல்லாம் அடுத்த பதிப்பில் செய்வதாக உத்தேசித்திருக்கின்றேன். இதை வாசிக்கும் கனவான்கள் இதில் விருத்திசெய்ய வேண்டுவனவும் திருத்தஞ்செய்ய வேண்டுவனவும் ஆகத் தங்களுக்குத் தோன்றும் அம்சங்களையும் அடியேனுக்கு எடுத்துக் காட்டுவார்களாயின் அவற்றை அன்போடேற்றியற்றி அவர்கட்கு மிகுதியும் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்று பணிவுடன் அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

கோவை
Jan. 1900. } ச. திருச்சிற்றம்பலம்.

அட்டவணை.

அதிகார எண்.	விஷயம்.	பக்கம்.
I.	பேபரின் படையெடுப்பு	1
II.	உமாயூனும் ஆக்பரின் இளமையும்... ...	22
III.	இந்தியாவின்மீது உமாயூன்படையெடுப்பும் அவன்உயிர்விடுப்பும் ...	33
IV.	ஆக்பருக்காதிபத்தியமளித்த பாணிப்பட்டுயுத்தம்	40
V.	ஆக்பர் சிம்மாசன மேறியபோது இந்தியா விருந்த நிலைமை... ...	48
VI.	ஆக்பரின் அரசாட்சி	66
VII.	ஆக்பரின் கொள்கை	133

ஆக்பர் சக்கிரவர்த்தி.

முதலாவததிகாரம்.

பேபரின் படையெடுப்பு.

தேசசரித்திரங்களை அறிதல் நாகரிகம் அடைதற்கு முக்கியமான காரணங்களுள் ஒன்றென்கின்றார்கள். பல தேச சரித்திரங்கள் தெரியாவிட்டாலும் ஒவ்வொருவரும் தம்தம் தேசசரித்திரங்களையாவது தெரிந்திருக்க வேண்டுவ தவசியம். இந்துதேசசரித்திரம் அன்னியதேசவாசிகளாகிய அங்கிலேயருள் பலர் அறிந்திருக்க அவ்விந்துதேசத்திலேயே வாசஞ்செய்கின்றவர்களாகிய நம்மவர்கள் அறியாதிருப்பது பெருங்குறைவாக இருக்கின்றது. அதற்கு முக்கியகாரணம் அவ்வன்னிய தேசத்தவர்கள் தக்க முயற்சியெடுத்துக்கொண்டு அச்சரித்திரங்களைத் தேசபாஷையில் எழுதியதும் நம்மவர்கள், ஆங்கிலேய மறியாத பெருந்தொகையார்களுக் குதவும்படி அத்தேச சரித்திரங்களைச் சுதேச பாஷையில் எழுதிப் பிரசுரியாமையுமே தான். ஆதலால் அக்குறையை நிவர்த்திக்கும்படி நம் இந்துதேச சரித்திரங்களையாவது நம்தேசபாஷையில் எழுதிப் பிரசுரிப்பது அவ்விந்தியாவின் நலத்தை நோக்கும் பிள்ளைகளாக இருக்கின்ற நம்மவர்களெல்லார்க்கும் கடமையாக இருக்கின்றது. ஆதலின் நம் மனுவாதி சுதேச சக்கிரவர்த்திகளுக்குப் பின் மத்பகாலத்திற் றோன்றித் தத்காலத்தில் ஆங்கிலேய தர்மதுரைத்தனத்தில் நாம் அனுபவிக்கும் நலங்கள் பலவற்றை உலகுக்குதவிய உத்தமவேந்தனாகிய ஆக்பர்

சக்கிரவர்த்தியின் வரலாற்றைக் கூறுமுகத்தால் நம் இந்து தேசசரித்திரத்தின் சிலபகுதியை நாம் இன்று எழுதத் துணிகின்றோம்.

பதினோராவது நூற்றாண்டின் தொடக்கத்திலிகழ்ந்த கஜனிமாமூதின் படையெடுப்புக்கு முன்னிட்ட இந்தியாவின் பூர்வசரித்திரத்தைப்பற்றி நாம் விவரிக்கப்போவதில்லை. உலகுக்கும் அதைப்பற்றி அதிகமாய் ஒன்றும் தெரியாது. பின்னிட்டதைச் சுருக்கியாவது சொல்லாவிட்டால் இவ்விந்தியாவின் ஆட்சியை ஆக்பர் கைக்கொண்டபோது அதுஇருந்தநிலைமை அறிவதரிது.

கஜனிமாமூது முதல் முதல் 1001 ம் வருஷத்தில் படையெடுத்து வந்தான். மாமூதும் கஜனிவமிசத்தைச் சார்ந்தமற்றைய அரசர்களும் டில்லி, ராஜபட்டணம் முதலிய இடங்கள் வரை நுழைந்திருந்தார்களாயினும் உண்மையில் பஞ்சாப்புக்குமேல் தங்கள்நிலைத்த ஆட்சியை நாட்டவில்லை. 1186 ல் இவர்களை கர்வமிசத்தார் அழித்து விட்டு ஆட்சியைக் கைக்கொண்டு 1288 வரை ஆண்டார்கள். பின் இவர்களை அழித்துவிட்டுக் கிலிஜி வமிசத்தார் கைக்கொண்டு நர்படை, தக்காணங்களுக்கு மேல்வரை ஜயித்து டில்லியிலும் இப்போது வடமேற்கு மாகாணங்கள் என்னப்படுகின்ற பிரதேசங்களிலும் முப்பத்துமூன்றுவருஷகாலம் அதிக பெருமையுடன் ஆட்சிசெலுத்தி வந்தார்கள். பின்பு டோக்ளாக் வமிசத்தார் 1321 ம் வருஷத்தில் கிலிஜியரை யழித்து ஆட்சியைக் கைக்கொண்டார்கள். அவர்களுக்கு நாடெல்லாம் ஒன்றாகக் கட்டியாளுந் திறமில்லை. அவர்கள் தொண்

னூற்றொருவருஷகாலம் அரசாட்சி புரிந்தார்கள். இவர்களுடைய ஆட்சிக்கு முன்காலத்தில் டில்லியின் ஆளுகைக்குட்பட்டிருந்த நாடுகளெல்லாம் இப்போது இவர்களுடைய ஆட்சியில் ஒவ்வொன்றாகச் சுயாதீன நாடுகளாகி விட்டன. இப்படி முன்னமே சீர்கெட்டிருந்த அரசாட்சிக்குத் தைமரின் படையெடுப்பினால் [1388 - 9] பெருங்கேடுண்டாயிற்று. ஆயினும் பிரதான அதிகாரம் அப்போது ஆண்டுகொண்டிருந்த சுல்தான்மாமூதின் கையிலேயே பன்னிரண்டு வருஷகாலம் இருந்தது. பின்பு இவ்வாளுகை இராஜபட்டம் வகிக்காத சையத் வம்சத்தினரைச் சார்ந்தது. இவர்கள் முப்பத்துமூன்று வருஷகாலம் வடஇந்தியாவில் பேருக்குஆண்டுவந்தார்களே யொழியச் சீரில்லை. பின்பு லோடிவம்சத்தைச் சார்ந்த ஆப்கானியவீரன் சமயம்பார்த்து ஆளுகையைக்கைக்கொண்டான்.

அப்போது இந்தியா முழுமையும் ஒருவனுடைய ஆளுகைக் குட்பட்டிராவிட்டாலும் அங்கங்கும் தனித்தனியாக ஒவ்வொரு மகமதியத் தலைவன் ஆட்சி புரிந்துவந்தான். ஆகலால் இந்தியா மகமதிய அரசாட்சிக் குட்பட்டிருந்ததென்று மொத்தமாகச் சொல்லலாம். எப்படியென்றால் 1840 ல் டில்லியை (சுற்றியிருந்த சிறுமாகாணத்துடன்) சையத்வம்சத்தார் ஆண்டுவந்தார்கள். அதற்குப் பதினைந்து மயில் தூரத்துக்குள்ளிருக்கின்ற மீவாத்தில் ஆமத்கான் சுயாதீனமாக ஆண்டுவந்தான். டில்லிவரையில் வியாபித்து இப்போது ரோகில்கண்டு என்னப்படுகின்ற சம்பாலில் டேரயகான் லோடி ஆண்டுவந்தான். இப்போது இட்டா என்னப்படுகின்ற ஜால்சேரானது ஈசாக்கான் வசத்தில் இருந்தது. இப்போது பாக்க

பாத் என்னுமிடத்தில் ராஜா பிரதாபசிங் ஆண்டுகொண்டிருந்தான். பயானாவில் டாட்கான்லோடி இருந்தான். லாகூர் டிப்பல்பூர் சர்க்கண்டுகளில் பேலல்லோடி ஆண்டுவந்தான். மூல்தான் ஜான்பூர் வங்காளம் மால்வா குஜரத்துகளிலும் ஒவ்வொருவன் தனித்தனி யரசுபுரிந்து வந்தான்.

கிழக்கே மேற்குப்போகாருக்கு வடபாகத்தில் அடுத்திருக்கும் தேசம்வரை இந்நாடுகள் பலவற்றின் மீதும் சூல்டான்பிலால் என்றழைக்கப் பட்ட பிலால்லோடி (சையத்வம்சத்தவர்களுக்குப்பின்) ஏகசக்கிராதிபத்தியம் (1450 - 88) செலுத்திவந்தான். அவனுக்குப்பின் பட்டம்பெற்ற அவன் மகன் சூல்தான் சிக்கந்தர்லோடி என்பவன் பேகாரை உட்படுத்தினான். வங்காளத்தின் மீதுபடை யெடுத்தான் ; ஆயினும் அதன்மீது மறுபடியும் படையெடுப்பதில்லையென்னும் வாக்குடன் அதன் அரசனாகிய அல்லாவுடீனுக்கே விட்டுவிடச்சம்மதித்தான். மத்தியஇந்தியாவில் அநேகபாகத்தைச்சயித்தான். 1518 ல் அவன் இறந்து போனான். இப்போது பஞ்சாப் என்றழைக்கப்படுகின்ற பிரதேசமும் ஜான்பூரை யுள்ளிட்ட வடமேற்கு மாகாணங்களும் மத்திய இந்தியாவின் பெரும்பகுதியும் மேற்குப்பேகாரும் அப்போது அவனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தன. பேருக்கு மாத்திரம் அப்படி யிருந்தனவேயன்றி உண்மையில் அவனுடைய ஆதிக்கத்தில் இருந்ததாகத் தோற்றவில்லை. அந்நாடுகளையெல்லாம் சிக்கந்தர்லோடி ஒவ்வொரு ஆப்கானிய பிரபுக்கள் வசம் விட்டிருந்தான். அவர்களெல்லாரும் அதற்குப் பிரதியாக அவனுக்கொருவித சகாயம் செய்துவந்தார்கள் ஆயினும் அங்கங்கேயவனவனும் தன்தன் மனப்போனவழியே பிரதானமாகக் கொண்டு ஆண்டுவந்தான்.

இந்த அவிவேகமான ஏற்பாட்டால் என்ன வாயிற் றென்றால் சிக்கந்தர் லோடி இறந்ததும் இந்த ஆப்கானிய பிரபுக்கள் எல்லாரும் ஒன்றுகூடிச் சிக்கந்தர்லோடியின் மூத்தமகனாகிய இப்பிராகீமின் ஆதிக்கத்துக்குப் பேருக்குக் கூடக்கீழ்ப்பட்டிருக்க மனமில்லாமல் ஜான்பூரை மட்டும் அவன் தம்பிக்கு விட்டு மற்றபடி தங்கள்தங்களிடத்தில் விடப்பட்டிருந்த தேசங்களைத் தாங்கள் தாங்களே வைத் துக்கொள்ளத் தீர்மானித்து இப்பிராகீமுக் கறிவித்தார்கள். பரிகாரம் ஒன்றும் காணமல் முதலில் இப்பிராகீம் அதற்கிணங் கினன். பின் தன்சுற்றத்தானாகிய கான்ஜான் லோடியின் ஏவுத லால் தன்சம்மதியை மறுதலித்து, தன்தம்பியைத் திரும்பி வரும்படி அழைத்தான். அவன் சம்மதிக்கவில்லை. உடனே ஒரு ராஜகலக முண்டாயிற்று. அதில் இப்பிராகீம் ஜயம் பெற்றன் தன்சகோதரன் இறந்தவுடன் முன் தன் தந்தை யால் ஒப்புவிக்கப்பட்ட நாடுகளை அபகரித்துக் கொண்ட அதிகாரப் பிரியர்களான பிரபுக்கள்மீது ஆதிக்கஞ் செலுத்த முயன்றன். அவர்கள் கலகம் பண்ணினர்கள். இவன் அதை அடக்கினன். ஆனல் அவன் தான் செயமடைந்த போது செய்த கொடுமையினல் புதிய கலகங்களுக்கிட முண்டாயிற் று. பேகார் அயோத்தி ஜான்பூர்களின் பிரபுக்கள் போர்க்கு வந் தார்கள். பஞ்சாப்பும் அவர்களைப் பின்பற்றியது. அப்போது நடந்த ராஜயுத்தம் மிகக் கடுமையாக இருந்தது. இந்த யுத் தம் மிகமும்மரமாக இருக்கையில் அல்லாவுதீன் என்பவன், அப்போது காந்தாரத்தில் உண்டான குழப்பங்களைச் சாந்தப் படுத்துவதில் முயன்றுகொண்டிருந்த பேபரிடத்தில் ஓடி அடைக்கலம்புகுந்து தன்னை டில்லியில் சிம்மாசனம் ஏற் றும்படி மிக வருந்திக்கேட்டுக்கொண்டான். இந்த பேபர்

யாரென்றால் முன் சூல்தான் மகமதுவின் ஆளுகையின் போது இந்தியாவின் மீதுபடையெடுத்துவந்த தைமருடையபேரன். காபூல்தேசத்தின் அரசன். இவனும் முன் இரண்டுமூன்று முறை இந்தியாவின் மீதுபடை யெடுத்தவன்தான். காந்தாரத்தைச் சுவாதீனப் படுத்திக் கொண்டா லொழியத்தனக்கு இந்தியாவின் படையெடுப்பினால் பயனில்லை என்பது 1520 ல் அவன்எடுத்தமூன்றும் படையெடுப்பினால்கண்டே, காந்தாரத்தைச் சுவாதீனப்படுத்தும் விஷயத்தில்இரண்டுமூன்று வருஷமாக முயன்று கொண்டிருந்தான். அதே சமயத்தில் லாகூர் அதிபதியாகிய தவுலத்கானும் இப்பிராகீமின் காரியஸ்தன் செய்த கொடுமையினால் வருந்திப் பேபரைத் தனக்குதவி செய்யும்படி கேட்டுக்கொண்டான். அப்படி உதவி செய்தால் தான் அதற்குப்பிரதியாகப் பேபரைத் தன்னரசனை ஏற்றுக்கொள்ளுவதாகவும் சொன்னான். பேபர் சம்மதித்து உடனே லாகூரைநோக்கிப் புறப்பட்டான்.

இதுவரையும் சொல்லிய சரித்திரத்தால் கஜனிமாமூதின்படையெடுப்புக்குப்பின் கழிந்த ஐந்துநூற்றாண்டில் இங்கேயாண்டவர்களுள் ஒருவருடைய ஆட்சியாவது நிலைக்கவில்லை என்பது விளங்கும். கஜனி, கர், டோக்ளாக், சையத், லோடி என்ற வமிசத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் நன்மையை உத்தேசித்தே சண்டையிட்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கீழ்ப்பட்டு ஆதிபத்தியம் வகித்துவந்த பிரபுக்களும் பிரதான அதிபதிகளின் வழியையே பின்பற்றினார்கள். குடிகளுக்கும் கொற்றவனுக்கும் பரஸ்பர க்ஷேமத்திற் கவலையேகிடையாது. அவ்வரசர்களுக்கு இஷ்டமே சட்டமாயிருந்தது. பரிகாரம்

வேறின்மையால் குடிகளும் உட்பட்டிருந்தார்கள். அவர்களையனுசரிக்கும் எண்ணம் ஆட்சிபுரிந்தவர்களுக்கிருந்ததில்லை. குடிகளின் அபிமானத்துக்கு அவ்வரசர்கள் பாத்திரர்களாகாமையால் ஆயுதத்தாலேயே தங்கள் ஆட்சியைக் காக்கவேண்டியிருந்தது.

முன்சொல்லியபடி அல்லாவுதீன், தவுலத்கான் இவர்களுடைய வேண்டுதலின்படி புறப்பட்டு லாகூரை நோக்கிவந்த பேபர் லாகூருக்குப் பத்துமயில் தூரத்தில் இப்ராகீம்லோடியைச் சார்ந்த அதிபதியின் சேனையைச் சந்தித்து முறியடித்தான்; லாகூர் பேபரின் சைனியங்களுக்கிரையாயிற்று. பேபர் லாகூரில் நான்குதினந்தானிருந்தான். பின் டிப்பல்பூரை யடுத்தடிப்படுத்தினன். அங்கே தவுலத்கான் தன்பிள்ளைகளுடன்வந்து பேபரைச் சந்தித்தான். அவன் தனக்குப் பேபரால் கிடைத்த வெகுமதியில் திருப்தியடையாமல் அவனுக்கு விரோதமாகச் சதியோசனை செய்தான். பேபர் டில்லிமார்க்கத்தில் சர்கண்டேக்குச் சமீபமாகப் போகையில் அவனுக்கு தவுலத்கானுடைய சதியோசனை வெளிப்பட்டது. பின் பேபர் மற்றைத்தேசங்களின் மீதும் படையெடுக்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தத்காலம் மாற்றிவிட்டுக் காபூலுக்குத் திரும்பினன். திரும்புகையில் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் எனத்தனக்குத் தோற்றிய அதிபதிகளின்வசம் பஞ்சாப்பை யொப்புவித்து விட்டுப்போனன். அவன் இந்து நதியைத்தாண்டியதும் பஞ்சாப்பில் எங்கேபார்த்தாலும் கலகத்துக்காரம்பமாய் விட்டது. டிப்பல்பூரின் ஆட்சியைப் பெற்றிருந்த அல்லாவுதீன் அதையிழந்து நிர்வாகமில்லாமல் காபூலுக்கோடிப்

பேபரைப் படையெடுத்துவரும்படி வேண்டிக்கொண்டான். அப்போது அங்கே பால்கில் உஸ்பெக்கர் முற்றுகைபோட்டுக்கொண்டிருந்தமையால் அவ்வேண்டுதலுக்கிசையக் கூடவில்லை; என்றாலும் பேபர் அல்லாவுதீனுக்கு வேண்டிய சேனையுதவினான். அதுவுமன்றி யவனுக்குதவி செய்யும்படி பஞ்சாப்பிலுள்ள தன் காரியஸ்தர்களுக்குத்திரவும் அனுப்பினான். இவ்வளவிருந்தும் அல்லாவுதீன் ஜெயம்பெறுமல் நிலைகலங்கி டில்லியைவிட்டுப் பஞ்சாபுக்கோடினான். இவ்வாறு அல்லாவுதீன் பராரியாகப் பஞ்சாபை யடைந்தபின் பேபர் இந்தியாவின்மீது ஐந்தாமுறை படையெடுத்துவந்தான். கடைசிப்படையெடுப்பாகிய இதில் பேபர் தன்குமாரனை உமாயூனுடன்புறப்பட்டுக் கைபர்க்கணவாயின் வழியாகப் பிஷாவருக்கு வந்து இரண்டுநாள் தங்கி 1525 டிசம்பர் 16 - ல் இந்து நதியைக்கடந்து சேல்கோட்டை 29 - ம் தேதி யடைந்தான். அவன் அங்கேவந்ததும் அல்லாவுதீன் தோற்றேடிய சமாசாரத்தைக் கேள்விப்பட்டான். அதுப்பற்றி மனந்தளராமல் மறுநாட்காலையிலேயே புறப்பட்டு வழியில் தவுலத்கான் அடைக்கலம் புகுந்திருந்த மீவாத் கோட்டையைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு தெய்வத்தையே முன்னிட்டுச் சட்லிஜ நதியைத்தாண்டி 1526 ஏப்ரல் 12 - ல் டில்லிக்கு வடமேற்கே ஐம்பத்துமூன்றுமயில் தூரத்தினதாகிய பாணிப்பட்டை யடைந்து பாளையமிறங்கினான். பின்பு ஒன்பது நாட்கழித்து இப்பிராகீம்லோடி ஒரு பெரியசேனையுடன் பாணிப்பட்டையடைந்து பேபரை எதிர்த்தான். அன்றுகாலை உதித்திரண்டுமூன்றுநாழிகைக்குத் தொடங்கிப் பகல் பதினைந்துநாழிகைவரைப் பிரமாதயுத்தம் நடந்தது. அதில் இப்பிராகீம் கொலையுண்டான். பேபர் முற்றிலும்

ஜெயம்பெற்று இந்தியாவைக் கைக்கொண்டான். டில்லி ஆக்ரா நகர்களைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளும்படி பேபர் அந்நேகாளில் சைனியங்களை யனுப்பினன். அவை முறையே ஏப்ரல் 24, மே-4 தேதிகளில் சுவாதீனப்பட்டன.

இப்போது பேபர் தன்னிலைமையைப்பற்றி யோசித்தான். இந்தப் பாணிப்பட்டியுத்தத்தால் தனக்கு இந்தியா கிடைத்துவிட்டதென்று பேரிருந்தாலும் உண்மையில் அதன் வடபாகம் மட்டுந்தான் கிடைத்திருக்கின்ற தென்பதை யறிந்துகொண்டான். அயோத்தி, ஜான்பூர் மேற்குப்பேகார்களின் அதிபதிகள் முன்பே டில்லி யாட்சிக்குட்படாமல் மறுதலித்திருந்தார்கள். அவர்களை யடக்க இப்பிராகீம் சேனைகளை யனுப்பியிருந்தான். ஆயினும் அன்னியனாகிய பேபரை எதிர்க்கும் விஷயத்தில் இருதிறத்தாரும் ஒருவிதமே யாவார்கள் போலிருந்தது. அப்போது வங்காளம் நாசரத்ஷாவிற்குக்கீழும், குஜராத்து சிக்கந்தர்ஷாவிற்குக் கீழும், மாளவம் சூல்தான்மகமதுவுக்குக்கீழும் ஆக மூன்றுவன்மையுள்ள சுயாதீன அரசாட்சிஸ்தானங்களாக இருந்தன. மாளவத்தின் ஓர்பகுதியாகிய ராந்தம்பூரும், காளிசிந்துக்கரையிலிருக்கும் சாரங்சப்பூரும் பித்வாமேலிருக்கும் பில்சாவும் சந்திரி சிற்றூர் என்பவைகளும் ராணாசங்கா என்னும் இந்துராஜனுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தன. இந்தியாவின் தக்ஷிணபாகத்தில் பாமினி வமிசத்தவர்கள் ஓர் ஆட்சியை நாட்டியிருந்தார்கள்.

விஜயநகரத்தரசன் சுயாதீனமாக ஆண்டுவந்தான். மகமதியர்களுக் கொருபோதும் உட்பட்டிராத ராய்களும் ரா

ஜாக்களும் அநேகர் ஓரோரிடத்தில் சுயாதீனமாக ஆண்டு வந்தார்கள். ஆனால் பேபருக்கு இவர்களையெல்லாம் வெற்றிகொள்ளுவது பெரியகாரியமாகத் தோற்றவில்லை. எளிதில் முடியுமென்றே எண்ணினான். பேபருக்குமுன் இந்தியாவின்மீது படையெடுத்தவர்களெல்லாம் கொலைபுரிவதும் கொள்ளையடிப்பதுமே தொழிலாக இருந்தொழிந்தார்களேயன்றி நிலைத்திருந்தாட்சிபுரியவேண்டுமென்று ஒருவராவது நினைக்கவேயில்லை. பேபருடைய குணாதிசயங்களைப் பற்றியோ குடிகட்கொன்றுந்தெரியாது. முன்னாட்சிபுரிந்த வமிசத்தவர்களைச்சார்ந்த சில மகமதியர்கள், குடிகளை நோக்கி "பாணிப்பட்டில் இப்பிராகீம்லோடியைக் கொன்று செயங்கொண்ட பேபர் இருக்கின்றானே அவன் மகாகொடியவன். மோகலாய வமிசத்தைச்சார்ந்தவன். அவனுடைய சேனைகளும் மத்திய ஆசியாவிலுள்ள மிலேச்சர்கள். பேபரும் அவனுடைய சேனைகளும் மகமதியமதஸ்தர்கள். உங்களுடைய ஆலயங்களும் மனைவிமக்களுடைய கற்பும் தனதான்யங்களும் இம்மிலேச்சர்களுடைய கொடுமைக்குத் தப்புவதரிது" என்று துற்போதனையும் செய்தார்கள். இது முன்னமேயே படையெடுப்பென்றால் பதைபதைக்கின்ற குடிகளை நெருப்புக்குக் காற்றுந்துணையானாற்போலப் பதின்மடங் கதிகமாகவே கலக்கிவிட்டது. ஆதலால், இரக்கமும்தயாளமுமுள்ள பேபரைக் கொடுங்கோன் மறமன்னனென் றெண்ணி அவன் ஆக்ராவுக்குச் சமீபிக்குமுன்னமே குடிகளெல்லாம் மனைவிமக்களுடன் ஆடையாபரணங்களை எடுத்துக்கொண்டு வீடுவாசல்களைவிட்டுக் கடும்புலிவாழுங் காடேகதியாகச் சென்றுவிட்டார்கள்.

இதுவுமன்றிப் பேபருடையராணுவத்திலும் குழப்பமுண்டாயிற்று. அவர்களெல்லாரும் கிழக்காப்கானேச்சார்ந்த மலைவாசிகள். உஷ்ணதேசங்களில் சஞ்சரித்துப் பழகினவர்களல்ல. டில்லியிலிருந்து ஆக்ராவுக்குப்போகும் வழியோ செழிப்புள்ளதல்ல. அவ்வழியில் சாமான்யகாலத்திலேயே கீழ்நாட்டவர்களாலும் வெயிலின் வெப்பம் தாங்கமுடியாது. அதிலும் அவர்கள் வந்தகாலமோ நல்ல உக்கிரமான வெயிற்காலம். ஆதலினால் பேபருடைய படையாட்களும் படைத்தலைவர்களும் திரும்பிச் சுதேசம் செல்லும் எண்ணமுடையவர்களாக முணுமுணுத்தார்கள். கடைசியாக அந்த முணுமுணுப்புப் பேபருடைய காதுக்கும் எட்டியது. பேபரோ தனக்குண்டான செயங்களினால் அதிக மகிழ்ச்சியுற்றிருந்தான். எல்லாநாடுகளிலும் பார்க்க அழகும் செழிப்பும் பொருந்திய நாடு தனக்குக் கிடைத்தமையால் இருந்தஇன்பம் இவ்வளவ்வளவல்ல. பேபர் பின் எழுதிய சீவிய சரித்திரத்தில் இத்தேசத்தின் சிறப்பைப் பற்றி நிரம்ப எழுதியிருக்கின்றான். அதில் "அது மிகவும் அழகான தேசம். அதை நம்முடையதேசத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அதை முற்றிலும் வேறு உலகமென்றே சொல்லவேண்டும்" என்றாரம்பிக்கின்றான். ஆதலினால் வெயிலையாவது குடிகள் தன்மீது அன்பின்றியோடியதை யாவது அவன் பொருட்படுத்தவேயில்லை அவன் முன்வைத்தகாலைப் பின்வாங்குபவனல்ல. இப்போது அவன் தனக்குள்ள கஷ்டங்களையெல்லாம் குறிப்பிட்டுக்கொண்டு அவற்றையகற்றும் மார்க்கமும் இன்னதென்று தீர்மானித்துக்கொண்டான். தன்சேனை ஒருமனப்பட்டாலன்றிப் பிறவற்

றை முடிப்பதரிது ஆகலால் முதலில் அதற்கேற்றதோ செய்யத்துணிந்து அவர்களையெல்லாம் ஒருங்குகூட்டிச் சொல்வானாயினன்:

"அன்பர்களே! நாம் இப்போது நம்முடைய தேசத்திலிருந்து எவ்வளவோதூரம் வந்திருக்கின்றோம். வருகையில் எவ்வளவு மலைகளையும் காடுகளையும் நதிகளையும் தாண்டி எவ்வளவு கடுமையான யுத்தங்களையெல்லாம்செய்துமுடித்தோமென்பது உங்களுக்கே தெரியுமல்லவா! அதற்குப் பிரதியாகப் பகவான் நமக்கு இந்த அழகான பெரியதேசத்தைத் தந்தார். இன்னும் சொற்பச்சிரமம் எடுத்துக்கொண்டால் அதை முற்றும் அனுபவிக்கும் பாக்கியம் சித்திக்கும். இந்தச் சொற்பச்சிரமத்துக்குப் பின்வாங்கி நம்சுதேசம் சொல்லத்துணிந்தால் நமக்கு என்னபயன் இருக்கின்றது. அதுமிகவும் வெட்கக்கேடான காரியம். ஆதலால் இனி என்மேல் அன்புள்ளவன் என்றிருக்கின்ற எவனும் பின் வாங்கும்கருத்தைக் கொள்ளாதிருப்பானாக; எவனுக்காவது இந்நிலையில் நிற்கமனமில்லாவிட்டால் அவன் திரும்பிப் போகலாம்" என்று சொன்னான். இதைக்கேட்டதும் அவர்களெல்லாரும் இசைந்து ஒரே மனதுடையவர்களாகப் பேபரின் சொற்படி நிற்கத்துணிந்தார்கள்.

ஊரில் ஒருவரும் இல்லாதிருந்தும் ஆக்ராவைவிட்டுப் போகும் நோக்கம் இல்லாதிருந்த பேபரின் திடத்தைக் கண்டு அவன் ஊரைவிட்டுப் போபவனல்ல வென்பதை உணர்ந்து முன்னிருந்த மகமதியர்களும் சுதேசிகளும் ஆகிய குடிகளெல்லாரும் மீண்டும் ஊர்வந்து சேர்ந்தார்கள். சொற்

பதினந்துக்குள்ளாகவே பேபரின் குணதிசயங்களை அறிந்துகொண்டு பேபர் தண்டிறங்கிய இடத்துக்கே பயமின்றி வருவதும் போவதுமாக இருந்தார்கள். அயோத்தியாமுதலியவற்றைக் கீழ்ப்படுத்தும்படி முன் இப்பிராகீம்லோடியால் அனுப்பப்பட்ட சேனைகளும் பேபரைத் தங்களுக்கு அரசனுக ஏற்றுக்கொண்டன.

ஆனல் அவனுக்கு இப்போது சித்தூர் அரசனுகிய ராணசங்காவினுல் துன்பம் உண்டாயிற்று. அவன் அக்காலத்தில் ஒவ்வொருவிதத்திலும் சிறந்து விளங்கினுன். தன் பூர்வார்ச்சித ராச்சியங்களை மகமதியர்களிடத்திலிருந்துமீட்டுக்கொண்டான். அதுமட்டுமல்ல பக்ராவுல், சடோளலிஎன்ற இரண்டிடங்களிலும் நேர்ந்த பெரியயுத்தங்களிரண்டிலும் இப்பிராகீம் லோடியைத் தோற்கடித்து அவ்விரண்டிடங்களையும் அவற்றோடு வேறு சிலவற்றையும் கட்டிக்கொண்டான். அக்காலத்தில் பிரசித்திபெற்றிருந்த ராந்தம்பூர்க் கோட்டையையும் முன்பே உட்படுத்திக் கொண்டான். அது முதல் அவன்சண்டைசெய்வதும் ஜயமடைவதுமாகவே இருந்து கடைசியாக ராந்தம்பூருக்குக் கிழக்கே சில மயில்தூரத்தில் இருக்கும் வலிய மலைக்கோட்டையாகிய காந்தாரைக் கைப்பற்றினுன். இச்செய்திதான் பேபரை அதிகமாக வருத்தியது.

அது மழைக்காலமாக இருந்தமையால் அதுகழிந்ததும் ராணுவின் விஷயத்தையும் மற்றவைகளையும் கவனிப்பதற்காகத் தன்மனிதர்களையெல்லாம் ஒன்றுகூட்டி யோசமந்திராலோசனை செய்தான். அதில் அப்போது பதினெட்டே வயதுடையவனுக இருந்த உமாயூன் என்னும் ஜேஷ்ட

குமாரன் டாப், ஜான்பூர், அயோத்தி என்ற இடங்களுக்குத் தண்டெடுத்துச் செல்லவேண்டுமென்றும், அவன் தந்தையாகிய பேபர் ஆக்ராவிலேயே இருந்து ராஜபகாரியங்களைக் கவனிக்க வேண்டுமென்றும், ராணாவைப்பற்றியோ என்றால் சமீபத்தில் உள்ள எதிரிகளைச் சுவாதீனப்படுத்திக்கொண்ட பின் கவனிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அப்படியே உமாயூன் படையெடுத்துச் சென்று பேகாரின் எல்லைவரையில் உள்ள தேசங்களைச் சுவாதீனப்படுத்திக் கொண்டு 1527 ஜனவரி 6 ல் வந்து சேர்ந்தான். அதற்குள் பேபர், பையானு டால்பூர் குவாலியர் மூல்தான் என்பவைகளைச் சுவாதீனப்படுத்தியிருந்தான், ஆதலால் அப்போது கால்பி குவாலியர்களி லிருந்து இமயமலை வரைக்கும் உள்ளனவும் மேற்குப்பேகாரிலிருந்து இந்துநதிவரையு முள்ளனவும் ஆகிய தேசங்களெல்லாம் பேபருடைய ஆதிபத்தியத்திலிருந்தன. இவ்வாறு அண்மையிலிருந்த எதிரிகளையெல்லாம் அடக்கியாயினமையால் இனிச்சேய்மையின் உள்ளாகிய சிற்றாரானைக் கவனிக்கவேண்டிய தவசியமாயிற்று. ஆதலால் பிப்ரவரி 11 ல் ஆக்ராவினின்றும் புறப்பட்டான். ராணாவும் இதை யறிந்து லோடி வமிசத்தவர்களாகிய சில மகமதியர்களைத் துணைசேர்த்துக்கொண்டு வந்து ஆக்ராவுக்கு அறுபத்திரண்டுமைல் தூரத்தினதாகிய பைசாவர் என்ற இடத்தில் தண்டிறங்கியிருந்தான். பேபர் சிக்கிரி என்ற இடத்தில் தண்டிறங்கினான். பின்நிகழ்ந்த சிறு சண்டைகளிலெல்லாம் ராஜபுத்திரர்க்குண்டான ஜயத்தினால் பேபரின் சைணியத்துக்கு மனத்தளர்ச்சி யுண்டாயிற்று. அதனால் தத்சமயம் வாய்ப்பான ஓரிடத்தில் வாளாவிருந்து விடுவதே க்ஷேமமெ

ன்றெண்ணி, அப்படியே இருந்துவிட்டான். அப்போது அவனுக்குண்டான மனோவியாகூலத்தினால் பக்திவிசுவாசத்துடன் தன் பூர்வநடைகளைக் கவனித்துப்பார்த்தான். கொரானுக்குமுற்றும்விரோதமான குடி தன்னிடத்தில்இருப்பதை அறிந்து அதைக்கட்டோடே யகற்றிவிடத் தீர்மானித்துத் தான் சாராயம் குடிப்பதற்கு உபயோகித்துவந்த பொற்பாத்திரங்களை உடைத்தெறிந்து பரிசனங்களை நோக்கி அத்துண்டங்களை விற்று விலைப்பொருளை அகதிகட்குதவும்படி ஆணைதந்தான்; இருந்த மதுவையும் எடுத்தூற்றிவிடும்படி சொன்னான். உடனே அவனுடைய அதிபதிகளில் முந்நூறு பெயர் அவனைப்பின்பற்றி மதுபானத்தை வர்ஜித்து விட்டார்கள்.

பின்பு பேபர் ஊக்கத்துடன் புறப்பட்டு எதிரியை நோக்கிச்சென்று வாய்ப்பான இடத்தில் நின்று தன்படையை அணிவகுத்திருந்தான். ராணாவும் முன்னோக்கி வந்தான். உடனே சேனைகளிரண்டும் கைகலந்து கொண்டன. மும்மரமான யுத்தம்நடந்தது. ராணாவின்பிரதானாதிபதிகளெல்லாரும் ஆருயிரிழந்தார்கள். அவனும் படுகாயமுற்றான். பேபருக்கு ஜெயமுண்டாயிற்று. மறுதினமே ராஜபுட்டானா அவனுடைய சுவாதீனமாயிற்று. உடனே அவன் பயானாவுக்கும் அங்கிருந்துமீவாத்துக்கும் போய் அந்த மாகாணம் முற்றும் சுவாதீனப்படுத்திக் கொண்டு பின்டாபில் தவறியிருந்த பட்டணங்களையும் சுவாதீனப்படுத்திக்கொண்டான். பின்பு பேபர்மத்திய இந்தியாவிலுள்ள இந்து மன்னர்களைக் கவனிக்கத் தொடங்கி அவர்களுள் பிரதானமானவன் சந்திரி யரசன் என்றறிந்து அக்கோட்டையை முற்றுகை

போடச் சந்திரிக்குச் சமீபமாகச் சென்றான். அப்போது கிழக்கேகனோஜ், லக்னோ என்ற இடங்களில் தன் காரியஸ்தர்களைத் தோற்கடித்து விட்டு லோடி வமிசத்தவர்கள். அவற்றைச் சுவாதீனப்படுத்திக் கொண்டார்கள் என்றசமாசாரம்வந்தது. அதைக்கவனிக்க வேண்டுவது முக்கியமாக இருந்தாலும் அதைப்பற்றிக் கலங்காமல்சந்திரிக்கோட்டை முற்றுகையிலேயே முயன்று செயம்பெற்றான். பிற்பாடு கிழக்கே போய் எதிரியைச் சிதறஅடித்து கனோஜையும் லக்னோவையும் சுவாதீனப்படுத்திக் கொண்டு ஆக்ராவைச் சேர்ந்தான். இனிச் சிலகாலம் அமைதியாக இருந்து, தான் முன் தொடங்கிய ராஜாங்கச் சீர்திருத்தத்தைக் கவனிக்க வேண்டுமென்று கருதியிருந்தான். ஆனால் அப்படி யமைதியாக இருக்க அவன் சத்துருக்கள் இடங்கொடுக்க வில்லை. அப்போது ஜான்பூரிலிருந்த பழய மகமதிய வம்சத்தவர்கள் சுயாதீனர்களாகவே இருந்தார்கள். அதையடுத்த பேகாரும் எதிர்க்கப்படாமலே இருந்தது. இப்போது இந்த இருநாட்டவர்களும் ஒன்றுசேர்ந்து லோடிவமிசத்தைச்சார்ந்த ஒரு ராஜகுமாரனுக்குட்பட்டுப் பேபருக்குத் தீங்குசெய்ய இருந்தார்கள். அவ்விராஜகுமாரன்தான் முன்பு ராணாசங்காவுக்குதவியாக வந்தவன். இந்தச் சதியாலோசனை மிகுந்த ரகசியமாக நடந்ததினால் 1529 பிப்ரவரி 1வரை பேபருக்குத் தெரியவில்லை. அப்போது அவன் தனக்குப்பிரியமானடால்பூரில் இருந்தான். அங்கே பூங்காமுதலிய எற்படுத்தி அந்நகரை அழகாக்குதற்குவேண்டியவைகளைச் செய்வதில் தன் அதிபதிகளுடன் கூடி முயன்று கொண்டிருந்தான். அதேநாளில் (பிப்ரவரி 1-ல்) அவன் ஆக்ராவுக்கு வந்து தன் கையிலிருந்த சேனைகளைக் கூட்டிக்கொண்டு கங்கைக்கரை

யிலுள்ள மக்டக்கியிலிருந்த தன் குமாரன் ஆஸ்கரியின் சே ஊையைச்சந்திக்கும்படி மறுதினமே புறப்பட்டு 27-ம் தேதி அந்தஇடத்தை அடைந்தான்.

அங்கே பேபருக்கு வந்த சமாசாரம் சாமானியமான தல்ல. எதிரி லக்ஷம்வீரர்களுடன் இருப்பதாகவும் பேப ரால் மதிக்கப்பட்டிருந்த அவன் அதிபதிகளில் ஒருவஞு கிய ஷேர்கான் எதிரியுடன் கூடிவிட்டான் என்பதாகவும் காசி யைத் தன்மாகாணத்துடன் சேர்த்துவிட்டான் என்றும் அந்த க்ஷேத்திரத்துக்கு இருபத்தாறுமயில் தூரத்தினதா கிய சாஞுரை மகமதுலோடி முற்றுகைபோட்டுக்கொண்டிரு க்கின்ருனென்றும் செய்திவந்தது. உடனே பேபர் முன் ஞைக்கிச்சென்று சாஞுரின் முற்றுகையைக் கலைத்துக் காசி யைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு மீண்டுங் கங்கையைத் தாண்டி எதிரியை அர்ரா வரைத்துரத்தினன். பேபர் அங் கே பேகாரின் ஆதிபத்தியத்தை வகித்துக்கொண்டான். பின்பு எதிரியாகிய மகமதுலோடி சிலபரிசனங்களுடன் வங் காளத்தரசனிடத்தில் அடைக்கலம் புகுந்திருப்பதாகத் தெ ரிந்தான். வங்காளத்தரசஞுகிய நாசரத்ஷா, மகம்மதுலோடி யின் சகோதரன்மகளை விவாகம்செய்திருந்தான். அந்த வங்காளத்தரசனுக்கும் பேபருக்கும் ஒருவர் தேசத்தில் ஒருவர் பிரவேசிக்கக்கூடாதென்று ஒருடன்படிக்கையும் இருந்தது. இப்போது நாசரத்ஷா அதைமீறிச் சாப்ரா என்ற மாகாணத்தில்பிரவேசித்துக் கங்கைகோக்ரா நதிகளின் சங்க மஸ்தானத்துக்குச் சமீபத்தில் வாய்ப்பான இடத்தில் தண் டிறங்கியிருந்தான். பேபர் வங்காளத்துச்சேனையை அங் கிலையினின் றெழுப்பவேண்டுமென்று தீர்மானித்துத் தன்

சேனையை ஆறுபங்காகப்பிரித்து அதில் நான்குபங்கு சேனையுடன் தன் மகன் ஆஸ்கரி கங்கையின் இடதுகரையிலிருந்து கோக்ராவைத்தாண்டி எதிரியை நோக்கிச்சென்று தாக்கவேண்டுமென்றும் தான் மற்றஇரண்டுபகுதியைச்சேர்த்திக்கொண்டு கங்கையையும் கோக்ராவையும் தாண்டி எதிரியைத்தாக்கவேண்டுமென்றும் தீர்மானித்தான். அப்படியேசெய்து (மே, 6 ல்) ஜெயங்கொண்டான். உடனே சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது; அதில் இப்போது மேற்குப்பேகார் என்னப்படுகின்ற நாட்டைப் பேபருக்கு விட்டுவிடவேண்டுமென்றும் இருவரில் ஒருவரும் மற்றவருடைய பகைவர்க் குதவிசெய்யக்கூடாதென்றும் ஒருவர் தேசத்தில் மற்றவர்பிரவேசிக்கக்கூடாதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த யுத்தத்தில் ஜெயம் பெற்றுப் பேபர் ஆக்ராவைச் சேர்ந்தபின் அவன் ஆரோக்கியம் குன்றத்தொடங்கியது. அதை அப்போது படாக்ஷன் என்ற இடத்தில் அதிபதியாக இருந்த அவனுடைய மூத்தகுமாரனான உமாயூன் கேள்வியுற்று ராஜகாரியத்தைத் தன்தம்பியான இண்டாலிடத்தில் ஒப்புவித்துவிட்டு உடனே ஆக்ரா வந்துசேர்ந்தான். வந்த சொற்பதினத்துள் அந்த உமாயூன் கொடியவியாதிநேர்ந்து அதிக அவஸ்தைப்பட்டான். வைத்தியர்களுங் கைவிட்டுவிட்டார்கள். அதுபற்றி அதிகவியாகூலமுற்றிருந்த பேபருடன் வசனித்துக்கொண்டிருந்த விவேகிகளுள் ஒருவன் பேபரைநோக்கி, “ஐயா! இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்குப் பிரதியாக அவர்களுக்கு மிக அருமையாக இருக்கின்ற பொருளைத் தேவனுக்கு அர்ப்ப

ணம் பண்ணினுல் ஆண்டவர் அதைப் பிரதியாக வேற்றுக் கொள்வதுண்டு" என்முன். பேபர் அதைக் கேட்டவுடன் "உமாயூனுக்கு என்னைவிட அருமையானபொருள் என்னவி ருக்கின்றது? எனக்குத்தான் அவனைவிட அருமையான பொருள் என்ன விருக்கின்றது? ஒன்றுமில்லை ஆதலால் அவன்பிழைப்பதின் பொருட்டு என்னுயிரை ஆண்டவருக் கொப்புவிக்கின்றே"னென்றுசொல்லி, எழுந்து, யார் தடுத் துங்கேளாமல் படுக்கையாயிருந்த உமாயூனை மூன்றுமுறை சுற்றிவந்து தேவனை நோக்கிப் பிரார்த்தித்தான். உடனே "நான் ஏற்றுக்கொண்டேன், நான் ஏற்றுக்கொண்டேன்" என்று சத்தம் கேட்டதாம். அதுமுதல் பேபருக்கு நோய் உண்டாகி அதிகரிக்க அதிகரிக்க உமாயூனுக்கு முற்றிலும் சுகமுண்டாகிவிட்டதாம். பின் பேபர் அப்படிவருந்திக் கொண்டிருந்து 1530-டிசம்பர் 26-ல் கடவுளடியைக் கலந் தான். அவன் பிரேதத்தை அவன் குறித்தபடியே காபூலுக் குக் கொண்டுபோய்க் கனனம் செய்தார்கள்.

பேபரை உலகத்தின் ஜயவீரர்களுக்குள் விசேஷித்த வன் என்றே சொல்லவேண்டும். போரிலும் பிரதாபத்தி லும் விருப்பமுடையவன், ஆயினும் ஒற்றுமையை யொதுக் கியவனல்ல. சுபாவத்தில் அதிக உற்சாகி. கண்டோர்யா ரும் காதலிக்கத்தகும் தன்மையன். அடுத்தோரை யாதரிக் கும் திறத்தன். ஓர் ஜாதியாருடன் போர்செய்து வெற்றி கொண்டால் உடனே அவர்கள் நிலைமையையும் சீர்திருத் தத்திற்குக் கொண்டுவரும் வழியையும் அறிந்துகொள்ள எப்போதும் முயற்சியுடையவனுகஇருப்பான். கானத்திலும் விவசாயத்திலும் சிற்பத்திலும் பிரியமுடையவனுக இருந் தான். கவிபாடுவதிலும் குறைந்தவனல்ல. ஆனுல் இரக்

கமும் தயாளமும் அவன் குணங்களுள் விசேஷித்தனவை யென்று அவனியல்பை நன்கறிந்த ஹைடர்மிர்ஜா சொல்லுகின்றான். பேபருக்குத் தேசங்களை ஜெயிக்கக்காலமிருந்ததேயன்றிச் செயித்தவைகளைச் சீர்ப்படுத்தியாளக் காலமிருக்கவில்லை; என்றாலும் அவ்வாறு ஜெயிப்பதும் மற்றவர்களுக்குச் சாத்தியமல்ல. பேபருக்கு நான்கு புதல்வர்கள் இருந்தார்கள். 1508-ஏப்ரல் 5-ல் பிறந்த உமாயூன் மிர்ஜா அவனுக்குப்பின் பட்டம் பெற்றஜேஷ்டகுமாரன்; மற்றவர்கள் காமரான் மிர்ஜா, இண்டால் மிர்ஜா, ஆஸ்கரிமிர்ஜா என்பவர்களே. பேபர் தான் இறக்குமுன்பாகவே உமாயூனைத் தனக்குப்பின் பட்டத்துக்குரியனாகக் கொள்ளும்படி தன் அமைச்சர்களிடம் அறிவித்திருந்தான். அவனுக்குச் சில புத்திமதிகளையும் சொல்லியிருந்தான். அவையாவன.— கடவுளுக்கும் மனிதர்கட்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்தப் பின்வாங்கக்கூடாது; குற்றம்புரிந்தோர்களைத் தண்டிக்கவேண்டும்; அறிவிலிகளுக்கும் ஆதரவற்றோர்க்கும் இரங்கவேண்டும்; அகதிகளை யாதரிக்கவேண்டும்; சகோதரர்களை அன்புடன் ஆதரிக்கவேண்டும்; என்பனவாம்.

இப்படியாக இந்தியாவில் மொகலாய ராஜ்யத்தை ஏற்படுத்திய சிரேஷ்டபுருஷன் தன் மத்திய ஆயுளில் உயிர் நீங்கினன். அவன் இந்தியாவின் வடமேற்கு மாகாணங்களையும் மத்திய ஜில்லாக்கள் சிலவற்றையும் ஜயித்து இந்தியாவைத் தனதென்று பாராட்டத்தக்க உரிமைமொகலாய ராஜ்யத்துக்குக்கொடுத்தான். அவனிடத்தில் அநேக உத்தமகுணங்கள் இருந்தன. ஆனால் தான் இந்தியாவில் ஜயித்த மாகாணங்களையெல்லாம் பொதுவாக ஒரே ஏற்பாட்டின்படி கட்

டியாளத்தக்க ஏற்பாடுசெய்ய அவனுக்குச் சாவகாசமிருக்கவில்லை. சந்தர்ப்பமும் வாய்க்கவில்லை. மகத்துவம் பொருந்திய குணங்கள் பல அவனிடத்தில் இருந்தாலும் கட்டியாளும் திறம் ஒருவேளை இல்லாதிருந்திருக்குமோ என்று சந்தேகிக்கவும் இடமுண்டு. அவனிடத்தில் அக்குணம் இருந்தது என்பதற்கறிகுறியே கிடையாது. அவனுக்கு முன்சென்ற ஜயசீலர்கள் போனமார்க்கத்தையே அவனும் பின்பற்றி இந்தியாவிலும் காபூலிலும் தான்ஜெயித்த மாகாணங்களையெல்லாம் அவற்றை முன் ஆண்டுவந்த அதிபதிகள் வசத்திலேயே அவற்றை அவனவனும் தன் தன் ஏற்பாட்டின்படியே ஆளும்படி விட்டுச்சென்றான். இப்படியாக, அவன் இறந்தபோது இந்தியாவில் அவனை எஜமானாக ஏற்றுக்கொண்டிருந்த மாகாணங்களெல்லாம் அந்த ஒரே பாந்தவ்யத்தாலேயே கட்டுண்டிருக்கநேர்ந்தது. ஆளுகையின் ஏற்பாடு ஆக்ராவில் ஒருவிதம்; லக்னோவில் ஒருவிதம்; டில்லியிலிருந்தது ஜான்பூரில் கிடையாது. பேபரைத்தங்களுக்கெல்லாந் தலைவனாக ஏற்றுக்கொண்டிருந்ததாகிய ஒரேபாந்தவ்யமுடைய பலவேறு ஜாதியார் வசித்த தேசங்களின் பிரிவுகள் அபாரமான சுங்கத்தால் குறிக்கப்பட்டிருந்தன. அவன் (பேபர்) தான் தன் ஆயுளில் ஜெயித்துச் சேர்த்ததென்ற ஒன்றையன்றி வேறெந்த ஐக்கியம் அல்லது பொதுவான அக்கறையாலும் கட்டுப்படாதிருந்த தேசத்தொகுதியைத் தன்மகன் உமாயூனுக்குப் பிதிரார்ச்சிதமாக விட்டுச்சென்றான். ஆகவே அவன் இறந்தபோது முன்சென்ற மகம்மது ராஜாங்கங்களைப்போலவே மோகலாயராஜாங்கமும் இந்துஸ்தானத்தில் வேரூன்றவில்லையென்றே சொல்லலாம்.

இரண்டாவததிகாரம்.

உமாயூனும் ஆக்பரின் இளமையும்.

ஆஜாநுபாகுவாக வளர்ந்திருந்த உமாயூனிடத்தில் ஆண்மை, யூகம், உதாரத்துவம், இரக்கம், சிநேகத்துவம் முதலிய குணங்கள் இருந்தன; ஆயினும் அவற்றோடு துடிதுடி, யோசனையில்லாத்தன்மை, கோழைத்தனம் முதலிய குற்றங்களும் இருந்தன. ஆதலால் பலவேறு வகைப்பட்ட ராஜ்யங்களைக் கட்டியாளுந்திறத்திற்கு இவன் தன் தந்தை பேபரைவிட அனருகன். அவனுடைய உதாரத்துவம் ஊதாரித்தனத்திலும் சினேகத்துவம் பாரபக்ஷத்திலும் இறங்கத்தக்கதாக இருந்தது. ஏதாவது ஒரு விஷயத்தில் தன்கருத்தை ஊன்றிச் செலுத்த அவனால் முடியாது. அரசாட்சியின் ஏற்பாட்டை ஆய்ந்து செய்வதற்கோ அவனுக்கறிவுமில்லை ஆசையுங்கிடையாது. பேபர்விட்டுச் சென்ற ராஜ்யங்களை இவன்கொண்டதற்குப் பின்னிட்ட எழெட்டு வருஷ சரித்திரத்தை விவரமாகச் சொல்லப் புகுவது அநாவசியம். இவன் கோலின்கீழ் வாழ்ந்த குடிகளுக்கு இவனிடத்தில் மதிப்புமில்லை நம்பிக்கையுமில்லை. ஆதலினால் இவன் தந்தையாகிய பேபருக்குக் கீழ்ப்பட்டிருந்த ஷேர்கான்சர் என்பவன் இவனுக்கு விரோதமாகக்கிளம்பி 1540 ஏப்ரலில் இவனை எதிர்த்துக் கனோஜ்என்ற இடத்தில் தோற்கடித்து விட்டு ஷேர்ஷா என்ற பட்டத்துடன் ராஜ்யத்தைக் கைக்கொண்டான். உமாயூன் பின்னும் சில அபஜயங்கள் அடைந்து தன்பிதா தனக்குவிட்டுச்சென்ற பிதிரார்ச்சிதங்

களை இழந்துபோய் 1541 - ஜனவரியில் சிந்துதேசத்தில் இந்து நதியின் மேலிருக்கும் பக்கூர் என்றதீவுக் கெதிர்த்த ரோரியில் சொற்ப பரிவாரங்களுடன் ஒரு நாடோடியாகத் தங்கினான். உமாயூன் சிந்துவில் நிலையாக இருந்துவிடவேண்டுமென்ற வீணான முயற்சியில் தலையிட்டு ஏறக்குறைய இரண்டரை வருஷகாலம் சிந்துதேசத்திலேயே கழித்தான். உமாயூன் அங்கிருந்தகாலத்தில் அவனால் ஜலாலுடீன் மகமது ஆக்பர் என்றழைக்கப்பெற்ற குழந்தை 1542-அக்டோபர் 15-ல் ஜனித்தது விசேஷ சம்பவம். இது இந்து தேச சரித்திரத்தில் ஒருவிசேஷ சம்பவமாதலின் இதன் வரலாற்றைச் சிறிது சொல்லவேண்டுவதவசியம்.

உமாயூன் தன்சேனைகள் பக்கூரை முற்றுகை போட்டுக்கொண்டிருக்கையில், சேவான் என்னும் செல்வம் பொருந்திய மாகாணத்தை எதிர்த்துச் சுவாதீனப்படுத்தி வைத்திருக்கும்படி ஏற்படுத்தித் தான் அனுப்பிய தன்சகோதரன் இண்டால் விஷயத்தில் அவநம்பிக்கைகொண்டு அவனை இந்து நதிக்கு மேற்கே சுமார் இருபது மயில்தூரத்திலுள்ள பாட்டர் என்ற இடத்தில் சந்தித்துப்பேச ஏற்பாடு செய்தான். அங்கே இவனை இண்டால் தன்பிரபுக்களுடன் ஏற்ற மரியாதையோடு எதிர்கொண்டழைத்துபசரித்தான். அதன்பின் நடந்த கொண்டாட்டத்தில் இண்டாலின் தாய் (உமாயூனின் மாற்றாந் தாய்) இவனுக்கு (உமாயூனுக்கு) ஒரு விருந்துசெய்து அதற்காக அரமனையைச்சார்ந்த எல்லாப் பெண்களையும் அழைத்திருந்தாள். அவர்களுள் இண்டாலின் போதகனாக இருந்த ஒரு பிரபுவின் மகளான அமீதா என்பவளைக்கண்டு உமாயூன் மிகமயங்கி உடனே அங்குள்ள

வர்களைப்பார்த்து "இந்தப்பெண்ணுக்கு வரன் ஏற்பட்டிருக்கின்றனா?" என்றுகேட்டான். அதற்கவர்கள் "ஒருவனுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் உரியசடங்குகள் ஒன்றும் ஆகவில்லை" என்றார்கள். இவன் "அப்படியாயின் நான் இவளை மணம்புரிய விரும்புகின்றேன்" என்றான். இப்படிச் சடுதியில் உண்டான தீர்மானத்தை இண்டால் ஆக்ஷேபித்து "நீ இதில் பிடிவாதமாக இருந்தால் உன் ஊழியத்தையும் பரித்தியாகம் செய்து விடுவேன்" என்று பயமுறுத்தினான். உமாயூனுக்கோ விடப்பிரியமில்லை. சகோதரர்களுக்குள் உண்டான கலகம் போராகமுடியும்போல் இருந்தது. அச்சமயத்தில் இண்டாலின் தாய்பிரவேசித்து இண்டாலைச் சமாதானப்படுத்தி மறுநாள் அந்த அமிதா என்ற பதினான்குவயதுக்கன்னிகையை உமாயூனுக்கு மணம் புரிவித்தாள். சிலநாள் கழித்ததும் சந்தோஷமான தம்பதிகளிருவரும் பக்கூரையடுத்த பாசரைக்குச் சென்றார்கள். ஆயினும் காலம் உமாயூனுக்குப் பிரதிகூலமாகவே இருந்தது. 1542-ல் அவன் தன் இளமனைவியோடு இன்னுயிர் போற்றவேண்டி, யாத்திரையில் தண்ணீரின்றித் தவித்துக்கொண்டு மார்வாடியைச் சார்ந்த பாழான வனங்களுக்கோடவேண்டியிருந்தது. இருவரும் கஷ்டங்களையெல்லாம் கலங்காது சகித்துக்கொண்டு வனாந்தரத்தின் கரையில் உள்ள அமரக்கோட்டையை ஆகஸ்டுமாதம் 22-ல் சேர்ந்தார்கள். அக்கோட்டையின்ராணா அவர்களை அதிக உபசாரத்துடன் வற்றுக்கொண்டான். அங்கேதான் அக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமையன்று அமிதாபேகம் ஆக்பரைப்பெற்றாள். அதற்கு நான்கு தினத்துக்கு முன்பாக உமாயூன் ஜான்ஜில்லாவின் மீது படையெடுத்து அமரக்கோட்டையை விட்டுப்போய்

விட்டான். "புத்திரன் ஜனனமான சமாசாரம் எட்டியதும் உமாயூன் கடவுளுக்குச் செய்யவேண்டிய தோத்திராதிகள் செய்தபின்பு அமீர்கள் வந்து சபம்விசாரித்தார்கள். பின்பு உமாயூன், ஜவ்சர் என்பவனை அழைத்து, 'உன்னிடத்தில் என்ன இறைப்பொருள் இருக்கின்றது?" என்றான். அவன் 'இருநூறு கொராசானிப்பொன் நாணயங்களும் ஓர்வெள்ளியாபரணமும் ஒருமுட்டை கஸ்தூரியும் இருக்கின்றன' என்றான். உடனே உமாயூன் அக்கஸ்தூரி முட்டையைக் கொண்டு வரச்சொல்லி அதை ஒரு சிறுத்தாம்பாளத்தில் கொட்டிப் புத்திரோற்சவ வெகுமதியாகப் பிரபுக்களுக்கெல்லாம் வழங்கினான். இதன்மணம் உலகெங்கும் பரவியது" என்று ஓராசிரியன் கூறுகின்றான்.

புத்திரோற்பத்தியால் பிதாவுக்கு உடனே அதிர்ஷ்டம் ஒன்றும் வந்துவிடவில்லை. சிந்துதேசத்தை விட்டகல வேண்டியதாக நேர்ந்தமையால் காந்தாரத்தைச் சேரும் நோக்கத்துடன் புதல்வன், மனைவி இவர்களை யழைத்துக் கொண்டு சொற்ப பரிவாரங்களோடு 1543 ஜூலையில் புறபபட்டு ஷால் என்ற இடம் வரைப்போயினான். இவன் அங்கே போனதும் தன் சகோதரனான ஆஸ்கரி என்பவன் பெருத்த ராணுவத்தோடு அடிக்கவந்திருப்பதாகவும் உடனே ஓட்டம் பிடிக்கவேண்டிய தவசியம் என்பதாகவும் தெரிய வந்தது. அதற்கு அவனும் அவன்மனைவியும் தயாராயிருந்தார்கள். ஆனால் கடுங்காற்றுக்காலமாக இருந்த அப்போது அசுவத்தின்மீது அதிவேகமாகப்போகும் பிரயாணத்திற்குச் சிறிதும் தகுதியற்றதாக அப்போது ஓராண்டும் முற்றுப்பெறாதிருந்த குழந்தையை என்ன செய்வது என்

பது பெருத்த கவலையாக இருந்தது. பின்பு சிற்றப்பன் சிசுவுடன் போர்கருதான் என்று நியாயமானபடியே சிந்தித்து, தங்கிய இடத்திலிருந்த தட்டுமுட்டுச் சாமான்களுடன் குழந்தையை அதன் வளர்ப்புக்கேற்பட்டிருந்த ஸ்திரீகளுடன் அங்கேயே விட்டு விட்டு உமாயூன் தன் தேவியுடன் குதிரையேறியோட்டெடுத்துப்பேர்சியாதேசத்தினெல்லையைச்சார்ந்தான். அவன் புறப்பட்டுப் போனவுடனே ஆஸ்கரி அங்கேவந்து, நிகழ்ந்தனவற்றையறிந்து, தான் ஏமாந்துபோனதைக்காட்டிக்கொள்ளாமலே, குழந்தையைப்பக்ஷமாகநடத்தித் தான் ஆதிபத்தியம்செலுத்தும்காந்தாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்த் தன்மனைவியின் பிரதான அதிகாரத்தின்கீழ் முன்னையசெவிலிகளே வளர்க்கும்படிவைத்தான். அக்குழந்தையாகிய இளவரசன் 1544-ம் வருஷம் முழுமையும் அந்நிலைமையிலேயே இருந்தான். ஆனால் அடுத்தவருஷத்தின் ஆரம்பத்திலேயே அந்நிலைமைக்கு மாறுதல் சம்பவித்தது. அவன் பிதாவாகிய உமாயூன் தனக்கு டாமஸ்ப்ஷா உதவிய ராணுவத்துடன் காந்தாரத்தைநோக்கி மேற்காப்காணிஸ்தானத்தின்மீது படையெடுத்தான். இதில் காமரான் அருண்டு, ஒருவேளை உமாயூன் தன்பிள்ளையை மீட்டுக்கொள்ளுவானோ என்றஞ்சித் தக்ககாவலுடன் பிள்ளையைக்காபூலுக்குத் தன்னிடம் அனுப்பிவிடும்படி நம்பிக்கைக்குப்பாத்திரர்களான சில காரியஸ்தர்களிடம் சொல்லியனுப்பினன். அவர்கள் அதை ஆஸ்கரிமிர்ஜாவின் சமுகத்தில் அறிவித்ததும் அதைச் செய்யலாமா கூடாதா என்பதைப்பற்றி அவனுடைய அமைச்சர்கள் ஒன்றுகூடியாலோசித்தார்கள். அமைச்சர்களில் சிலர் (அப்போது உமாயூனுடைய ஜயகாலமென்பதாக நினைத்துப்) பிள்ளையைத் தக்க பரிவாரத்துடன்

தந்தையிடம் அனுப்புவது நலமென்றார்கள். வேறு சிலர் முன்னே ஆஸ்கரி உமாயூனுக்குச்செய்த துரோகமானது சாமானியத்தில் பரிகாரமாகத்தக்கதல்ல, ஆதலால் இவன் (ஆஸ்கரி) காமரானுடைய தயவுக்காவது பாத்திரனாக நடந்துகொள்ளுவதே நலமென்றுசொன்னார்கள். ஆஸ்கரியும் அப்படியே நினைத்தான்; ஆதலால் அப்போது அசாதாரணமான கடும்பனிக்காலமாக இருந்தும் இளவரசனையும் அவன் தங்கை பாக்சிபானுபேகத்தையும் செவிலிகளுடன் காபூலுக்கனுப்பிவிட்டான். இடையில் சில விபத்துக்கள் நேர்ந்தாலும் கடைசியாக அவர்கள் க்ஷேமமாகக் காபூலைச்சேர்ந்தார்கள். சேர்ந்ததும் காமரான் தன் சகோதரன் புதல்வனாகிய இளவரசனைப் பேபர் சக்கரவர்த்தியின் அன்பான சகோதரியும் தன் அத்தையும் ஆகிய கான்ஜாடபேகத்தினுடைய விசாரணையின் கீழ் ஒப்புவித்தான். அம்மாது சிரோன்மணி பழயசெவிலிகளும் தோழிகளுமே முன்போல வளர்த்து வரும்படி நியமித்துக் குழந்தையை அன்புடன் ஆதரித்துவந்தாள். தவுர்ப்பாக்கியவசத்தால் அப்பாமரிப்புச் சிலகாலம்தான் நிலைத்திருக்க நேர்ந்தது. அடுத்த செப்டெம்பரில் (1545) உமாயூன் காந்தாரத்தைப்பிடித்துக்கொண்டான். இது காமரானை அதிகமாகக் கலக்கிவிட்டது. தன் அத்தை உமாயூனிடத்தில் அதிக அன்புடையவளாக இருந்துவிடுவாளோ என்ற சந்தேகமும் குழந்தையைக் தன் தமயன் மீட்டுக் கொள்ளுவதில் பொறுமையும் உடையவனாகிய காமரான், தான் ஆக்பர் என்னும் இளவரசனைத்தன்னிடம் வைத்திருந்தால் அது தன் தமயனை வேண்டியபடியெல்லாம் ஆட்டுவிக்கவல்ல மந்திரசக்கிரமாகுமென்றெண்ணி ஆக்பரைத் தன் அத்தையின் பராமரிப்பினின்று நீக்கி நம்பிக்கைக்குப்பாத்

திரமாகவிருந்த கூச்சிலான் என்ற ஒரு காரியஸ்தனிடம் ஒப்புவித்தான்.

ஆனால் அக்காலத்தில் காரியங்கள் க்ஷணத்துக்கு க்ஷணம் மாறிக்கொண்டிருந்தன. உமாயூன் காந்தாரத்தைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு நவம்பர் முதலில் ஒரு சேனையுடன் காபூலை நோக்கி வந்து அந்த மாதம் பதினைந்தாந் தேதி அதையும் சுவாதீனப்படுத்திக்கொண்டான். காமரான் தப்பிக் கஜனிக்கு ஓடிவிட்டான். ஆனால் உமாயூன் தான் நெடுநாளாகப் பிரிந்திருக்கநேர்ந்த தன்னருமருந்தன்ன குழந்தையைக்கண்டுமகிழும் பாக்கியம்பெற்றான். அதன் தாயாகிய அமீதாபேகம் அடுத்தவருஷத்திய கோடைகாலம்வரை வந்துசேரவில்லை. ஆனால் குழந்தையின் பராமரிப்பிலிருந்து கூச்சிலான் நீக்கப்பட்டு முன் அதில் ஏற்பட்டிருந்த அட்காகான் என்றழைக்கப்பட்ட ஷம்ஷுத்தீன் மகம்மத்கஜனியே மீண்டும் நியமிக்கப்பட்டான். தக்காலம் ஆக்பர் இளவரசனுக்கு மிகுந்த சுகமிருந்துகொண்டிருந்தது. ஆனால் பனிக்காலத்தின்போது முன்னரே படாக்ஷானை மீட்டிருந்த உமாயூன் அம்மாகாணத்தைச் சார்ந்த கீலாஜாப்பரில் சென்று கடும்பனிக்காலத்தைக்கழிக்க நினைத்துப்போயினான். அங்கு செல்லும் மார்க்கத்தில் அவனுடைய ஆவிக்கே யாபத்தென்று அஞ்சத்தக்கதாக இருந்த ஒரு கெட்டவியாதியால் பிடியுண்டான். அவ்வியாதியால் அதிக வருத்தப்பட்டுப் படுத்தபடுக்கையாகவே கிடந்து இரண்டுமாதங்களுக்குப்பின் ஆரோக்கியமெய்தினான். இதன்மத்தியில் இவனைச்சார்ந்த பிரபுக்களிற் சிலர் இவன் நோய்தீர்ந்து பிழைப்பதரிதென்றெண்ணி இவன் சகோதரர்களுடைய சமஸ்தானங்களை நாடிச்சென்று விட்

டார்கள். காமரான் தன் மாமனர் உதவிய ராணுவத்துடன் படையெடுத்துவந்து காபூலைச் சுவாதீனப்படுத்திக்கொண்டான்; அதனோடு (காபூலோடு) ஆக்பரும் இவனுடைய சுவாதீனத்தில் அகப்பட்டான். ஜெய வீரனை காமரான் முதலில் செய்த காரியம் என்னவென்றால் ஆக்பரின் பராமரிப்பிலிருந்து அட்காகானை யகற்றிவிட்டுத் தன் காரியஸ்தன் ஒருவனை நியமித்ததுதான். ஆனல் உமாயூன் தனக்கு நோய்நீங்கிச் சற்றுத் தேகதிடம் வந்ததும் தன் ராஜதானியை மீட்கக்கருதிவந்தான். காமரானது சிறந்த ராணுவத்திரளொன்றைச் சுற்றிடங்களிற் றோற்கடித்து நகரத்தை (காபூலை) யடுத்த கோஅக்காபியேனில் தங்கி நகரைநோக்கி வெடிதீர்க்கத் தொடங்கினன். அது அதிக கடுமையாயிருந்து விசேஷித்த நஷ்டத்தை யுண்டுபண்ணினதினுல் காமரான் "இந்த வெடிதீர்த்தல் நிறுத்தப்பட்டால் ஆயிற்று; இல்லாவிட்டால் அதிக உஷ்ணமாயிருக்கும் ஸ்தானத்தில் ஆக்பரைக்கொண்டு வந்து நிறுத்துவிப்பேன்" என்று தன்தமயனுகிய உமாயூனுக்குச் சொல்லியனுப்பினன். அதைக்கேட்டு உமாயூன் வெடியை நிறுத்தும்படி கட்டளையிட்டான். ஆயினும் முற்றுகைமட்டும்போட்டுக்கொண்டே இருந்து 1547-ஏப்ரல் 28-ல் ஜயசிலனுக நகரத்துட் பிரவேசித்தான். முன்னுளிரவிலேயே காமரான் தப்பியோடி விட்டான்.

காமரான் படாக்ஷனுக்கோடினன். உமாயூனும் பின்றெடர்ந்தான். ஆயின் அடுத்த கூதிர்ப்பருவத்தில் உமாயூனைச் சார்ந்த சிறந்த பிரபுக்களிற் சிலர் இவனை விட்டு காமரானிடம் போய்விட்டார்கள். உமாயூன் சிலகாலம் போவதும்வருவதுமாக இருந்துகொண்டிருந்து 1548

கோடையில் வடமாகாணங்களை நோக்கிப் பெருத்த ராணுவத்துடன் படையெடுக்கத் தீர்மானித்து ஆக்பரையும் அவன் தாயையும் தன்னோடழைத்துக்கொண்டு ஜூன்மாதத்தில் காபூலைவிட்டுப்புறப்பட்டான். குல்பகானுக்கு வந்ததும் ஆக்பரையும் அவன் தாயையும் திரும்பவும் காபூலுக்கே அனுப்பிவிட்டுத் தாலிகானை நோக்கிச் சென்று காமரானைப்பணிவித்தான். வடமாகாணங்களின்விஷயத்தை முடிவுசெய்து கொண்டு உமாயூன் காபூலுக்குத் திரும்பினான். மேற்குக்கண்டஸ் மாகாணத்தில் உள்ள பால்கை எதிர்க்கக் கருதி மீண்டும் 1549 வசந்தத்தின் இறுதியில் காபூலை விட்டுப் புறப்பட்டான். ஆயினும் உஸ்பெக்கர்கள் இவனை எதிர்த்துத் துரத்தினார்கள்; ஆதலால் 1550 கூதிர்ப்பருவத்தைக் கழிக்க வேண்டிக் காபூலுக்குத் திரும்பினான். உடனே ஒரு விநோதசம்பவம் நிகழ்ந்தது. அதாவது பால்கை நோக்கிச் சென்றபடை யெடுப்பில் எதிர்பார்த்தபடி காமரான் துணையாகவந்து சேராததே உமாயூன் திரும்பிவருதற்குப் பிரதானகாரணமாக இருந்தது. காமரான் துணைபுரியவராதிருந்ததுமாத்திரமல்ல. உமாயூனுக்கு விரோதமாக வெளிப்படையாகக் கலகமும் செய்துகொண்டிருந்தான். இவன் (காமரான்) தன் தமயன்தோற்றுத் திரும்பியபின் பெருத்த சேனையுடன் ஆக்சஸ் நதிக்கரையில் தங்கி உமாயூனுக்குத் தான் தலைவணங்கியதாகச் சொல்லியனுப்பினான். உமாயூன் அப்போது எட்டேவயதுடையனாக இருந்த ஆக்பரின் ஆதிபத்தியத்தில் காபூலை விட்டுவிட்டு அவனுக்கு மகம்மத் காசீம்கான் பிர்லாஸைப் போதகனாக நியமித்துவிட்டுத் தன் சகோதரனைச் சிறைப்படுத்தும்படி ராஜதானியை விட்டுப் புறப்பட்டான். அவன் அதிக அஜாக்கிரதையாக இருந்தமையால்

முன்னே தான் கலிவணக்குவதாகச் சொல்லியனுப்பிய காம ரான் கிப்சாக்கின்மேன்முனையில் எதிர்த்து அவனை (உமா யூனை) அடைக்கலந்தேடி யோடும்படி துரத்தினான். அவ் வாறு ஓடுகையில் உமாயூன் படுகாயப்பட்டான். ஆயினும் அத்துன்பங்களையெல்லாம் நிர்வகித்துக்கொண்டே போய் க்ஷேமமாகச் சிர்டான் கணவாயுக்கியைச் சார்ந்தான். அங்கே அவனுக்கு ஏறக்குறைய ஆபத்துக்கிடமில்லை என்று சொல் லலாம். தத்க்ஷணத்திலேயே காமரான் காபூலை நோக்கிச் சென்று சுவாதீனப்படுத்திக்கொண்டான்.

பின்னும் ஆக்பர் மூன்றுமுறை தன் சிற்றப்பனுக் குச் சிறைப்பட்டான்; உமாயூன் இதைப்பற்றி அசட்டையா யிருக்கவில்லை. தன் பரிசனங்களுடன் திரும்பவும் மலைக ளைக்கடந்து காபூலை நோக்கிவந்தான். ஷுடார்கார்டனுக்கு ச் சமீபமாக வந்ததும் காமரானுடைய ராணுவம் தன்னையெ திர்க்க அணிவகுத்திருப்பதைக்கண்டான். சமாதானமாய்ப் போவதை உத்தேசித்துச் சிலநாள் முயற்சித்தான். காம ரான் இசைந்துவரவில்லை. ஆதலால் உமாயூன் எதிர்க்கும் படி சைனியங்களுக்குத்திரவுசெய்தான். அதில் உமாயூனுக் குப்பூர்ணஜயம் உண்டாயிற்று. காமரான் ஓட்டம் பிடித் தான். அவன் (காமரான்) ஒருவேளை ஆக்பரையும் உடனி ழுத்துக்கொண் டோட்டம்பிடித்திருப்பானோ என்று உமா யூனுக்கு அச்சமிருந்தது; ஆனால்நகருட்பிரவேசிப்பதற்குள் ளாகவே ஆக்பர் தன்பராமரிப்பில் ஏற்பட்டிருந்த ஆசான் அட்காவுடன் எதிர்கொண்டு வருவது கண்டு ஆறுதலடைந் தான். அடுத்தநாள் உமாயூன் நகருட் பிரவேசித்தான்.

இம்முறை யுண்டானவெற்றி முடிவானதாகவும் நிலைத்ததாகவும் இருந்தது. இதன்பின் உமாயூன் பலர்க்கும் பரிசு கொடுத்தான். அதில் தன் மகன் ஆக்பரையும் விட்டுவிடவில்லை. கிர்க்ஜில்லாவை அவனுக்கு (ஆக்பருக்கு) ஜாகீராக விட்டான்.

ஆக்பருக்குக் கல்வி கற்பித்துக்கொண்டு மந்திரித்தொழில் செய்து வரும்படி ஸிஸ்டானைச் சார்ந்த ஹாஜிமகம்மத்கானை நியமித்தான். அடுத்த வருஷம் முடிவுக்குள்ளாக உமாயூனின் கஷ்டங்கள் ஒவ்வொன்றாக ஒழிந்தன. பின்னும் ஒருமுறை காமரான் படையெடுத்து வந்தான். ஆனால் முற்றிலும் தோல்வி படைந்து தமயனுக்குத் தலைதாழ்த்துநிற்க வேண்டியவனாயினான்; உமாயூன் அவனைத் (1553 ஆகஸ்டில்) தேசத்துக்குப்புறம்பே யகற்றி மெக்காவுக் கனுப்பிவிட்டான். காமரான் மெக்காவுக்கு அனுப்பப்பட்டுப்போய் நாலு வருஷங்களுக்குப்பின் அங்கே மரணமடைந்தான். இண்டால் மிர்ஜா வென்னும் மற்றோர் சகோதரன் பதினெட்டு மாதங்களுக்கு முன்பே (உமாயூன் காமரானைத் தொடர்ந்து செல்லுகையில்) கொலையுண்டான். மகா துரோகியாகிய ஆஸ்கரிமிர்ஜா என்னும் மற்றொரு சகோதரன் 1551ல் மெக்காவுக் கனுப்பப்பட்டான். இவன் அங்கே 1558 - ல் இறந்தான். இன்னும் அவன் உயிரோடிருந்தாலும் அவனால்தீங்கொன்றும் நிகழ்ந்தற் கில்லாதிருந்தது. உமாயூன் இவ்வாறாகத் தன்சகோதரர்களுடைய வாதையினின்றும் நீங்கினமையினால் இனிக் காஷ்மீரை ஜெயிக்கவேண்டும் என்று சிந்தித்தான். ஆனால் அவனுடைய அதிபதிகளும் அவர்களுடையபரிசனங்களும் அதில்விருப்புறாமல் வெறுப்பே காட்டினமையால் தன்

இஷ்ட விரோதமாகவே அம்முயற்சியை விட்டொழித்தான். இந்து நதியைக் கடத்தலிலேயே தற்சமயம் திருப்தியடைந்திருந்தான். அந்தநதிக்கும் ஜீலம்நதிக்கும் இடையில் தண்டிறங்கியிருந்தபோது பேஷாவரிலுள்ள கோட்டையை இடித்துப் பெரிதாகக் கட்டும்படி உத்திரவு செய்தான். அப்போதும் இந்தியாவின் மீதுபடையெடுக்கும் எண்ணம் வைத்திருந்தான்; ஆதலால் தன் சேனைகள் கடந்து போகவேண்டிய கணவாயில் ஓர் தங்குமிடம் இருக்கவேண்டுமென்பதில் அதிக கவலை கொண்டிருந்தான். வேலையை அதிக துரிதப்படுத்தினன் ஆதலால் 1554-ம் வருஷ முடிவில் கோட்டை கட்டி முடிவாயிற்று. பின்பவன் (உமாயூன்) காபூலுக்குத் திரும்பினன். மாரிக்காலத்திலும் அதை அடுத்த வசந்தத்தின் தொடக்கத்திலும் இந்துஸ்தானத்தில் ஓர் ஆதிபத்தியத்துக்கு ஆபத்து நேர்ந்தது. அதனல் உமாயூனுக்குத் தன் எண்ணம் நிறைவேற்றச் சமயம் வாய்த்தது.

மூன்றுவது அதிகாரம்.

இந்தியாவின்மீது உமாயூன் படையெடுப்பும், அவன் உயிர்விடுப்பும்.

1540-ல் கனோஜில் உமாயூனைத் தோற்கடித்த ஷேர்சான்சர் தான் அடைந்த ஜயத்தால் முன் பேபர் ஜெயித்த மாகாணங்களையும் அவைகளுடன் வேறுசிலவற்றையும் தனக்குட்படுத்திக்கொண்டான். அவன் நல்ல திறமைசாலி; ஆ

னால் அவனும் தான் மேற்கொண்ட ராஜனைப்போலவே தேசத்தையெல்லாம் ஒருங்கு கட்டியாளும் திறம் இல்லாதவனாகவே இருந்தான். ஒவ்வொருமாகாணமும் ஜில்லாவும் தனித்தனி வேறுவேறேற்பாட்டின்படி ஆளப்பட்டுவரும் பழய வழக்கத்தையே அவனும் கைக்கொண்டிருந்தான். அவன் காலின்ஜ ரின்முற்றுகையின்போது நேர்ந்த காயங்களால் வருந்தி அவனுடைய சேனைகளுக்கு அப்பலமானகோட்டை சுவாதீனப்பட்டதும் (1545) தேகவியோகம் எய்தினான்.

அவனுக்குப் பின் அவனுடைய துவதீயபுத்திரனாகிய சூல்தான் இஸ்லாமென்றும் அழைக்கப்பட்டுவந்த சாலிம்ஷர் சர் என்பவன் பட்டத்துக்குவந்து ஏறக்குறைய ஏழெட்டு வருஷமாண்டான். தனக்குப் பிதிரார்ச்சிதமாகக்கிடைத்த இராச்சியத்தின் ஆட்சியேற்பாட்டின் பலவீனம் அவனுக்குப் பெரும்படியாக ஒருவாறு தெரிந்திருக்குமென்று தோன்றுகின்றது. ஏனென்றால் அவன் தனக்குக்கீழ்ப் பற்பல மாகாணங்களிலும் ஆட்சிபுரிந்துவந்த அதிபதிகளை யடிக்கடி சந்தித்து ஆலோசனை புரிவதிலேயே காலமெல்லாம் கழித்துவந்தான்; ஆயின் சீர்திருத்தம் ஏதேனும் செய்யும் வரை அவன் சீவதசை நீட்டிக்கவில்லை. தனக்குப்பின் பட்டத்துக்குவர இளம்பாலகனொருவனை விட்டுவிட்டு அவன் தன்ஆருயிரிழந்தான் உடனே அதிபதிகள்கை மேலாகிவிட்டது. இளவரசனோ மூன்றேநாள் பேருக் கரசாயிருந்து பின் கொலையுண்டான். சிம்மாசனத்தை அவன் தாய்மாமன் கைப்பற்றி மகம்மதுஷா ஏடல் என்ற பட்டத்தோடு தன்னைச் சூல்தானாகப் பகிரங்கப்படுத்தினான். அவன் ஒரு மூடனும் குரூரசிந்தையுடையவனும் வியவஸ்தையில்லாத

வனும் மிகக்கேடான காமுகனுமாக இருந்தான். ஆயினும் அதிர்ஷ்டவசத்தால் அவனுடைய சமஸ்தானத்தில் ஹேமு என்ற இந்து ஒருவன்சார்ந்திருந்தான். அவன் மீவாத்தைச் சார்ந்த ரீவாரியில் ஓர்வர்த்தகனாக இருந்தான். அவன் புத்தி யுத்திகளில் சிறந்தவனாதலால் சமஸ்தானத்தின் சர்வாதிகாரமும்கைக்கொண்டிருந்தான். ஆயினுந் ஹேமுவின் திறமை ஷேர்ஷா தன்மகனுக்கு விட்டுச்சென்ற மாகாணங்கள் ஆட்சியில் ஒன்றோடொன்று சம்பந்தமில்லாமல் இருந்ததன்மையைத்தடுக்க ஒன்றுஞ்செய்யவில்லை. பயானாவில் இப்ராகீம் கிளம்பி ஆக்ராவையும் டில்லியையும் சுவாதீனப்படுத்திக்கொண்டு தன்னையே சுல்தானாகப் பகிரங்கப்படுத்தினான். சட்லிஜ்நதியின் வடமேற்கிலுள்ள தேசங்களின் அதிபதியாகிய அஹமட்கான் பஞ்சாப்பைக் கைப்பற்றிச் சிக்கந்தர்ஷா என்ற பட்டத்துடன் தன்னையே அரசனாகப் பகிரங்கப்படுத்தினான். இப்ராகீமும்சிக்கந்தர்ஷாவும் கிழக்கத்திய மாகாணங்களைப்பற்றிப் போராடிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஷாஜாகான் மாளவத்தைக் கைப்பற்றினான். இப்ராகீமுக்கும் சிக்கந்தர்ஷாவுக்கும் நடந்தபோரில் தத்சமயம் சிக்கந்தர்ஷாவின்கை மேலாக இருந்தது. அவன் ஆக்ராவுக்கு இருபது மயில்தூரத்திலுள்ள பேரா என்ற இடத்தில் இப்ராகீமைத் தோற்கடித்து மேனோக்கிச்சென்று டில்லியைச் சுவாதீனப்படுத்திக்கொண்டான். ஜான்பூரையும் பேகாரையும் மீட்டுக்கொள்ளக்கருதி ஒருபடையெடுப்பை உத்தேசித்துக்கொண்டிருக்கையில் காபூலிலிருந்து ஓாபாயம்வருவதாக இருப்பதைக்கேள்விப்பட்டான். பின்வரும் சம்பவங்கள் அவனுடைய முடிவினால் விசேஷித்தவைகள்.

உமாயூன் 1554-நவம்பரில் சிறுசைனியத்தோடு காபூலை விட்டு இந்துநதியைநோக்கிப் புறப்பட்டான். ஆயின் வரவரச் சேனையைப் பெருக்கிக்கொண்டேவந்தான். ஆக்பரும் அவனுடன்வந்தான். உமாயூன் இந்துநதியை 1555-ஜனவரி இரண்டாந்தேதிகடந்து ராவல்பிண்டியைச்சார்ந்து அங்கிருந்து புறப்பட்டு ராவிநதியின் மற்றைக்கரையிலுள்ள காலானூருக்குப்போனான். அங்கே தன்சைனியங்களை இரண்டாகப்பகுத்துத்தன துவிசிஷ்ட படைத்தலைவனாகிய பெய்ராம்கானை ஒரு பகுதியுடன் ஜாலந்தருக்கனுப்பிவிட்டு மற்றைப்பகுதியுடன் தான் லாகூருக்குப்போய் அங்கிருந்துகொண்டு அப்போது ராஜதானிக்கும்டில்தானுக்கும் மத்தியில் உள்ளதேசத்துக்கு விசேஷித்த நகரமாக இருந்த டிப்பல்பூரைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளுப்படி தான்மிகவும்அபிமானித்த அப்துல்மாலியை அனுப்பினான்.

பெய்ராம்கான் சிக்கந்தர்ஷாவின் சைனியத்தைச் சட்லிஜ் நதிக்கரையிலுள்ள மாச்சீவாராவில் தோற்கடித்துச் சர்கண்டு நகரைநோக்கிச் சென்றான். அங்கே அவனைத் தொலைத்துவிடலாமென்று நம்பி ஓர்மகாபெரிய ராணுவத்துடன் சிக்கந்தர்வந்தான். இதையறிந்தவுடன் பெய்ராம்கான் சிறிதுதளர்ச்சியடைந்து உதவிவேண்டி உமாயூனுக்கெழுதினான். உமாயூன் உடனே இளையஆக்பரைச் சிலசைனியத்துடன் அனுப்பிவிட்டுச் சிலநாட்கழித்துத் தானும்தொடர்ந்துவந்தான். இவர்கள் வருவதற்குள்ளாகவே சிக்கந்தர்வந்து விட்டான். ஆனால் எதிர்ப்பதற்குச்சிலகாலம் பின்வாங்கிக்கொண்டிருந்தான். இது அவனுக்குக் கேட்டைத்தந்தது. ஏனென்றால் உமாயூன் வந்ததும் எதிர்த்துத்தோற்கடிக்கவே சிக்கந்தர் சிவா

லிக்ஸைநோக்கியோடவேண்டியதாயிற்று. பின்பு உமாயூன் தன்ஜயசேனையுடன் டில்லியைநோக்கிப்போயினன். ஜூலை 23-ல் அதைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு தன் சேனையில் ஒருபகுதியை ரோகில்கண்டை ஜெயிக்கவும் மற்றொருபகுதியை ஆக்ராவைச் சுவாதீனப்படுத்தவும் அனுப்பினன். பஞ்சாப்பைக் கைக்கொள்ளுவதற்காக முன்னரே அப்துல்மாலியை அனுப்பியிருந்தான்.

ஆனால் அவனுடைய (உமாயூனுடைய) கஷ்டங்கள் இன்னும் ஒழிந்தபாடில்லை. மகமத்ஷாஅடலின் பிரதான மந்திரியும் சிரேஷ்டசேனதிபதியும் ஆகிய ஹேமு வடமேற்கு மாகாணங்களின்மீதுபடையெடுத்துவந்த வங்காளத்துப் பாலிமன்னனை ஜம்னு நதிக்கரையிலுள்ள கால்பிக்குச் சமீபத்தில் தோற்கடித்தான்; அத்தக்கவீரன் (ஹேமு) டில்லியின்மேல் படையெடுக்க ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தான். சர்கண்டில் தோற்றோடிய சிக்கந்தர்ஷாவுங்கூட இன்னும் தனக்குப் பிராணன் இருக்கின்றதென்பதைப் பஞ்சாப்பில காட்டத்தொடங்கினன். இத்தனையாபத்துகளுக்கும் இடையில் உமாயூன் பஞ்சாப்பின் காரியங்களைச் சீராக்கும்படி ஆச்பரை அவனுக்கு உசாத்துணைவனைப் பெய்ராம்கானைச் சேர்த்து அனுப்பிவிட்டுத் தான் டில்லியிலேயே இருந்தான்.

முதலாவது ஆச்பரைப்பின்பற்றுவோமாக. அவ்விளவரசன் 1556-ம் ஜனவரிமுதலில் சர்கண்டைச் சார்ந்தான். அங்கே (அவன் பிதாவுக்கு வேண்டியவனான அப்துல்மாலியின்கொடுமையால் வெறுப்புற்றிருந்த) அதிபதிகள் பலருடன்கூடிப் பில்லாவருக்குப்பக்கத்தில் சட்லிஜைத்தாண்டிக்

காங்க்ராஜில்லாவிலுள்ள சூல்த்தான்பூருக்குப்போய் அங்கிருந்து சிக்கந்தரைத்தேடிக்கொண்டு ஹாரியானாவுக்குப்போனான். உமாயூனுக்கு நேர்ந்த கொடிய ஆபத்தின்செய்தி ஆக்பர் சூல்த்தான்பூருக்குச்சென்ற காலையில் அவனுக்கு எட்டியது. ஆதலின் முன்னோக்கிச்செல்லுவதை நிறுத்தி உமாயூனுடைய தேகஸ்திதியைப்பற்றிய செய்தியை எதிர் பார்த்திருக்கக்கருதிக் காலானூருக்குப்போனான். உமாயூனுக்கு விரைவில் ரோகம் நீங்கி யாரோக்கியம் எய்தும் என்று நம்பிக்கைகாட்டி அவனுத்தரவின்படி எழுதியனுப்பப்பட்ட கடிதமொன்று ஆக்பர் காலனூருக்குப்போனதும் கைக்கெட்டியது. ஆனால் சொற்பநேரத்துக்கெல்லாம் சக்கிரவர்த்தியின் தேகவியோகச்செய்தியுடன் ஓர் தூதன் எய்தினான். உடனே ஆக்பர் சக்கிரவர்த்திஎன்று பகிரங்கப்படுத்தப்பட்டான்.

அப்போது ஆக்பருக்கு வயது பதின்மூன்றுவருஷமும் நான்குமாதமுந் தானாகியிருந்தது. அவ்வளவு சிறு வயதுடைய அவனுக்குச் சக்கிரவர்த்தியாக இருந்து நிர்வகிப்பது என்றால் அது ஒரு பெரிய கஷ்டமான காரியமாகவே இருந்தது. பஞ்சாப்பு அவனுடைய சுவாதீனத்தில் இருந்தது; அவனுடைய காரியஸ்தர்கள் சர்கண்டு டில்லி என்பவைகளையும் அநேகமாக ஆக்ராவையும் சுவாதீனப்படுத்தியிருந்தார்கள். ஆனால் பின்னொரு போலிமன்னனையும் ஜெயித்த ஹேமு தன்னிரண்டு ஜெயங்களாலும் பூரித்து மகமத்ஷாவடலின் ஆளுகையை மீட்டும் நாட்டும்உத்தேசத்தோடு ஐம்பதினாயிரம் போர்வீரரும் ஐந்நூறு யானைகளும் கூடிய பெரிய ராணுவத்துடன் ஆக்ராவைநோக்கி வந்துகொண்டிருந்த செய்தி முன்னமே ஆக்பருக்குக்குத்தெரியும்; பற்றுக்

குறைக்குக் காபூலில் உமாயூனால் நியமிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட தேசாதிபதியும் மறுதலையாகக் கிளம்பிவிட்டான் என்ற சமாசாரமும் சிலநாளுக்குப்பின் கேள்விப்பட்டான்.

உமாயூன் டில்லியிலுள்ள தன் அரண்மனையிலுள்ள புத்தகசாலையின் மாடிப்படியிலிருந்து விழுந்து காயம்பட்டிறந்தான். அவன் நான்குநாள் வியாதியாக இருந்தான். அதிற் பெரும்பாகம் பிரக்ஞையில்லாமலே கிடந்து ஜனவரிமாதம் இருபத்துநான்காந்தேதி சாயந்திரம் அவனது நாற்பத்தெட்டாவதுவயதில் தேகவியோகமெய்தினான். ராஜதானியிலிருந்தபிரபுக்களுள் சிரேஷ்டமானவனும்டண்மையில் நகரத்தின் அதிபதியாக இருந்தவனும் ஆகிய டார்டிபெக்கான் என்பவன் உடனே மேற்போட்டுக்கொண்டு காரியங்களையெல்லாம் நிர்வகித்து வந்தான். அவனுடைய முதற்காரியமாவது: விவரங்களையெல்லாம் ஆக்பருக்கு அந்தரங்கத்தில் சொல்லியனுப்பிவிட்டுப் பட்டம் அவனுக் (ஆக்பருக்) கென்பதை உறுதிப்படுத்தும்வரை உமாயூனின் மரணச்செய்தியை ரகசியத்தில் வைத்திருப்பதுதான். அவனுடைய புத்திசாமர்த்தியத்தினால் அதைப் பதினேழுநாள்வரைப் பிறர் அறியாதபடி மறைத்துவைத்திருந்தான். பின்பு அவன் பெப்ரவரி பத்தாந்தேதி பிரபுக்களுடன் மாஸ்குக்குப்போய்ச் சக்கிரவர்த்திக்காகச்செய்யும் பிரார்த்தனையை ஆக்பரின் பேரால் செய்யும்படிசெய்தான். அவனுடைய இரண்டாவது காரியமாவது: இராஜாங்க பிருதுகளை மகுடாபரணங்களுடன் அரண்மனையுத்தியோகஸ்தர்களையும் இராஜமெய்க்காவலாளர்களையும் உமாயூனின் சகோதரனான காம்ரானின் புதல்வனையும் சேர்த்துப் பஞ்சாப்பில் புதியசக்கிரவர்த்தி

(ஆக்பர்) தங்கியிருந்த இடத்துக்கனுப்புவதாக இருந்தது. பின்பு ஆக்பர், வருமென்றெதிர்பார்த்துப் பயந்திருந்த ஹேமுவின் எதிர்ப்பினின்றும் ராஜதானியைப் பாதுகாக்க வேண்டிய முயற்சிகளைச் செய்யுமாறு புறப்பட்டான்.

நான்காவததிகாரம்

ஆக்பருக்காதிபத்தியமளித்த பாணிப்பட்டுயுத்தம்.

ஆக்பருக்கு அவன் பிதாவின் மரணசமாசாரம் அவன் (ஆக்பர்) காலானூருக்குப் போனதும் கிடைத்ததென்று முன்னமேசொன்னோம். அச்சமயத்தில் அவன் காபூலின் கலகத்தைப்பற்றிக் கேள்விப்படவில்லை. அவனுசாத்துணைவனுள்ளத்திலும் ஹேமு ஒருவேளை டில்லியின்மீது படையெடுப்பான் என்பதிருந்ததில்லை. சிக்கந்தர்ஷாவாகிய ஒரே ஒரு எதிரிதான் உண்டென்று சிலநாள்வரைக்கருதியிருந்தார்கள். அவனையடக்கும்படிதான் உமாயூன் ஆக்பரைப் பஞ்சாப்புக்கனுப்பியது. அந்தச் சிக்கந்தர்ஷா அப்போதும் சொற்பப்படையுடன் காஷ்மீரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். ஆதலால் பஞ்சாப்பைக் கைப்பற்றுவதுதான் பிரதமமானகாரியமென்றும் அதை முடிப்பதற்காகத் தாங்கள் சிக்கந்தர்ஷாவைத் தொடரவேண்டும் என்றும் பாலசக்கிரவர்த்தியும் அவனுசாத்துணைவனும் கருதினார்கள். ஆதலின் காலானூரிலிருந்து புறப்பட்டுச் சிக்கந்தரைத்துரத்தி அவனைச்

சிவாலிக்ஸைச்சார்ந்த சிம்மலைத்தொடரிலுள்ள மான்கோட்டுக்கோட்டையில் அடைக்கலம்புகச்செய்தார்கள். அக்கோட்டைமிகப்பலமானதாக இருந்ததாலும் இந்துஸ்தானத்தையும் காபூலையும் பற்றி எதிர்பார்த்திராத வர்த்தமானங்கள் எட்டினமையாலும் கோட்டையை இடித்து வீழ்த்தும்படி ஒரு சைனியத்தை விட்டுவிட்டுச்செல்வதிலேயே பிரதானிகள் திருப்தியுடையவர்களாக ஜாலந்தருக்குச்சென்றார்கள்.

உண்மையாகவே தருணம்பார்த்துத்தான் அப்படி அவர்கள் திரும்பினார்கள். ஏனென்றால் காபூலில் கலகம்நிகழ்ந்தது. அதுமாத்திரமல்ல ஹேமு படையெடுத்துவந்தான். வரும்வழியில் வரவரச் சைனியங்களையும் விருத்தியாக்கிக்கொண்டேவந்து ஒருசிரமுமின்றி ஆக்ராவைக் கைப்பற்றினான் என்று செய்திவந்தது. டில்லிக்கருகில் மொகலாய ராணுவத்தைத் தோற்கடித்துவிட்டு ராஜதானியையும் கைப்பற்றினான் என்ற சமாசாரமும் ஒருநாளுக்குப்பின் கிடைத்தது. டார்டிப்பேக்கும் இருந்த சொற்பசைனியங்களுடன் சர்கண்டுக்கோடி விட்டான்.

பலபேர் ஆலோசனையில் எப்போதும் நன்மையிருப்பதில்லை. ஹேமுவின் ஜயத்தைப்பற்றி ஆக்பர் கேள்விப்பட்டபோது போர்வீரர்களான அதிபதிகளை ஒன்றுகூட்டி அவர்கள் ஆலோசனையைக்கேட்டான். பெய்ராம்கானைத் தவிர மற்றெல்லாரும் “மலைநாட்டு ராஜதானியாகிய காபூலைமீட்பது சாத்தியம் என்பது உறுதியாதலால் அதன்மேல் படையெடுத்துச்சென்று அதைச்சுவாதீனப்படுத்திக்கொண்டு நல்லகாலம்வந்து இந்தியாவின்மீது படையெடுக்க வசதிவாய்க்கும்

வரை ஆக்பர் அங்கே (காபூலில்) இருப்பது நல"மென்றார்கள். அதற்குமாறாகப் பெய்ராம்கான் "உடனே சட்லிஜைக் கடந்து சர்கண்டில் டார்டிபெக்கைச் சந்தித்துத் தக்ஷணமே ஹேமுவின்மீது பாயவேண்டும். டில்லி இருமுறை ஜெயிக்கப்பட்டு இருமுறை இழக்கப்பட்டது; ஆதலால் எதையும் பொருட்படுத்தாமல் அதைத்திரும்பச் செயிக்கவேண்டும். பிரதானம் டில்லியேயொழியக் காபூலல்ல; டில்லியின் ஆதிபத்தியம் வகிப்பவனுக்குக் காபூலைச்செயிப்பது பெரியகாரியமல்ல" என்று தன் ஆண்மையுள்ள சுரத்தோடு கூறினான். ஆக்பரின் இயற்கையறிவு தன் உசாத்துணைவன் கருத்தோடிணங்கினமையின் உடனே சட்லிஜைக்கடக்கும்படி உத்திரவுகொடுக்கப்பட்டது.

இந்திய சக்கிரவர்த்தியாக இருப்பதா; காபூலிற் சிற்றரசனாக இருப்பதா; எது சிரேஷ்டம்? என்பதுதான் இப்போது ஆராய்ச்சிக்கு விஷயமாக இருப்பது என்பது ஆக்பருக்கும் அவன் போதகாசிரியனுக்கும் தெரியும்; ஏனென்றால் அவர்கள் ஹேமு பஞ்சாப்பைச்செயித்து டில்லியின் ஆதிபத்தியத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முயல்கின்றானென்பதை இந்தியாவிலுள்ள தங்கள் மனுஷர்களால் கேள்விப்பட்டிருக்கின்றார்கள். ஆதலின் முன்பாகவே எதிர்நோக்கிச் செல்வது கருதி ஆக்பர் அக்டோபரில் ஜாலந்தரை விட்டுப்புறப்பட்டு சட்லிஜைக்கடந்து சர்கண்டைச் சுவாதீனப்படுத்திக்கொண்டான். அங்கே முன்பு டில்லியிலிருந்து ஹேமுவால் தோற்றோடிவந்த டார்டிபெக்கும் மற்ற பிரபுக்களும் ஆக்பரைக்கூடினார்கள். பெய்ராம்கான் உடனே டார்டிபெக்கைத் தன் கூடாரத்தண்டை யழைப்பித்துக் கொலைசெய்துவிட்

டான். இதனால் ஆக்பருக்கு பெய்ராமின்மேல் வெறுப் புண்டாயிற்று. தன்செய்கை நியாயமானதென்று ஆக்ப ருக்கு மெய்ப்பிக்கப் பெயராம்கானால் முடியவில்லை. மற்ற அதிபதிகள் அஞ்சியிருத்தலினிமித்தம் இது செய்யவேண் டிய தவசியமாயிருந்ததென்று பெய்ராம் போக்குக்காட்டி யிருப்பான்; ஆனால் ஆக்பரின் மனத்திற் கஃதொவ்வவில்லை. டார்டிபெக்கு ஒருதுருக்கியகனவான். முன் உமாயூனுக்கும் அவன் சகோதரர்களுக்கும் கலகம் நிகழ்ந்தகாலங்களில் சிலபோது எதிரிகளுக்குச் சகாயமாக இருந்திருந்தாலும் கடைசியாக உமாயூனைச்சார்ந்தவனாகவே யொழுகினான். உமாயூன் இறந்தபோது அவன் சகோதரனான காமரான் புத ல்வன் ஒருவன் ராஜதானியில் இருந்தும் யாதோர் சண்டை சச்சரவுமின்றி ஆக்பருக்கே பட்டம்ஆகும்படிசெய்த விவே கியான ராஜவிசுவாசியும் இவன்தான். இவனுக்கும் ஆக்ப ரின் உசாத்துணைவனான பெய்ராம்கானுக்கும் ஒருவர்மேல் ஒருவர்க்கிருந்த பொறாமையால் ஒற்றுமை யில்லாதிருந் தது. டார்டிபெக்கு மகமதியர்க்குள் சுன்னி வகுப்பைச்சா ர்ந்தவனாகவும் பெய்ராம்கான் ஷியா வகுப்பைச் சார்ந்தவனாக வும் இருந்ததனால் இருவர்க்குள்ளுமிருந்த பகைமை அதிக ரிக்க இடமிருந்தது. இவன் (டார்டிபெக்கு) ஹேமுவந்து எதிர்த்தபோது பின்னும்கொஞ்சகாலம் நிர்வகித்துக்கொ ண்டிராமல் டில்லியை அவசரப்பட்டு ஒப்புவித்துவிட்டான் என்று சில அதிபதிகள் இவன்மீது குறைகூறிக்கொண்டிரு ந்தார்கள். வீரமில்லாமை ஒருகுற்றமல்ல. அதை வியாஜ மாகக்கொண்டு அவன் இன்னுயிரைப் பெய்ராம்கான் அழித் தது ஆக்பருக்குச் சிறிதும் பொருந்தவில்லை.

அப்போது ஹேமு தனக்கு நவீனமாகக்கிடைத்த ராஜ பட்டத்தால் ஆனந்தத்தில்மூழ்கிச்சைனியம் சேர்ப்பதில் ஏற்பட்டிருந்தான். ஆயினும் ஆக்பர் சர்கண்டுக்கு வந்துவிட்டான் என்றசெய்தியறிந்ததும் காலாட்படை குதிரைப்படைகளுடன் தான் பின்புசெல்வதாகத்தீர்மானித்துத் தன் துப்பாக்கிமுதலிய ஆயுதப்படைகளைமட்டும் முன்பாகச்செல்லும்படி டில்லிக்கு ஐம்பத்துமூன்றும்யில் தூரத்தினதாகிய பாணிப்பட்டுக்கு அனுப்பினான். அங்கே ஆக்பரும் பாணிப்பட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான். அன்றியும் டார்டிபெக்கோடுகூடி டில்லியில் ஹேமுவுடன் பொருதவனும், அவன் (டார்ட்டிபெக்) ஆத்திரப்பட்டு ஓடிவந்துவிட்டதைக் கடிந்துபேசியவனும் ஆகிய ஆலிகுலிகானீஷேய்பானீஎன்னும் சேனாபதியை பத்தாயிரம் குதிரைவீரருடன் முன்பாகச்செல்லும்படி அனுப்பினான். ஆலிகுலி பாணிப்பட்டுவரை வந்ததும் ஹேமுவின் துப்பாக்கிமுதலியவை தக்க போர்வீரர்களால் பாதுகாக்கப்படாதிருப்பதுகண்டு உடனே மேல்விழுந்து அவைகளைக் கைப்பற்றிக்கொண்டான். ஆயுதங்களைக் கைப்பற்றிய இப்பெருஞ்செயல்பற்றி அவனுக்குக் கான்ஜமான் என்று பட்டம் கிடைத்தது. அவன் இதுமுதல் அப்பெயராலேயே சரித்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றான். அத்துப்பாக்கிகள் துருக்கியிலிருந்துவந்த அருமையானவை ஆதலால் அவற்றை இழந்ததுபற்றி ஹேமு அதிகமாகக்கலங்கினான். ஆயினும் மேலும் தாமதப்பட்டிராமல் பாணிப்பட்டைச் சேர்ந்தான்.

ஆக்பரும் பெய்ராம்கானும் மேனோக்கிச்சென்று 1556 நவம்பர் 5-காலையில் பாணிப்பட்டைச்சார்ந்த வெளிகளண்

டையில் ஹேமுவின்சேனை தங்களைநோக்கிவருவதைக்கண்டார்கள். அதற்கு முப்பதுவருஷங்களுக்குமுன் தன்பாட்டனுகிய பேபர் அதேவெளியிடத்தில் லோடி வம்சத்தவர்களை வீழ்த்தி இந்துஸ்தானத்தின் ஆதிக்கத்தைப்பெற்றனென்பது ஆக்ப ரிளவரசனதுள்ளத்தில் இருந்திருக்கும் என்றெண்ணவேண்டியிருக்கின்றது. தன்பிதாவைத்துரத்திய சர் வம்சத்தோடு விவாகசம்பந்தமுடைய பகைவன்சேனை இப்போது இவனுக்குமுன்னிறுத்தப்பட்டிருக்கின்றது. தத்காலத்திய போரானது அந்நூற்றுண்டின் நிலைத்தபோர் என்பது அவனுக்குத்தெரியும். ஆனல் அவன் எவ்வளவு யூகசாலியாகஇருந்தாலும் அது (அந்தப்போர்) இந்தியாவில் இருநூறு வருஷங்களுக்குமேல்வரை நிலைக்கக்கூடிய இராஜாங்கத்தின் ஸ்தாபனத்துக்குத் தொடக்கமாக முடியுமென்பதாவது பின்பு அட்லாண்டிக்கிலுள்ள தீவிலிருந்து அயல்ஜாதியாரால் ஒருபடையெடுப்பும் இந்தவம்சத்தர்களை (மொகலாயர்களை) அடிப்படுத்த மற்றொருபாணிப்பட்டு யுத்தமும் நிகழவேண்டியிருக்குமென்பதாவது அவன் யூகித்திருக்கமாட்டான்.

ஹேமு தன்சைனியங்களை மூன்றுகப்பிரித்தான். முன்னணியில் யானைகள் ஐந்நூறும் ஒவ்வோர்வீரனை மேலேற்றிக்கொண்டுசென்றன. தானபிமானித்த யானையின்மீது தானும் ஆரோகணித்துக்கொண்டு, தானே சேனதிபதியாக ஏற்பட்டு நடத்திக்கொண்டுபோய் முன்னேக்கி வந்துகொண்டிருந்த மொகலாய சைனியத்தை அதன் இடதுசிறகில் எதிர்த்துக்கலக்கினன். ஆனல் காலாட்படைகளைநடத்திய அதிபதிகள் பெய்ராம் தானே ஆதிபத்தியம்வகித்துநடத்திய காலாட்படையோடு எதிர்த்து நிர்வகிக்கப் பின்வாங்கினதினல் ஹே

மூ தன்படையோடு அங்கே தாவினன். ஹேமூ இவ்வாறு தாவக்கூடும் என்று முன்னமே எதிர்ப்பார்த்திருந்த சேனாதிபதியாகிய பேய்ராம்கான் எதிரிகளின் முகத்தைநோக்கி அஸ்திரப்பிரயோகம் செய்யும்படி தன்சேனைகளுக்குக் கட்டளை கொடுத்தான். அவ்வஸ்திரங்களில் ஒன்று ஹேமூவின்கண்ணைத்துளைத்துவிட்டது. அதனால் ஹேமூ உடனே பிரக்ஞையிழந்து அம்பாரியின்மீதுவிழ்ந்தான். ஹேமூ பிரஜ்ஞையிழந்து விழுந்ததைக்கண்டதும் அவனுடைய சைனியங்கள்கலங்கின. அதனால் தாக்கும்தளர்ந்து பின்போய்த்தது. அதை பேய்ராம்கானின் வீரர்கள்கண்டு அவர்களைச் சிதறடித்தார்கள். ஹேமூ ஏறியிருந்த யானையின்பாகனும் கொலையுண்டு வீழ்ந்தான்.

ஆதலால் அந்த யானை செலுத்துவார் ஒருவருமின்றித் தன்மேல் கிடந்த ஹேமூவுடன் தன் சுபாவத்தின்படி காட்டைநோக்கியோடியது. இவ்வாறு ஓர் யானை ஓர் வீரனுடன்செல்வதை ஓர் மொகலாயவீரன்கண்டு பின்றொடர்ந்து போய்க் கயிற்றைப்பிடித்து நிறுத்திப்பார்த்து மேலிருப்பவன் ஹேமூவென்று கண்டு அவனைக்கொண்டுவந்துப் பேய்ராம்கானிடம் விட்டான். இவன்பெயர் ஷாகுலீமஹ்ராமீபஹார்லு என்பது. இவன் பேய்ராம்கானுக்குத் தூரபந்து. அவனுடைய பரிசனங்களுள் ஒருவன். பின் பேய்ராம்கான் ஹேமூவை, (சேனாதிபத்தியத்தைத் தன்னிடம் விட்டிருந்தாலும் நாண்முழுதும் தைரியத்துடன் பொருத) ஆக்பர் இளவரசனிடம்கொண்டுபோய் இது "உம்முடையமுதற்சிறை; இப்பகைவன்மீது உம்முடையசக்தியின் வன்மையைக்காட்டும்; அது நன்கு மதிக்கப்படத்தக்கது" என்றான். அதற்கு ஆக்பர்

"பிரக்ஞையின்றிப்பிணத்தோடுபிணமாகக்கிடக்கும் இவன் மீது நான் எப்படிக்கைவைக்கலாம்? பிரக்ஞையும் பலமும் இருந்தால் என்கத்தியின் பதம்பார்ப்பேன்" என்றான். இவ்வாறு ஆக்பர் மறுதலித்ததும் பேய்ராம்கான் தானே அச்சிறையை (ஹெமுவை) வெட்டி வீழ்த்தினான்.

பேய்ராம் எதிரிகளை ஓயவிடாமல் துரத்தும்படி தன் குதிரைப்படைக்குக் கட்டளை தந்தனுப்பினான். மொகலாயப்படைகள் எங்குந்தங்காமல் ஒரேயடியாகத்துரத்திக் கொண்டுபோய் ஐம்பத்துமூன்றுமயிலும் கடந்து மறுநாள் டில்லியுட் பிரவேசித்தன. அதன்பின் ஆக்பருக்கு இந்தியாவில் அச்சந்தரும் எதிரிகள் யாவருமில்லை. தன்பாட்டன் முப்பதுவருஷங்களுக்குமுன் வகித்திருந்த நிலைமையை அவன் இப்போது வகித்திருந்தான். தன் தகப்பனையும் பாட்டனையும் போலவே இவனும் ஜயங்கொண்ட அம்மட்டிலேயே திருப்திபடைந்திருந்துவிடுவானா அல்லது தருணத்திற் செய்யவேண்டுவனவற்றையும் சிர்பெறச்செய்வானா என்பது இனிப்பார்க்கவேண்டிய விஷயம்.

அவன் செய்யவேண்டியதாயிருந்த வேலையின் சுபாவத்தை உள்ளபடி காட்டுதற்காக அவன் பிரவேசித்தபோது இந்தியா இருந்த நிலைமையும் பதினன்கே வயதுடைய பையனாக இருந்த ஆக்பர், பேய்ராம்கானின் சிக்ஷையில் எவ்வளவு நன்மையடைந்திருக்கக்கூடும் என்பதையும் இதையடுத்தாற்போல் விசாரிப்போமாக.

ஐந்தாவ ததிகாரம்.

ஆக்பர் சிம்மாசனம் ஏறியபோது இந்தியா இருந்த நிலைமை.

ஆக்பருக்கு முன் வந்த ஆப்கானியர்களால் ஜெயிக்கப்பட்ட, சட்லிஜுக்குத் தெற்கே உள்ள ராஜ்யம் இந்துராஜ்யம் என்றுரைக்கத்தக்க தல்ல. மத்தியமாகாணங்களிலும் இராஜபுட்டானிலும் உள்ள சில ஜில்லாக்களும் வங்காளராஜதானியில் இப்போது மேற்குப்பேகார் என்னப்படுகிறபாகமும் உள்பட (1857 வரை) வடமேற்கு மாகாணங்கள் என்று அழைக்கப்பட்ட அதை(அதற்குப்பஞ்சாபும்உட்பட்டிருந்தது) இந்துராஜ்யம் என்பதைவிட டில்லிராஜ்யம் என்பது நியாயம். ஒரு விஷயத்துக்கு டோக்ளாக் வம்சத்தார் வங்காளத்தின் மீதும் ஏறக்குறையத் தென்னிந்தியா முழுமையின்மீதும் உண்மையாகவே உரிமை பாராட்டலாம்; ஆனால் வடக்கேயிருந்து வந்த முதற் படையெடுப்பானது தெற்கே இருந்த இந்தியமன்னர்களுக்கு அயலாரேற்றிய நுகத்தையகற்றிச் சுயாதீனம்வகித்துவாழத் தருணம் தந்தது. இறக்கியநுகம் மீண்டும் ஏற்றப்படவில்லை. கங்காநதியின் முகத்துவாரத்திலிருந்து கோதாவரியின் முகத்துவாரம் வரையில் வியாபித்திருந்த ராஜ்யமாகிய ஒரிசா எப்போதும் தன் சுயாதீனத்தை இழக்கவில்லை. மேற்கிந்தியாவுங்கூடச் சில காலம் அயலார்துகோலுக்குக்கீழ்ப்படாமலே இருந்தது. அதிலுள்ள சிற்றரசுகள்பல தனித்தனி ராஜ்யமாக ஆகிவிட்டன.

ஆகவே-ஆக்பர் பிரவேசித்தபோது இந்தியாவின் மேற்கேயுள்ள பகுதியாகிய குஜரத்துராஜ்யம் ஆப்கான் ஜாதியைச்

ஆகவே ஆக்பர் பிரவேசித்தபோது இந்தியாவின் மேற்கேயுள்ள பகுதியாகிய குஜராத்துராஜ்யம், ஆப்கான்ஜாதியைச் சார்ந்த ஒரு மகமதியனால் ஆளப்பட்டுவந்தது. அதுமுன் உமாயூன் ஜெயித்துக் கீழ்ப்படுத்திய ராஜ்யமாயினும் அவன் இந்தியாவைவிட்டோடியதும் பழயபடி சுயாதீனராஜ்ய மாகிவிட்டது. பின்பு அதை ஒருவரும் அசைத்தாரில்லை. அதை அடுத்த ராஜ்யமாகிய மால்வா இப்போது மத்திய இந்தியா என்னப்படுகின்ற பகுதியின் பெரும்பாகத்தை யுட்படுத்திக்கொண்டு அதுவும் ஆக்பரின் பிரவேசத்தின்போது சுயாதீன ராஜ்யமாகவே இருந்தது. காண்டேஷும் அப்படியே. ராஜபுட்டானவிலுள்ள தேசங்களும் அப்படித்தான். இந்த ராஜபுட்டானவைப்பற்றிமட்டும் சில விவரம் குறிக்க வேண்டிய தவசியம். பராக்கிரமசாலியான சங்காராணு பேபரால் அடைந்த தோல்வியானது மீவார் ராஜ்யத்தை அதிகமாகப் பாதித்திருந்தது; பின் உமாயூனை ஷேர்ஷா துரத்தியபோது அவனுடைய(ஷேர்ஷாவுடைய) ஆதிபத்தியத்துக்கடங்கி யிருக்கவேண்டியதாக இருந்தது; ஆனால் ஷேர்ஷாவின் மரணத்தின்பின்நேர்ந்த கலவரத்தில் இவர்கள் (மீவார் அதிபதிகள்) பழயபடி தங்கள் சுயாதீனத்தை வகிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆதலால் ஆக்பரின் பிரவேசத்தின்போது மீவார் ராஜ்யம் சுயாதீனமாக இருந்தது. அவர்கள் ராஜபுட்டானவிலுள்ள தேசங்களில் உன்னதபதவியை வகித்துவந்தார்கள். மற்ற தேசங்களைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லப்புகுந்தால் ஜெயப்பூரின் அதிபதிகள் பேபர் காலத்தில் அவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். அப்போது ஆட்சிசெய்துவந்த ராஜாபகார்மா என்பவன் உமாயூன் ஷேர்ஷாவினல் தோற்றோடுவதற்குமுன் அவனுக்குச் (உமாயூனுக்கு)

சைனியத்துணைபுரிந்து உமாயூனால் அம்பர்க்கதிபதி என்ற ராஜாங்கபட்டம் பெற்றிருந்தான். ஆக்பர் புரிந்த பாணிப்பட்டு யுத்தத்தின்போது அந்தப்பகார்மாவின் புதல்வன் பகவந்தாஸ் என்பவன் சிம்ஹாசனத்தில் இருந்தான். அந்த நாட்களில் ஜெயப்பூரைவிட ஜாட்பூர் அதியுன்னத பதவியில் இருந்தது. அதன் அரசனாகிய ராஜா மால்டியோசிங்கு, ஷேர்ஷாவுக்கு மற்ற எதிரிகளைவிட அதிக தொந்தரவு கொடுத்தவன். ஆயினும் உமாயூன் நிலையில்லாதலைந்தபோது அடைக்கலங்கொடுக்க மறுதலித்துவிட்டான். அவன் ஆக்பர் டில்லியின் சிம்மாசனம் ஏறியபோது ராஜபுட்டானாவிலுள்ள மற்றெல்லாவரசர்களையும்விட வல்லமைசாலியும் சுயாதீனமுடையவனுமாகச்சிறந்துவிளங்கினான். ஜெய்சால்மர் பைகானுக்களும் வனாந்தரத்தின் கரையிலுள்ள ராஜ்யங்களும் சுயாதீனராஜ்யங்களாகவே இருந்தன. ராஜபுட்டானாவிலுள்ள சிற்றரசுகளும் அப்படியே. சிந்தும் அப்படியே இருந்தது. முல்தானும் அவ்வாறே. மீவாத்து பாகல்கண்டு இவைகட்கும் அயல் நாட்டதிபதியொருவரும் இல்லை. ஆனால் குவாலியர், ஆர்ச்சா, சந்தரி, நர்வார், பன்னாவோ இவைமட்டும் ஒருவாறு ஆக்ராவுக் குட்பட்டிருந்தன. மகம்மதிய ஜயவீரர்களது ஆட்சிக்குட்பட்ட மாகாணங்களுள்ளும் ஒற்றுமை கிடையாது. ராஜா, சுல்தான், சக்கிரவர்த்தி என்று ஏதாவதொரு பெயர் புனைந்தமன்னன் தன்னைச்சார்ந்த பலவேறு மாகாணங்களின் தலைவர்களாக இருந்த அதிபதிகளின்மீது பேர்க்குமட்டும் ஆதிபத்தியம் வகித்து வந்தான். தன் சொந்தமாகாணத்தில் அதாவது தான் நேரே ஆட்சிபுரியும் மாகாணத்தில் தன்மனம்போனபடி ஆட்சிபுரிவான். யுத்தகளத்துக்குச் சென்றால் அவன் தானே அதிபதியாக இருந்து சேனை

லை நடத்துவான். தன் ஆதிபத்தியத்தின் கீழிருக்கும் பல வேறு மாகாணங்களின் ஆளுகையில் அவன் பிரவேசிப்பதில்லை. ஆதலால் அம்மாகாணங்கள் ஒவ்வொன்றும் பேர்க்கில்லா விட்டாலும் உண்மையில் தன் [illegible] அதிபதியின் கீழ்ச் சுயாதீன மாகாணங்களாகவே இருந்தன.

அம்மாகாணங்களின் குடிகளில் முக்காலேயரைக்காற் பாகமும் இந்துக்கள். இவர்களெல்லாரும் மகமதிய ஆட்சிக்குட்பட்டிருந்தது ஒருவித திருப்தி. மகம்மதியர்கள் அல்லாத புறமதஸ்தர்களுக்கு விதித்த ஜிசியா என்றவரியைச் செலுத்த வேண்டியிருந்தாலும் இந்துக்கள் தங்கள் சொந்த மதாசாரங்களை அனுசரிக்க இடம் பெற்றிருந்தார்கள். ராஜாங்கத்தைச் சார்ந்த எல்லா உத்தியோகங்களிலும் இந்துக்களே அதிகமாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் (இந்துக்கள்) அநேக இடங்களில் அவற்றின் அதிபதிகளின் அதிகாரத்துக் குட்பட்டு ஆதிபத்தியம் நடத்த வம்சபாரம்பரியமான சுதந்தரம் பெற்றிருந்தார்கள். அவர்கள் சில சைனியத்தைப் போஷித்துவைத்திருந்து யுத்தகாலத்தில் தங்கள் தலைவர்கட்கு அவற்றை யுதவுவார்கள்.

ஆகவே அவசியமென்று தோன்றும்போது அதிபதியின் சுவாதீனத்தில் விடத்தக்கதாக ஒவ்வொரு மாகாணத்திலும் அதனைச்சார்ந்த சைனியமுண்டென்றுகின்றது. இதையல்லாமல் இதனோடு எவ்வித சம்பந்தமுமின்றி ஒவ்வொருமாகாணத்திலும் சில ராஜசைனியங்களுமுண்டு; அதாவது அவைகளுக்குச் சூல்தான் சம்பளம்கொடுப்பான். சூல்தானால் நியமிக்கப்பட்ட ஒருவன் அவற்றை நடத்துவான்.

அச்சேனாதிபதி அவ்வம்மாகாணங்களின் அதிபதிக்குட்படாமல் நேரே ஸுல்தானுக்குட்பட்டவனாக இருப்பான்.

மகமதிய கொள்கையின்படி ஆட்சி, சட்டத்தின் சார்புடையதாகச் செலுத்தப்பட்டுவந்ததாகக் கருதப்பட்டிருந்தது. கோரானை ஆதாரமாகக்கொண்டு தேசாசாரத்துக்கேற்ப ஒழுங்காக்கப்பட்ட தீர்மானங்களின் பயனான சட்டத்திற்கிசையக் காஜீ அல்லது நியாயாதிபதியினால் நியாயம் நடத்தப்பட்டுவந்தது. சிவில் விவகாரங்களைக் காஜீ முடிவுசெய்வான். ஆனால் கிரிமினல் வழக்குகள் சக்கிரவர்த்தியினால் நியமிக்கப்பட்டு அவனால் அபிமானிக்கப்பட்டுவந்தவர்களான ஒருகூட்டத்தாரால் முடிவுசெய்யப்பட்டுவந்தன. இவர்கள் சிலசமயங்களில் காஜீயின் அதிகாரத்தினின்று விலகியும் இருப்பார்கள். வழக்குகளைத் தீர்மானிப்பதில் அவர்கள் மேற்கொண்டுவந்த நடவடிக்கையின் ஒழுங்குவிஷயத்தில் ஏற்பாடு ஒன்றும் இருந்திருக்கவில்லை; அதாவது இன்ன சந்தர்ப்பத்தில் இன்னவாறு ஒழுகவேண்டுமென்று ஓர் ஏற்பாடு இருக்கவில்லை. ஆயினும் மொத்தத்தில் நியாயம் திருப்திகரமாக நடத்தப்பட்டதென்று சொல்லுவதிலேயே எல்லாருக்கும் எண்ணமிருந்தது. காலமானது இந்துக்களுக்கும் இந்தியாவில் பூர்வத்தில் குடியேறிய மகமதியர்களுக்கும் லாபநஷ்டங்ளில் பொதுவான அக்கரையை உண்டாக்கியது; ஆதலின் சட்டம் சாத்தியமான அளவுக்குத் தங்களுக்குப் பாதுகாப்பைக் கொடுக்கும்படி எதிர்பார்ப்பதில் இருதிறத்தாரும் ஒருதிறத்தாராகவே இருந்தார்கள். அப்போது எத்தனையோ சண்டைகளும் சச்சரவுகளும் தேசத்தில் நடந்தாலும் தேசத்தின் பொதுநிலைமை (சுதேசசாஸனங்களின்படி) செழிப்பென்றே சொல்லவேண்டும்.

இனி முன்ஜயித்திழந்து மீண்டும் ஜயிக்கப்பட்ட ராஜமானது 1556 இறுதியில், ஆதிமுதற்கொண்டே கஷ்டநஷ்டங்களிலெல்லாம் அடிபட்டவனான (பதினாலாண்டும் ஒரு மாதமும் சென்ற) இளவரசன் கையிலிருந்தது. பாணிப்பட்டு அவனுக்கு இந்தியாவைத்தந்தது. ஆனால் தேசத்தையெல்லாம் ஒன்றாகக்கட்டியாளுந்திறத்தைக் கைக்கொண்டால்தான் அது நிலைக்கும். ஆட்சியின் கீழ் உள்ள ஒவ்வொருமாகாணங்களிலும் ஒவ்வொரு நகரங்களிலும் பொதுவாக ஒரேவிதமாகவும் அதுவும் பலவேறிடங்களிலுமிருக்கும் பலவேறு வகையான குடிகளின் தேசாசார மதாசாரங்களைப் பாதியாத தன்மையதாகவும் இருக்கும் ஏற்பாட்டைத் தெரிந்தெடுப்பதும் அதை நடவடிக்கைக்குக் கொண்டுவருவதும் என்றால் அதிக கஷ்டமானவேலைதான். அது அவன் பாட்டன் ஒருபோதும் முயற்சிக்காத விஷயம். அவன்தகப்பனுக்கோ எனில் தனக்கே தோன்றினாலும்சரி யாராவது காட்டினாலும்சரி அவனுக்கு அது அசாத்தியமானகாரியம். அவர்களுடைய ஏற்பாடுகளில் இவ்வித ஒழுங்கு இல்லாமையால் தான் முன்சென்ற கஜனிவைட், கோர், கில்ஜி, டோக்ளாக், சையத், லோடி வம்சஸ்தர்களுடைய ஆட்சிகள்போலவே இவர்கள் ராஜ்யமும் நிலைத்திராதழிந்தொழியநேர்ந்தது என்பது, பேபரால் ஸ்தாபிக்கலான ராஜ்யம் அவன்மகன் காலத்திலேயே ஷேர்ஷாவின் எதிர்ப்பின்போது காலைவாங்கிக் கொண்டதினால் பட்டப்பகல் வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றது. அவன் (ஆக்பர்) இளைஞனாக இருந்தாலும் காரியங்கள் அநேகம் தெரிந்திருந்தான். முன் அவன்தகப்பன் அடிக்கடி அவனை ஆலோசனை கேட்பான். அக்காலத்தில் முதன்மையாக இருந்த பெய்ராமுக்குக் கீழிருந்து ராணுவப்பயிற்சி

யில் நன்றாகத் தேர்ந்திருந்தான். ஆறுமாதங்களுக் கதிகமாகவே பஞ்சாபில் ஆட்சியும் புரிந்திருந்தான்; ஆனால் ஆட்சிபுரிபவனாகவும் ஜயசாலியாகவும் இருப்பதில் அவன் தகுதி எப்படி என்பதை நாம் கவனிக்கவேண்டியது. ஆனால் அந்தவிஷயத்தில் அவன் தந்தையின் முன்மாதிரியாவது பெய்ராமின் சிக்ஷையாவது அவனுக்குதவமுடியாது. கஷ்டங்கள் நேரும்போது இரக்கம்பொருந்திய மனமுடையவனாக அவற்றை உடனே நிர்வகித்து முடிவுசெய்யும் ஆற்றல் அவனில் அங்குரித்திருந்தன என்பது தெரிந்தவிஷயம். ஹேமுவைக்கொல்ல மறுதலித்துவிட்டான். ஆனால் அவன் இப்போது செய்யவேண்டியதாக இருக்கும் வேலைக்கு அதுமட்டுமேபோதாது; வேறுகுணங்களும் வேண்டும். மற்ற காரியங்களால் நமக்குவெளியாகும் விஷயங்களைக்கொண்டு அந்த வேலைக்கு அவனிடத்துள்ள லக்ஷணங்கள் எவை என்று பார்ப்போம்.

முதலாவது அவனுடைய வெளித்தோற்றம். "ஆக்பர் நடுத்தரமான வளர்த்தியுடையவன். நிறம் சிவப்பல்ல; மாநிறமாக இருப்பான். புருவமும் கண்ணும் கறுப்பாக இருக்கும். நெற்றியும் மார்பும் அகன்றிருக்கும். தேகம் புஷ்டியாக இருக்கும். கையும் காலும் நீண்டிருக்கும். அவனுடைய மூக்கின் இடதுபக்கத்தில் ஒரு சிறுகடலை யளவுமரு வளர்ந்திருக்கும். அது பார்ப்பதற்கு மிக அழகாகவே தோற்றும். சாமுத்திரிகாலக்ஷண சாஸ்திரிகள் அதிருப்பது அளவற்ற ஐசுவரியத்துக்கும் அழியா வாழ்விற்கும் ஏதுவென்று கருதினார்கள். அவனுடைய தொனி உரத்ததாக இருக்கும். அவனுடைய பேச்சுக் கம்பீரமாகவும் இனிமையாக

வும் இருக்கும். அவனுடைய நடையுடை பாவனைகளெல்
லாம் மற்றவர்களுடையவைகளிலிருந்து தனியே வேறுவி
தமானவையாக இருக்கும். அவனுடைய தோற்றம் தெய்
வாம்சத்தோடு கூடியதாகவே காணப்படும்” என்று அவன்
மகன் ஜகாங்கீர் சக்கிரவர்த்தி கூறுகின்றான். இவ்விவரம் சரி
என்பதை வேறு ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.
“மனோரம்மியமான தோற்றத்துடன் கண்டோரைக் கவரத்
தக்க நடையுடை பாவனைகளையுடைய அழகான திடதேக
முடையவன். இயல்பிலேயே அதிக தைரியசாலி” என்று
இவனைப்பற்றி எல்பின்ஸ்டோன் என்பவர் எழுதுகின்றார்.
அவன் அலைச்சலுக்குப் பின்வாங்கமாட்டான், குதிரைச
வாரிசெய்வது, நடப்பது, சுடுவது, வேட்டையாடுவது முத
லாகப் புத்தியும் பலமும் வேண்டிய எல்லா அப்பியாசங்க
ளிலும் அதிக விருப்பமுடையவன். அவனுடைய தைரியமா
னது கலங்காத நிலையுடையது. அதிலும் சங்கடமும் அபாய
மும் நேரிடும்போது நன்றாய்ப் பிரகாசிக்கத்தக்கதாக இரு
ந்தது. முக்கியமாக இராஜாங்கத்தின் க்ஷேமத்துக் கின்றி
யமையாதது என்று காணும் விஷயங்களுக்காகவும் பொது
நலத்துக்காகவும் சண்டைசெய்ய அவன் ஆயத்தமாக இருந்
தாலும் போரில் மகிழ்ச்சி கொண்டதில்லை. ஆதலின் போர்
என்பது, இன்றியமையாத—அதாவது முடிப்பதையேயன்றி
வேறு போக்கில்லாத—ஒருதீமை என்பதே அவன் கருத்து.
நீதியின் பாதுகாப்பிற்கும் அதைநிறைவேற்றுதற்கும் அவ
சியம் என்று கண்டபோதேயன்றி அவன் தன் ஆயுள்முழு
தும் ஒரு சண்டையும் செய்ததில்லை என்பதை நாம் இனிக்
காணலாம். அவன் மிகஅன்பான குணமுடையவன். நண்பர்
களுககுண்மையாக நடப்பவன். அயலார்தன்னை நேசிக்கு

மாறு செய்துகொள்ளுவான். இரத்தம் சிந்துதலில் வெறுப்புடையவன். இரக்கத்தோடு நியாயஞ்செலுத்த ஆவலுடையவன். பழிவாங்குதலினும்பார்க்க மன்னிப்பிலேயே விருப்பமுடையவன். ஆனால் பழிவாங்குதல் இன்றியமையாததாக நேரும்போது தன் தயாளசிந்தையைக் காடின்னியமாக்கிக்கொள்ளக்கூடியவன். பெருந்தன்மையான இதயமுடையமற்றவர்களைப்போலவே இவனும் மற்றவர்களுடைய மகிழ்ச்சிக்குச்சாதனமாக எதையும்புரிய மனதுடையவன். தயாளத்துவமானது, அவனுக்குச்சுபாவகுணங்களுள் ஒன்று. ஆதலால் தன்னால் சகாயம் பெற்றவன் அனருகன் என்று தெரியவந்தாலும் "இத்தகுதியற்றவனுக்கேன் உதவினேம்" என்று வருந்தாமல் அவனை அதற்கேற்ற தகுதியுடையவனாகச் சீர்திருத்துவதிலேயே அவனுக்கு ஆசையதிகம். எந்தக்காலத்திலும் எல்லாவிஷயங்களினும்பார்க்க மனிதர்களை விசேஷமாகப்பாதித்ததும் இப்போதும் பாதிப்பதும் ஆகிய மதவிஷயங்களும் தேசாசாரங்களும் நியாய நடவடிக்கைகளும் ஆகியவைகளில் அவன் எப்போதும் யாதொரு விருப்பு வெறுப்புமின்றிப் பிறர்கருத்துக்களை ஏற்கும் ஆவலோடு நிஷ்களங்கமனதுடையவனாக இருந்தான். இவன் மகமதியனாகவே பிறந்து வளர்ந்து வந்திருந்தாலும் இந்துமதத்தர், பவுத்தர், ஜோராஸ்த்தமதத்தர், கிறிஸ்தவர் என்ற இவர்களெல்லாரையும் சமத்துவகவுரவத்துடனேயே நடத்திவந்தான். இவன் தன் பிற்காலத்தில் ஞானிகளை வெறுத்தான் என்றும் சிலசமயங்களில் அவர்களைத்தன் சமஸ்தானத்தினின்றும் துரத்திவிட்டான் என்றும் சிலர் குறைகூறினார்கள். அந்த விஷயத்தில் அப்படிச்சொல்லுவதைவிட அவன் தன் சமஸ்தானத்தில் அடிக்கடி வந்துகொண்டிருந்த

வித்துவான்களின் மூடபக்தியையும் துரபிமானத்தையும் தாங்கள் அறிந்ததே பெரிதாகப்பிடிக்கும் மூர்க்கத்தனத்தையுமே வெறுத்தான் என்று சொல்லுவதுதான் நியாயம். அவன் அவர்களிடத்துள்ள அறியாமையையும் துவேஷத்தையும் வெறுத்தான். எவர்களிடத்தாவது அளைவரம்பு கடந்திருப்பதாகக்கண்டால் அவர்களைத் தன் சமஸ்தானத்துக்கு வரவொட்டாமல் செய்தான். அவன் மற்றவிஷயங்களில் எப்படியிருந்தான் என்பது இதைப்படிப்பவர்களுக்கு இறுதியதிகாரத்தால் விளங்கும். இதுகாறுங்கூறியவற்றால் பதினாலே வயதுடையனாக இருந்தும் பாணிப்பட்டில் ஜயித்தவுடன் எங்கும் தங்காமல் ஒரே அடியாக டில்லிக்குச்சென்ற இளவரசனுடைய யோக்கியதை இன்னதென்பது நன்கு விளங்கும். அவனுடைய சுபாவம் இன்னதென்பது அப்போது சூழ இருந்தவர்களுள் சிலர்க்குத்தான் ஒருவேளை தெரிந்திருக்கும். அவனுடைய போதகனாகிய பெய்ராம்கானுக்கு அவன் சுபாவம் இன்னதென்று தெரியாதென்பது நிச்சயம். தெரிந்திருந்தால் சர்கண்டில் டார்டிபெக்கைத் தன்கூடாரத்தில் அழைத்துக் கொலைசெய்யவுமாட்டான். பிடியுண்ட ஹெமுவின்மேல் கத்திவைக்கும்படி இளவரசனைக் கேட்கவும்மாட்டான். ஆனால் பெய்ராம்கானும் சமஸ்தானத்தைச்சார்ந்த அதிபதிகளும் சைனியங்களும் நெடுநாள் அந்தகாரத்தில் இருக்கவில்லை. உமாயூனுடைய புதல்வனாகிய இளவரசன் தங்களையடக்கியாளவல்ல தலைவனென்றுந்தாங்கள் நிர்வகித்துச்செல்லக்கூடிய பையனல்ல என்பதைச் சீக்கிரத்திலேயே தெரிந்துகொண்டார்கள்.

ஆக்பர் ஒருமாதம் டில்லியில் தங்கி இருந்தான். அங்கிருந்து ஹேமுவின் சிதைந்த சைனியத்தைப் பின்பற்றிப் போய் அவர்கள் கையிலிருந்த பெரும்பொக்கிஷத்தைக் கைப்பற்றுதற்காக ஷேர்வானைச்சார்ந்த பீர்மகம்மத்கான் என்னும் அதிபதியின்கீழ் ஓர் படையை அனுப்பினான். அச்சேனாதிபதி அப்படையெடுப்பில் விசேஷித்த ஜயம்பெற்றான். பின்பு ஆக்பர் ஆக்ராவைநோக்கிப்போய் அதைக்கைப்பற்றிக்கொண்டான்.

பஞ்சாப்புப்பத்திரப்பட்டால்ஒழியச் சட்லீஜுக்குத்தெற்கே ஆக்பர் அடைந்தவெற்றிக்கு க்ஷேமமில்லை. அவன் முன் மான்கோட்டிலிருந்து திரும்பிவிட நேர்ந்ததும் சிக்கந்தர் ஷா என்னும் எதிரியைத் திரும்பியோடும்படி துரத்தியிருந்தாலும் அவனைப்பிடித்து வழிக்குக்கொண்டுவரவில்லையென்பதும் நாம் முன்னமே கண்டவிஷயம். ஆக்பர் பஞ்சாப்பில்விட்டுவந்த சைனியத்தைச் சிக்கந்தர் லாகூருக்கு ஏறக்குறைய நாற்பதுமயில் தூரத்தில் முறியடித்துவிட்டான் என்று அடுத்தவருஷம் (1557) மார்ச்சுமாதத்தில் செய்தி வந்தது. "விஷயம் அதிக கேடாக இருக்கின்றது. சிக்கந்தர் மான்கோட்டில் வேரூன்றி விட்டான். அவன் அங்கிருந்து ஒருவேளை உம்முடைய தேசத்தின்மீது பாயினும் பாய்வான். அவன் முன்னே யுத்தகளத்தில் தோற்றோடியிருப்பினும் பின்னுண்டான வெற்றியால் அவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் தைரியம் வந்திருக்கின்றது." என்று பஞ்சாப்பிலிருந்துவந்த அவன் (ஆக்பரின்) அதிபதிகள் அவனிடம் கூறினார்கள். ஆக்பர் அதைக்கேட்டவுடன் விஷயத்தின் சுபாவத்தை உள்ளபடியறிந்து "செய்வன திருந்

தர்செய்" என்னும் தன் ஆட்சியின் கட்டளையைப் பின்பற்றத் துணிந்தான். அப்படியே படையெடுத்துப் புறப்பட்டு நேரே லாகூருக்குப் போய் அது பத்திரமாக இருப்பதை அறிந்துகொண்டு அங்கிருந்து ஜாலந்தருக்குப் போனான். அங்கே இருந்த அவனுடைய எதிரி ஆக்பர் அங்கே போனவுடன் சிவாலிக்மலைத்தொடர்களை நோக்கியோடி மான்கோட்டுக்குட் புகுந்துகொண்டான். ஆக்பரும் பின்தொடர்ந்து போய் மானேகோட்டை முற்றுகைபோட்டான். முற்றுகை ஆறுமாதவரை இருந்தது. பின்பு சிக்கந்தர் பஞ்சத்தாலும் பலர் தன்னைக் கைவிட்டகன்றமையாலும் மெலிவெய்திச் சமாதான உடன்படிக்கை செய்யும்படி தன் காரியஸ்தர் சிலரை ஆக்பரிடம் அனுப்பினான். அவர்கள்வந்து "சிக்கந்தர் இனிமேல் ஒருபோதும் சக்கிரவர்த்திக்கு விரோதமாகப் போர்செய்வதில்லை. அதற்குப் பிணையாகத் தன் மகனைச் சக்கிரவர்த்தியிடம் ஒப்புவித்துவிடுகிறான். அவனை வங்காளத்துக்குப் போகும்படி விட்டுவிடவேண்டும்" என்று உடன்படிக்கைசெய்தார்கள். அதற்கு ஆக்பர் இசைந்தான். பின்பு கோட்டை ஆக்பருக் கொப்புவிக்கப்பட்டது. ஆக்பர் லாகூருக்குத்திரும்பினான். அம்மாகாணத்தின் காரியங்களைச் சீர்படுத்துதற்காக அங்கே நாலைமாதந்தங்கினான். பின்பு டில்லியை நோக்கிப் புறப்பட்டான். அவன் ஜாலந்தரில் தங்கியபோது பெய்ராம்கான் உமாயூனின் சகோதரிமகளொருத்தியை மணம்புரிந்தான். இவ்விவாகம் முன்பே உமாயூனால் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இவ்விஷயங்களிலெல்லாம் இளவரசனுக்குத் தன் தந்தைவாக்கியம் தர்மசாஸ்திரமாக இருந்தது. 1558 மார்ச்சு 15 ல் ஆக்பர் டில்லிக்குத் திரும்பவந்து சேர்ந்தான். அதையடுத்த 1558, 59 ஆகிய இரண்டுவருஷங்

களிலும் அக்பர் பேருக்கரசனாக இருந்தாலும் இன்னும் பெய்ராம்கான்தான் அரசனுக்குப் போதகனும் உசாத்துணைவனுமாக இருந்து ராஜ காரியங்களையெல்லாம் நடத்திவந்தான். தனக்குத் தொழில்கற்பித்த அதிபதியின் ஆதிக்கத்தைச் சடிதியில் அகற்றுவதென்றால் அது சாதாரண காரியமல்ல. அக்பரின்பேரால் அவன்போதகன் செய்யும் காரியங்களுட்பல அவனுக்கு இஷ்டவிரோதமானவையாக இருந்தாலும் நுகத்தையகற்றுவதில் அவன் (அக்பர்) தைரியம் கொள்ளாதிருக்கவும் கூடும். அக்பருக்கு வேண்டியவர்களாக இருந்த, (ஆனால் காரணமின்றிப் பெய்ராமின்பகையைத் தேடிக்கொண்ட) சிலரை அவன் அகற்றியது அக்பருக்கு, தன் இஷ்டமே சட்டமாக நடந்த பெய்ராம்கானிடத்தில் இருந்த அபிமானத்தைக் குறைக்கத் தொடங்கியது. இவ்வபிமானக் குறைவு நாளுக்குநாள் விரைந்து அதிகரித்தது. தன் எஜமானாகிய அக்பரின் குணாதிசயங்கள் வருஷந்தோறும் விருத்தியாகிக் கொண்டுவந்தமை பெய்ராமுக்குத்தெரியாது. அதாவது ஈசுவரனால் கொடுக்கப்பட்ட இயற்கைநலத்தோடு காரியாதிகளில் அனுபவமும் அறிவும் அதிகரித்துக் கொண்டுவந்தன என்பதை அவன் (பெய்ராம்) அறியாதிருந்தான். தான் யாருக்குப்போதகனாகஇருந்தானோ, யாருடைய சேனைகளை ஜயத்தின்பொருட்டு நடத்தினானோ, யாருடைய ராஜ்யத்தில் தான் ஆட்சிபுரிந்துவந்தானோ, அந்தப்பையனென்றே அக்பரை இன்னும் எண்ணியிருந்தான்.

இளவரசனது அதிகாரத்தை வேறியாரேனும் செலுத்தினால் அது தங்களுக்கும் இளவரசனுக்கும் கேட்டுக்கேது

வான தீங்கென்று கருதும் மனிதர்கள் அவ்விளவரசனைச்
சூழ இருப்பது எங்கும் வழக்கம். அவ்வகை மனிதர்களு
டைய உத்தேசம் என்ன என்பதை ஆராயவேண்டுவது அ
நாவசியம். அவர்கள் அடிக்கடி சுயநலங் கருதியும் சில
சமயங்களில் அருமையாகச் சுயநலங்கருதாமலும் ஏதோ
ஒன்று அல்லது மற்றகாரணத்துக்காக இளயனும் இராஜ
யத்துக்குச் சரியான அதிபனும் ஆகிய அரசனை நேரே அதி
காரம் கைக்கொள்ளும்படி உபதேசிப்பார்கள். ஆக்பர் மன்
னனைச் சூழ்ந்தும் அத்தகைய மனிதர்பலர் இருந்தார்கள்.
அவர்கள்யார்? பெய்ராமால் துன்பமடைந்தவர்களும், அவனி
டத்திலிருந்து எதிர்பார்க்க முடியாத நன்மைசிலவற்றை
ஆக்பரிடத்திலிருந் தெதிர்பார்த்தவர்களுந்தான் அவர்கள்
என்பது நிச்சயம். இவ்விஷயத்தில் பெண்களுடைய ஏவுத
லும் கூட விருந்தது. அவன்தொட்டிலிலிருந்த நாள்முதல்
ராஜ்யப்பிரவேசம் செய்ததற்குப் பின்வரை அவனுடைய
வளர்ப்பில் ஏற்பட்டிருந்தவளும் பிற்காலத்தில் அவனு
டைய அந்தப்புரத்தின் ஆதிக்கம் வகித்தவளும் ஆகிய அவ
னது செவிலி அரசாட்சியை ஆக்பர் தானே கைக்கொண்டு
நடத்தக் காலம்வந்துவிட்டதென்று சொன்னாள். ஆக்பருக்
கும் அதிருப்தியில்லாமற் போகவில்லை. அப்போது அவ
னுக்குப் பதினெட்டாவது வயது நடப்பாக இருந்தது.
பாணிப்பட்டு யுத்தத்தில் தன் பிதாவின் பிதிரார்ஜிதத்தில்
ஒருபகுதிகிடைத்து நான்கு வருஷமாகின்றது. இந்த நா
ன்கு வருஷமும் தன் இயற்கைக்குணங்களை விருத்தியாக்கி
யிருக்கின்றான். ஆனால் தன் பிரதானமந்திரியாகிய பெய்ராம்
கானில் அடிக்கடி காணப்படுங் கொடுங்கோன்மையையும்
இட்டதுசட்டமான ஆட்சியையும் குரூரத்தையும் தான்

வெறுத்திருந்தாலும் தன் சைசவம்முதல் போதகனுக இருந்த ஒருவனிடத்தில் தயாள சிந்தையில் இயற்கையாக உண்டாகத்தக்க மரியாதையை இவன் பெய்ராம்விஷயத்தில் பாராட்டி வந்தான். பெய்ராம் விஷயத்தில் அவனுக்கிருந்த அனுபவமானது பெய்ராமைப் பற்றறத்தொலைத்தாலன்றி நன்மையிராதென்பதை யுணர்த்தியது. பெய்ராமுக்குக் கொடுத்தால் எல்லா அதிகாரத்தையும் கொடுக்க வேண்டும் இல்லையேல் ஒரு அதிகாரமும் கொடுக்கக்கூடாதென்பதும் அற்பாதிகாரமாவது அவனிடம்விட்டால் அது ஆபத்திற்கிடமாகும் என்பதும் ஆக்பருக்குத்தெரியும்.

ராஜ்யசூத்திரத்தைத் தன்கையிலேயே பிடிக்கவேண்டும் என்று தீர்மானிக்கத்தக்கதாக அநேக சம்பவங்கள் 1560 ம் வருஷாரம்பத்தில் நிகழ்ந்தன. ஆதலின் தன் அமைச்சனிடத்தில் இதை அறிவிக்கும்பொருட்டு ஆக்ராவிலிருந்து டில்லிக்குச் சென்றுன். பெய்ராம்கான் தன் இஷ்டத்துக்கு விரோதமான அதிபதியை அகற்றும்விதத்துக்கு உதாரணம் ஒருமுறைக்கதிகமாகவே காட்டியிருக்கிறுன். ஈட்டி அல்லது கத்தியைக்கொண்டகற்றுதல்தான் அவன் கைக்கொண்டமுறை. ஆனல் அது இளவரசனது களங்கமற்ற மனத்துக் கருவருப்பானது. அவ்விதமான ஆலோசனையை இளவரசனிடம் எவரும் சொல்லவும் துணியார்கள். அவனுடைய தாயும் செவிலியும் பெய்ராமை மேக்காவுக்கனுப்பிவிடுவது அவனை மரியாதைக்குறைவின்றி யகற்றத்தக்க வழி என்று ஆலோசனைசொன்னூர்கள். பெய்ராமும் தான் இந்த ராஜ்யபாரங்களை மற்றவர்களிடத்து ஒப்புவித்துவிட்டுத் தனக்குக் கதிகிடைக்குமாறு மேக்காவுக்கு யாத்திரை

போகத் தருணம்பார்த்துக் கொண்டிருப்பதாகப் பலமுறைகளில் பகிரங்கமாகச் சொல்லியிருந்தான். ஆக்பர் பின்பு ஆபத்சண்டை யுண்டாகாதிருக்கவேண்டும் என்று அவனுடையவனாக டில்லியைச்சேர்ந்ததும் தானே, இராஜ்யாதிகாரத்தை நேரேகைக்கொண்டு நடத்தத்தொடங்கியிருப்பதால் "யாரும் இனித் தன்னுடையதற்கேயன்றி வேறுயாருடைய கட்டளைக்கும் கீழ்ப்படியவேண்டியதில்லை" என்று பகிரங்கப்படுத்தினான். இதைப்பற்றித் தன்மந்திரியாகிய பெய்ராம்கானுக் கெழுதினான். அத்திருமுகவாசகமாவது "நான் உம்முடைய நாணயத்திலும் இராஜவிசுவாசத்திலும் முழுநம்பிக்கை யுடையவனாக ராஜ்யத்தின் முக்கியமான விஷயங்களையெல்லாம் உம்மிடத்திலேயே ஒப்புவித்துவிட்டு என்சொந்தநலத்தைப் பற்றிமட்டும் பார்த்துக்கொண்டிருந்தேன். இனி ராஜ்யாதிகாரத்தை நானே கைக்கொள்ளுவதாகத் தீர்மானித்துவிட்டேன். நீர் நெடுநாளாக நினைத்துக்கொண்டிருந்தபடி மெக்காயாத்திரையை இப்போது கைக்கொள்ளவேண்டும் என்பதாக விரும்பப்படுகின்றது. இந்துஸ்தானத்தின் பர்கானாக்களிலிருந்து ஒரு தக்க ஜாகீர் உம்முடைய போஷணைக்காக விடப்படும். அதன் இறைப்பணத்தை உம்முடைய காரியஸ்தர்கள்மூலமாக நீர் பெற்றுக்கொள்ளலாம்" என்பதுதான். இத்திருமுகம் கிடைப்பதற்குமுன்பே பெய்ராம்கான் ஆக்பரின் தீர்மானத்தையறிந்து ஆக்ராவை விட்டு மேற்குக்கரையை நோக்கிப் புறப்பட்டான். ஆக்பரின் தீர்மானத்தைத் தெரிந்ததுமுதல் அவன் அதிககோபமுடையவனாக விருந்தான். அவன் மனம் தீங்கிழைப்பதில் கவிந்திருந்தது. ஆநமீன் பியானாவைச்சார்ந்ததும் அங்கே சிறைபட்டிருந்த கலகக்காரர்களான அதிபதிகள் சில

[illegible]லசெய்தான். ஆக்பரின் திருமுகத்தை அங்கே [illegible]ன்; பின்னும் தன் பிரயாணத்தை நிறுத்தாமற் [illegible] இனத்தாரான அதிபதிகளும் அவர்கள்பரிவாரங்களும் மட்டும் தன்னைச்சூழ்ந்துவர ராஜபுட்டாணுவிலுள்ள நாகூருக்குச் சென்றான். அங்கிருந்து தான் ஆக்பரின் விருப்பத்திற் கிணங்கியதற் கடையாளமாகத் தனதுகொடி, முரசு முதலிய ஆதிபத்தியத்திற் கடையாளமான விருதுகளையெல்லாம் தன்னுடனிருந்த அதிபதிகளுள் ஒருவன் மூலமாக ஆக்பருக்கு அனுப்பினான். பெய்ராம்கான் பஞ்சாபைத் தனக்கு விரோதமாகக் கிளப்புவான் என்று உறுதிகொண்டிருந்த ஆக்பர் அம்மாகாணத்தை நோக்கி ஒருபடையுடன் வந்து கொண்டிருந்தான். பெய்ராம் அனுப்பிய பிருதுகளை எல்லாம் ரோடக் ஜில்லாவிலுள்ள ஜாஜாரில் பெற்று அவற்றை, முன் பெய்ராமைச்சார்ந்தவனாக இருந்து பின் சிலகாலமாக அவனோடு மாறுகொண்டொழுகிய ஒரு கனவானுக்கு உதவி அவனை, 'நீ உன் முன் எஜமானை (பெய்ராமை) த்தொடர்ந்து பற்றி மேக்காவுக்கு வழியேற்றிவா' என்று கட்டளையிட்டனுப்பினான். இதில் பெய்ராம் அதிக கோபமுடையவனாகி பைகானருக்கு விரைந்துபோய்த் தனது தத்துப்புத்திரன் வசத்தில் தனது குடும்பத்தை விட்டுவிட்டுக் கலகத்துக்காரம்பித்து விட்டான். மொகலாய சக்கிரவர்த்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரனை பிரதான அதிகாரியாக இருத்தலுக்கும் அச்சக்கிரவர்த்திக்கு விரோதமாகக் கலகக்காரனாக இருத்தலுக்கும் உள்ள வித்தியாசமான நிலைமை இன்னதென்பதை அவன் இனிமேற்றான் அறிந்துகொள்ள வேண்டியவனாக இருந்தான். தன் தத்துப்புத்திரன் தனக்கு உண்மையாக இராமல் புரண்டு தனக்கு வி

ரோதமாகக் கிளம்பிவிட்டான் என்ற செய்தி அவனுக்கு அவன் டிப்பல்பூர் சேர்ந்ததும் தெரியவந்தது. ஆயினும் ஜாலாந்தர்கூடலைக் கிளப்புவதாகத் தீர்மானித்து அந்தப்பி சித்தமான பிரதேசத்தை நோக்கிச் சென்றான். பெய்ராம் அந்த எல்லையைச்சேர்ந்தானோ இல்லையோ அவனைப் பஞ்சாப்பின் அதிபதி அட்ஜாகான் படையோடுவந்து எதிர்த்துப் போர்க்காரம்பித்தான். அதில் பெய்ராம் தோற்று ஹாடியானுவுக்கு மேற்கே முப்பதுமயில் தூரத்தினதாகிய தில்வாராவுக்கோடினான். தன் காரியஸ்தனால் தோற்புண்டோடிய பெய்ராமைத் தொடர்ந்துசென்ற ஆக்பர் அதிகமாக நெருக்கினதினால் பெய்ராம் (தனக்கு வேறு போக்கொன்றுமின்மையின்) தன்னை ரக்ஷிக்கும்படி அவனடியில் வீழ்ந்தான். ஆக்பரும் தனக்கு அவன் முன் செய்திருந்த நலங்கள் பலவற்றையுங் கருதி அவனை மன்னித்துப் பெருந்தொகைப்பொருள் கொடுத்து மெக்காவுக்குப் போகும்படி அவனைப் பயணப்படுத்தி யனுப்பினான். பெய்ராம் க்ஷேமமாகக் குஜராத்தைச் சேர்ந்தான். அதன் அதிபதி அவனை அன்போடேற்றுபசரித்தான். பின் இந்தியாவைவிட்டுப் போக ஆயத்தம்செய்துகொண்டிருக்கையில் ஒருலோகானி யாப்கானியனால் கொலையுண்டான். அவன் இவனைக் கொல்லுதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. அவனுடைய தகப்பனை மாச்சிவாரா யுத்தத்தில் பெய்ராம் கொன்றதற்காகப் பழிவாங்கும் பொருட்டே இக்காரியம் செய்தானும். அவன் ஒரு பெரிய ஈட்டிகொண்டு முதுகிலிருந்து நெஞ்சைப் பிளந்துகொண்டு போகும்படி குத்தப் பெய்ராம் ‘அல்லாகு ஆக்பர்’ (கடவுள் பெரியவர்) என்று சொல்லிக்கொண்டு உயிர்விட்டானும். பெய்ராமை வழியனுப்பிவிட்டுத்

திரும்பிய ஆக்பர் உடனே (1560 நவம்பர் 9 ல்) டில்லியை வந்து சேர்ந்தான். அங்கு சிலநாள்வரைத்தங்கிப் பின் ஆக்ராவுக்குப் போய் அங்கே தான் ஜெயித்த தேசங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரே விதமான ஆட்சி செல்லும் ராஜ்யமாக ஆக்குதற்குத் தான் நினைத்த ஏற்பாடுகளைச் செய்வதற்காகப் புறப்பட்டான். உண்மையில் எஜமானாகவே இருந்த மந்திரியின் உதவியின்றித் தானே தனியாக இருந்து புரிந்த ஆட்சி அதுமுதல்தான் தொடங்கியது. சர்வாதிகாரத்தையும் தன் கையிலேயே ஏற்று நடத்திய மந்திரி போய்விட்டான். ராஜ்யத்தின் மேல் நிலைமை சக்ரவர்த்தியின் புத்தி சூக்ஷமத்தையே சார்ந்திருந்தது.

ஆறுவததிகாரம்.

ஆக்பரின் அரசாட்சி.

பாணிப்பட்டுச் சண்டையிலிருந்து தொடங்கிய ஆக்பரது அரசாட்சியின் ஆறுவது வருஷத்தில் அதாவது அவன் தானாக நடத்தும் ஆட்சியின் முதல் வருஷத்தில் இந்தியாவின் நிலைமையைக் கீழ்வருமாறு சுருக்கிச்சொல்லலாம். அவனுக்கு இந்தியாவில் மேற்கே குவாலியர் ஆஜ்மீர்களை உட்கொண்ட மேற்கிந்தியாவும் பஞ்சாப்பும் கிழக்கே லக்னோவும் ஜான்பூர்வரை வியாபித்த அலகாபாத்தை உட்கொண்ட அயோத்தியின் மற்றைப்பகுதியும் உட்பட்டிருந்தன. பனாரீஸ், சானார், வங்காளமாகாணங்கள், பேகார் இவையெல்லாம் அப்போதும் சர்வமிசத்தைச்சார்ந்த அரசர்களுடைய, அதாவது ஆப்கானியருள் வேறுவமிசத்தாருடைய ஆதீனத்தில் இருந்தன. முழுத்தென்னிந்தியாவும் மேற்கிந்தியாவில் பெரு

ம்பாகமும் இவனுடைய செங்கோலின் கீழிருந்த ராச்சி யத்திற்குப் புறம்பே இருந்தன பேய்ராம்கானின் பராமரிப் பிலிருந்த ஹிந்துவருஷமும் இந்தியாவை அதிலுள்ள சிற்ற சர்களும் குடிகளும் ஒரு மனப்பட்டுச் சக்கிரவர்த்தியைத் தங்களவனாகவே கருதி அவனில் அன்புகொள்ளத் தக்க தாக ஆட்சிசெய்வதற்கு ஏற்ற ஏற்பாடு எது என்பதைப்பற் றி ஆக்பர் தீர்க்காலோசனை செய்திருந்தான் என்பதில் சிறி தும் தடையேயில்லை. அது மிகவும் கஷ்டமான வேலைதான். இதற்கு முன் நான்கு நூற்றாண்டுகளாக ஆட்சிசெய்யவந்த மகமதியச்சக்கிரவர்த்திகள் இந்தியாவில் வசித்த பலவேறு வகைக் குடிகளையும் பரஸ்பரக்ஷேமத்தில் ஐக்கியபுத்தியு டையவர்களாகும்படி ஒன்றுசேர்த்ததற்கு ஒரு முயற்சி யும் செய்யாமல் அநித்தியமான ஆதிக்கத்தைமட்டும்கொள் ளும் ஏற்பாட்டுடன் ஆட்சிபுரிந்து அங்கே எவனாவது கை பலத்தவன் கால்வைத்தால் உடனே கால்வாங்கியோடுவதே வழக்கமாக இருந்தது. அது முன்ஒன்றன்பின்னொன்றாக வந்த ராஜ்யங்களைமட்டுமல்ல; பின்வந்த ஆக்பரின் ஆட்சியை யுங்கூட நிலையற்றதென்றே எண்ண இடந்தந்தது; அது மாத்திரமல்ல, மொகலாய சக்கிரவர்த்தியை அவன், அதிர்ஷ் டத்தின்படி தங்களுள் ஒருவனாலேயோ அல்லது புறதே சத்திலிருந்துவரும் ஒருவனாலேயோ ஒழிக்கப்படக்கூடிய வனைச் சிலகாலம்வரைச் சிரேஷ்டாதிகாரம் வகித்திருப்ப வன் என்று கருதுகின்றவர்களாக அநேக குறும்பரசர்கள் வங்காளத்திலிருந்து குஜராத்துவரைக்கும் உள்ளதேசங்களில் அங்கங்கே இருக்கவும் செய்தது. இந்த அபிப்பிராயமா னது உமாயூன் மிக எளிதில் துரத்தப்பட்டோடிய சம்பவத் தால் உறுதிப்பட்டிருந்தது. கனோஜில் தோல்வியெய்திய

ரும் பதின்மூன்று வருஷமிருந்த மொகலாய ராஜ்யத்திற்கு யாதொரு அடையாளமும் விட்டுவையாமலே உமாயூன் இந்தியாவை விட்டோடிவிட்டான்.

இவையெல்லாம் அக்பருக்குத் தெரிந்த விஷயங்கள் தான். இந்த எண்ணங்களையெல்லாம் சிற்றரசர்களுடையவும் குடிகளுடையவும் உள்ளங்களிலிருந்தகற்றக்கருதினன். இதற்காகத் "தேசங்களைச் செயித்து ஒன்றுசேர்க்கவேண்டும். செயித்தபின் குடிகள் நம்மை 'இவன் அயலானல்ல. நம்முடைய கஷ்டங்களையெல்லாம் நிவர்த்தித்தலுக்கின்றியமையாத பிதாவைப்போன்றவன். நம்முடைய பரம்பரையான சொத்துச் சுதந்தரங்களை நிராக்ஷேபமாக நாமே அனுபவிக்குமாறு விடுபவன். ஜாதிமதபேதங்கொண்டு ஒருவர்க்கொருவிதமும் மற்றவர்க்கொருவிதமும் இல்லாமல் எல்லார்க்கும் ஒரேவிதச் சட்டமும் ஒரேவித நியாயமுமாக நடத்துபவன்' என்று அறிந்துகொள்ளும்படி எல்லாருடைய நோக்கத்திற்கும் இசைந்த ஏற்பாடுகளை நாட்டவேண்டும். இவற்றுக்கு மார்க்கமென்ன?" என்பதுதான் அவன்சிந்தனையில் இருந்தவிஷயம். நாளாசருதியில் அவனுடைய கொள்கைகள் இவ்விதமாக ஆகிவிட்டன. அவன் உயிர்த்திருந்த போதுங்கூட மதவெறிகொண்ட மகமதியர் சிலர் அவனை அவன் தன்னை ஈசுவரனாக எண்ணியவன் என்று குறைகூறினர்கள். அது கைபலத்தவனதே காரியமாக இருந்த அக்காலத்தில் தேவலோகத்திலிருந்து வந்த ஒரு மகாபுருஷனைப்போல இந்தியாவின் பலவேறுவகையினர்களாகிய குடிகளுக்குள் ஐக்கியம், பொறுமை, இரக்கம், நியாயம், சமமான சுதந்தரம் என்பவற்றை நாட்டியதுபற்றிக் கூறுவ

தாக இருந்தால் அவர்கள் கூற்று உண்மையே. ஆக்பர் இந்தியாமுழுமையையும் ஒருகோலின்கீழ் அமையும்படி செய்ய வேண்டுமென்பதும், அது செய்து முடித்தலுக்காக அதன் (கோலின்) கீழ்வரவேண்டுமென்று தான் விரும்புகின்ற பல வேறு ஜாதியார்க்கும் அதில் அபிமான முண்டாகும்படி செய்யவேண்டுமென்பதும் தனது பிரதானோத்தேசமாகக் கொண்டான். விஷயத்தை விவரமாக விளக்குதற்காக இதை அவன் கைக்கொண்ட ஜயம்பெறுதல், சர்வஜனங்கீகாரமாகத் தக்க கொள்கைகளை மேற்கொண்டொழுகல், என்ற இரண்டு உபாயங்களையும் தனித்தனி எடுத்து விவரிப்பது நலமாக இருக்கும். அவற்றுள் இவ்வதிகாரத்தில் ஜயம்பெறுதலைப் பற்றிமட்டும் விவரித்து, அடுத்துவருவதில் அவன் கொள்கைகளைப்பற்றி விவரிப்போமாக.

ஆக்பர் இந்தியாவில் அடைந்த ஜயத்தையெல்லாம் இது போன்ற நூலில் ஒன்றன்பின்னொன்றாகச் சொல்லிக்கொண்டிருந்தால் படிப்பவர்க்கு மிகுந்த சலிப்பாக இருக்கும். முக்கியமானவற்றைமட்டும் சுருக்கிச்சொல்வது நலம். ஆக்பர் நேரே ஆட்சிபுரியத்தொடங்கிய முதல்வருஷத்தில் (உண்மையில் அரசனான ஆறும் வருஷத்தில்) தன் ராஜ்யத்தோடு மால்வாவைத் திரும்பச்சேர்த்துக்கொண்டான். அதன் பின்பு அவனுடைய அதிபதிகள் சானுரையும் கரமான்சாவுக்குக் கிழக்கேயுள்ள தேசத்தையும் ஆண்ட ஆப்கானியவேந்தன் ஜான்பூர்மீது படையெடுத்தபோது அவனை எதிர்த்துத் துரத்தினார்கள். அப்போது ஆக்பர் கால்பீ மார்க்கமாகச்சென்று அங்கே யமுனாநதியைக்கடந்து கங்கைக்கரையின் வலது கரையில் அலகாபாத்துக்குச் சமீபத்திலுள்ள கர்ரா வரையில்

சென்று அங்கே ஜான்பூரில் செயங்கொண்டு திரும்பிய அதிபதிகளுடன்கூடி ஆக்ராவுக்குத்திரும்பினான். அவ்வருஷமுடிவில் ஆஜ்மீருக்கப்புறம் ஜாட்பூருக்கு வடகிழக்கில் எழுபத்தாறுமயில்தூரத்தில் உள்ளதும் அப்போது விசேஷித்ததாக இருந்ததுமான மேர்டா முற்றுகைபோடப்பட்டது. அங்கே கோட்டைக்குள் இருந்த இராஜபுத்திரவீரர்கள் மிக ஊக்கத்துடன் எதிர்த்து நிர்வகித்தார்கள்; என்றாலும் உள்ளிருந்த சேனாவீரர்கள் தங்கள் தட்டுமுட்டுச் சாமான்களையும் பணத்தையும் அங்கேயே விட்டுவிட்டுத் தங்கள் ஆயுதங்களோடும் அசுவங்களோடும் வெளியேபோய்விடுகிறதென்ற நிபந்தனையின்மேல் அடுத்த வருஷம் வசந்தகாலத்தில் கோட்டையை ஆக்பரின் சைனியத்துக் கொப்புவித்துவிட்டார்கள். மேர்டா பிடிபட்ட அதேவருஷத்தில், மால்வாவிலிருந்த ஆக்பரின் அதிபதிகள் தப்தியின்மீதுள்ள பர்கான்பூர், பீஜப்பூர் என்பவைகளைச் சக்கிரவர்த்தியின் மாகாணத்தோடு சேர்த்தார்கள். ஆயினும் அது ஒரு கேட்டுக்கே காரணமாயிற்று. ஏனென்றால் •அவற்றின் (பீஜப்பூர் பர்கான்பூர்களின்) அதிபதிகள் மால்வாவிலிருந்து நீக்கப்பட்ட ஆப்கானியராஜனோடு கூடிக்கொண்டு தங்கள் ஆட்சியில் அநுபவப்பட்ட ஜமீன்தாரர்களையும் துணைசேர்த்துக்கொண்டு சக்கிரவர்த்தியின் சைனியத்தை எதிர்த்து முறியடித்தார்கள். அந்த நிமிஷம் மால்வா இவர்கள் (சக்கிரவர்த்தியின் அதிபதிகள்) கைவிட்டுப்போய்விட்டது. ஆயினும் அவ்வருஷ (1562) முடிவுக்குள் சக்கிரவர்த்தியின் அதிபதிகள் பெருத்த சேனையோடு சென்றெதிர்த்து அதைக்கைப்பற்றிக்கொண்டார்கள். மால்வாவின் பூர்வாதிபதியாகிய ஆப்கானியத்தலைவன் சிலகாலம் அங்குமிங்குமாய் அலைந்துகொண்டிருந்து

கடைசியாக ஆக்பரிடத் தடைக்கலம் புகுந்தான். ஆக்பர் அவனை முதலில் ஆயிரத்துக்கதிபதியாக்கிப்பின் இரண்டாயிரத்துக்கதிபதியாக உயர்த்தினான். அவனும் தன்னாயுளெல்லாம் தன்புதிய மன்னனின் ஊழியத்திலேயே உவப்போடிருந்தான். இதில் ஆக்பர் எதிரிகளை அடித்தோட்டுதலுக்குப்பதிலாக அவர்களுக்குப்பட்டமும் பதவியும் மதிப்பும் மகிழ்ந்தளிக்கும் ஏற்பாட்டில் அவர்களை வசப்படுத்திச்சென்றதன்மை விளங்குகின்றது. ஒன்றுபடுத்துவதே அவனுடைய உத்தேசம்; ஆதலால் அவன் எப்போதும் தோற்றவர்கள்விஷயத்தில் தயாளமாகவே இருந்தான். அவர்களுடைய பலம் தனக்குப்புறம்பே வேறாக இருக்கவிடாமல் அதையும் தன்பலத்தோடு சேர்த்துக் கொள்ளுவான். முதல் நிமிஷத்தில் தங்கள் கௌரவத்துக்குக் குறைவென்றெண்ணி அடங்காதெதிர்த்து நிற்பவர்களை அவர்களே இவனுக்கு (ஆக்பருக்கு) அடங்குவது, அவர்களுடைய அந்தஸ்தைக்குறைக்காது அதிகப்படுத்தும் என்று அடுத்த நிமிஷத்திலேயே நினைக்கும்படி செய்துவிடுவான். அவன் ராஜபுட்டானாவின் அதிபதிகளுடன் நடந்துகொண்ட மாதிரியை விவரிக்கும்போது இது விசதமாகும்.

ஆக்பரின் ஆட்சியின் எட்டாவது வருஷத்தில் வசந்தத்தின்போது ஒரு விசனசம்பவம் நிகழ்ந்தது. ஆக்பர் தன் சைசவமுதல் தனதுவளர்ப்பில் ஏற்பட்டிருந்த செவிலி விஷயத்தில் எவ்வளவு அன்புபாராட்டி வந்தானென்பது முன்னமே தெரிந்த விஷயம். முக்கியமாக அவளுடைய வார்த்தையின்படிதான் அவன் பெய்ராம் விஷயத்தில் நடந்துகொண்டது. அவளுக்கு அரமனையில் வேண்டியசெள

கரியங்கள் இருந்தன. அவளுடைய பிள்ளைகளையும் ஆ
அன்பாக நடத்தித் தக்கவாறுபகரித்திருந்தான். இப்
யிருந்தும், அவளுடைய பிள்ளைகளில் மூத்தவன் தனக்
சமமாகவோ தாழ்வாகவோ தன்னால் கருதப்பட்ட சில
தன்னிலும் உயர்த்திய விஷத்துக்காகப் பிரதானமந்திரி
மேல் கோபங்கொண்டு (தன்னைப்போலொத்த சிலருடை
போதனையின்படி) அவன் கச்சேரியில் உட்கார்ந்து மே
பார்த்துக்கொண்டிருக்கையில் அவனைச் சதியாகக் கொ
செய்துவிட்டான். பின்பு அவன் ஆக்பர் தன்னிடத்தி
தன் குடும்பத்தாரிடத்திலும்காட்டிவந்த தயவில் நம்பிக்
யுடையனாக அவனுடைய (சக்கிரவர்த்தியுடைய) அந்தப்
தண்டைசென்று நின்றான். ஆக்பரோ சிறிதும்தயவி
உடனே அவனை (ச்சதிகொலைகாரனை)க்கொன்று அ
உடலின் துணிக்கைகளைக் கீழேஉள்ள கைபிடிச்சுவர்
மேல் எறிந்துவிட்டான். அவனுடைய செவிலி தன் மூ
மகனுடைய செயல் விஷயத்தில் அதிகவருத்தமுடையவள்
இருந்து அதற்கு நாற்பதாநாள் உயிர்துறந்தாள்.

இதற்குச் சற்றுமுன்பே பஞ்சாப்பின் ஓர் பகுதி
நிலைமை சக்கிரவர்த்தியின் கவலைக்குக்காரணமாகஇருந்த
இப்போதய ராவல்பிண்டி ஜில்லாவின் வடகிழக்குப்பா
என்று சொல்லக்கூடிய இடத்தில் கக்கர்கள் என்று ஒருஜ
யார் இருந்தார்கள். (இப்போதும் அவர்களுடைய சந்
யார்கள் அங்கே வசிக்கின்றார்கள்.) அவர்கள் அதிக கல
காரர்கள். அவர்களுடைய அதிபதிகள் மொகலாயச்சக்
ரவர்த்திகளை ஒருபோதும் மனதார ஏற்றுக்கொண்டதில்
அவர்கள் (கக்கர்கள்) தங்களுக்கு ஆக்பர் அனுப்பிய

உத்திரவை அசட்டை செய்துவிட்டார்கள்; அதாவது ஆக்பர் நியமித்தனுப்பிய ஓர் அதிபதியை ஏற்றுக்கொள்ள மறுதலித்துவிட்டார்கள். ஆக்பர் தன் உத்திரவை நிறைவேற்றுதற்காக ஒரு சேனையை அங்கே அனுப்பினான். அவர்கள் சிறிதுநேரம் பலமான சண்டைசெய்து காரியத்தைச் சீராக்குதலில் ஜெயம்பெற்றார்கள். கக்கர்களின் அதிபதி சிறையாகப்பிடிபட்டுச் சிறையிலிருந்து மீளாமலே உயிர் துறந்தான்.

அவ்விதமாகவே ஆக்பர் காபூலிலும் ஒரு கலகத்தை அடக்க வேண்டியவனாக இருந்தான். அக்கலகக்காரன் யாரென்றால் உமாயூனுக்கு வேண்டியவனாக இருந்த அபூல்மாலி என்பவன் தான். அவனுடைய சதியை அறிந்து அவனை ஆக்பர் சிலமுறை கண்டித்திருக்கின்றான். ஆயினும் அவன் (அபூல்மாலி) இப்போது மெக்காவுக்குப்போய் வந்திருக்கின்றோம் என்ற கருவத்தால்நிறைந்து தன்னைப்போலவே சக்கிரவர்த்தியில் அதிருப்திகொண்டிருந்த மற்றொரு ஆப்கானியனோடு கூடிச் சதியாலோசனைசெய்து சக்கிரவர்த்தியின் சைனியமொன்றை நார்நூலுக்குப்பக்கத்தில் எதிர்த்தழித்தான். ஆக்பர் அவனைத்தொடரும்படி ஒரு சைனியத்தையனுப்பினான். அதனால் அபூல்மாலி அருண்டு காபூலுக்கோடி அங்கிருந்து அதிக பச்சாதாபங்காட்டிச் சக்கிரவர்த்திக்கோர் கடிதம் எழுதியனுப்பினான். கடைசியாக அடுத்தவருஷத்தின் ஆரம்பத்தில் அவன் படாக்ஷனில் சிறைபட்டுக் கொலையுண்டான். 1564-வசந்தம்வரை அலகபாத்துக்குக்கிழக்கேயுள்ள மாகாணங்களில் ஆக்பர் தான் மொகலாயராஜ்யத்தை நிலைநாட்டுதற்குச் செய்யவேண்டுமென்று கருதிய ஏற்பாடுகளை நடவடிக்கைக்குக்கொண்டுவரவில்லை. கிழக்கு

ராஜ்யங்களுக்கெல்லாம் திறவுகோலென்று அக்காலத்தில்க
ருதப்பட்டிருந்த சானார் என்பது ஏடல் வம்சத்தைச்சார்ந்த
ஓரடிமையின் வசத்தில் இருந்தது. இந்தஅடிமையரசன்,
அதிபதியொருவனால் பயமுறுத்தப்பட்டுத் தன்ராஜ்யத்தை
யொப்புவித்துவிடுவதாக ஆக்பருக்குக் கடிதம்எழுதினான்.
அதைச்சுவாதீனப்படுத்திக் கொள்ளும்படி ஆக்பர் தன் அதி
பதிகள் இருவரையனுப்பினான். அடிமையரசனும் அவர்க
ளுக்குக்கோட்டையை ஒப்புவித்துவிட்டான். சானாரின்
சுவாதீனமானது நரசிங்கப்பூருக்கு வழிகாட்டியது. அது சௌ
ராகர்கோட்டையில் கச்சேரி செய்துவந்த ஒருராணியின்
ஆதிபத்தியத்தில் இருந்தது. அவளுக்கு விரோதமாக ஒரு
மொகலாய அதிபதி புறப்பட்டுச்சென்று தண்டிறங்கிச் செ
ய்த சண்டையில் அவளைத்தோற்கடித்து நரசிங்கப்பூரையும்
இப்போது ஒஷங்கபாத் ஜில்லா என்னப்படுகின்ற பகுதிக
ளையும் சக்கிரவர்த்தியின் ராஜ்யத்தோடு சேர்த்தான். அவ்
வருஷத்தின் உஷ்ணகாலத்தில் ஆக்பர் வேட்டைக்கென்ற
வியாஜத்தின்மேல் மத்தியஜில்லாக்களுக்குப் புறப்பட்
டான். அப்போது நேர்ந்த அசாதாரண மழைக்காலம்
அவனை வருத்தியதால், கரைபுரண்டு பெருக்கெடுத்திருந்த
ஓடைகளைக் கொஞ்சக்கஷ்டத்துடன் கடந்து, அப்போது
இருபதுமயில் சுற்றளவுள்ளதென்று புகழப்பட்டு நல்ல
நிலைமையிலிருந்த நர்வாருக்குச்சென்றான். அந்நகரைச்சுற்றி
டங்களில் சிலநாள் வேட்டையாடிக்கொண்டிருந்து பின்
மால்வாவைநோக்கிப் புறப்பட்டு ராவா, சாரங்கப்பூர்களின்
மார்க்கமாகப்போய் மோவுக்குத் தென்மேற்கே இருபத்
தாறுமயில்தூரத்தில் உள்ள மாண்டு என்னும் பிரசித்திபெ
ற்றநகரத்தை நோக்கிப்போயினான். ஆக்பர் நகர்க்குச்சமீபித்

கவுடன் அவனால் அதிபதியாக நியமிக்கப்பெற்றிருந்த உஸ்பெக்தலைவன், சக்கிரவர்த்திக்குத் தன்மேல் அதிருப்திகொள்ள ஏது உண்டென்பதை அறிந்து கொண்டவனாய், (திரும்பவும் தன்னையாதரிப்பதாகச் சக்கிரவர்த்தி எழுதியிருந்தும் அதில் நம்பிக்கைகொள்ளாமல்) தன் பரிசனங்களோடு ஊரைவிட்டோடிப்போனான். ஆக்பர் அவனைத்தொடர்ந்து செல்லும்படி ஒருபடையை அனுப்பினான். அதுவும் அவனைக்குஜராத்துவரைப் பின்தொடர்ந்து அவன் குதிரைகள், யானைகள், மனைவியர்கள் ஆகிய எல்லாவற்றையும் கைப்பற்றித்திரும்பின.

மண்டுவில் ஜனங்கள் ஆக்பரை நல்வரவேற்றுபசரித்த விதமானது மிகவும் சிலாகிக்கத்தக்கது. சுற்றிடங்களிலுள்ள ஜமீன்தார்களெல்லாரும் அவனைக்கண்டு காணிக்கைசெலுத்தும்படி திரண்டு வந்தார்கள். தூரத்தேயுள்ள காண்டேஷ்மன்னன் சுபம் வினவுதலின்பொருட்டுத் தன்காரியஸ்தனையனுப்பினான். ஆக்பர் அத்தூதனை அதிகமரியாதையோடேற்றுபசரித்தான். அக்காலத்திய வழக்கப்படி அப்போது நடந்த சம்பவமொன்றைக்குறிப்பது தகுதியாக இருக்கின்றது. அத்தூதன் திரும்பிப்போகையில் ஆக்பர் காண்டேஷ் மன்னனுக்கு ஒருதிருமுகம் எழுதியனுப்பினான்; அதில் அவனை அவன்பெண்களுள் ஏற்றவளென்று தோற்றுகின்ற ஒருத்தியைத் தனது குற்றேவலுக்காக அனுப்பும்படி கேட்டெழுதியிருந்தான். "ஆக்பர் அனுக்கிரகித்த திருமுகத்தைக் காண்டேஷ்மன்னனான முபாரக்ஷா பெற்றுப் பேரானந்தக்கடலுள்மூழ்கி, அதைத்தனக்கொருபெரும்பாக்கியமாகக்கருதித் தன்மகளைத் தக்கபரிவாரமும் சீதனமும்

தந்து சக்கிரவர்த்தியின் சமூகத்துக்கனுப்பினுன்". ஆக்பர் சொற்பகாலம் மண்டுவில் தங்கிப் பின்புறப்பட்டு, உஜ்ஜைன், சாரங்கப்பூர், சிப்ரீ, நர்வார், குவாலியர்களின் மார்க்கமாகத்திரும்ப ஆக்ராவை வந்து சேர்ந்தான்.

மேற்கே இருந்து இந்தியாவுக்கு வரும்யாத்திரிகர்களில் ஆக்ராவின் காட்சிகளுள் ஒன்றுன கோட்டையைக்கண்டு ஆச்சரியப்படாதார் இல்லை. ஆக்பர் வந்தபோது அங்கே சாதாரணச்செங்கல்லால் அவலக்ஷணமான விதத்திற் கட்டப்பட்டுச்சிரணமாய்க்கிடந்த ஒரு சிறுகோட்டைதான் இருந்தது. கொஞ்சகாலத்துக்குப்பின் அவ்விடத்தில் (சக்கிரவர்த்தியின்கோட்டையென்று சொல்லப்படுதற்குத்) தகுதியான ஒருகோட்டையைக்கட்டவேண்டுமென்றுதீர்மானித்து1565 வசந்தத்திறுதியில் இன்னபடி நிர்மாணஞ் செய்யவேண்டுமென்று தீர்மானித்து வேலைக்கு உத்திரவு கொடுத்தான். ஆக்பரால் மூவாயிரத்துக் கதிபதியாக்கப்பட்டிருந்த காசீம் கான் என்னும் காரியஸ்தனுடைய பார்வையில் வேலைநடந்தது, அதற்கு இடைவிடாத எட்டுவருஷத்துழைப்பும் முப்பத்தைந்துலக்ஷம் ரூபாவும் பிடித்தது. அது உயர்ந்த சாதிக்கற்களால் கட்டப்பட்டிருந்தது. அக்கற்கள் ஒன்றேடொன்று அவற்றுக்கூடேசென்ற இருப்புவளையங்களாலிணைக்கப்பட்டிருந்தன. அஸ்திபாரம் எவ்விடத்தும் ஆழ்ந்து நீர்மட்டத்துக்குச் சென்றிருந்தது.

எப்போதும் அவசரமான அவசியம் நேர்ந்தால் செய்யவேண்டிய காரியத்தைச் சீராக உடனே செய்யும் அவனுடைய சுபாவத்தைக் காட்டுதற்கு அவ்வருஷம் முடியுமுன்

சந்தர்ப்பம் வாய்த்தது. மாண்டுவேக்கு ஆக்பர் போனபோது உஸ்பெக் தலைவன் பயந்து கலகக்காரனுகச் சைனியங்களுடன் ஓடியதும், அவனைத் தொடரும்படி ஆக்பரால் அனுப்பப்பட்ட சைனியங்கள் அவனைத்தண்டித்ததும் ஆகியவரலாறுகளை முன்னரே சொல்லியிருக்கின்றோமல்லவா? அக்கைக்காரன் விஷயத்தில் ஆக்பர் செய்தது தகாதகொடுமையல்லாவிடினும் அது சக்கிரவர்த்தியின் சமஸ்தானத்திலும் சைனியத்திலும் இருந்த உஸ்பெக்கியருடையமனத்தில் சக்கிரவர்த்தி உஸ்பெக்கியரை வெறுப்பதாகத் தோன்றச்செய்தது. ஆதலால் அவர்களுள் மூன்று நான்குபேர் அவனுக்குப் புத்திகற்பிக்க வேண்டுமென்று ஒன்று சேர்ந்தார்கள். அவ்வருஷத்தின் இலையுதிர் காலத்தின்போது ஜான்பூரில் கலகம் ஆரம்பித்தது. அதன் அதிபதியை உஸ்பெக்கியர் தங்களுக்குச் சுவாதீனப்படுத்திக்கொண்டார்கள். இச்செய்தி வந்தபோது ஆக்பர் நர்வாரில் ஆனைவேட்டை யாடிக்கொண்டிருந்தான்.

அகப்படக்கூடிய சைனியத்துடன் தன் பராக்கிரமமுள்ள அதிபதியைத் தன்காரியஸ்தர்களுக்குதவுமாறு உடனே அனுப்பிவிட்டு அவர்களைத் தொடர்ந்துபோதற்காகப் பின்னும் சேனை சேர்த்துக்கொண்டிருந்தான். அதிபதி சென்று பத்துத்தினத்துக்குப்பின் புறப்பட்டுக் கனோஜை சேர்ந்தான். கலகக்காரர்களுள் ஒருவன் கீழ்ப்பட்ட செய்தியை அங்கே கேள்விப்பட்டான். மழையால் பெருக்கெடுத்திருந்த ஆற்றில் வெள்ளம் தணிவதை எதிர்நோக்கிக்கொண்டு அங்கே பத்துநாள் காத்துக்கொண்டிருந்தான். கலகக்காரர்களுள் முக்கியனுக இருந்த அதிபதி லக்னோ

வுக் கோடியிருப்பதாகக் கேள்வியுற்றுத் தான் சிலராக இருந்தாலும் தேர்ந்தவர்களாகஇருந்த வீரர்களுடன் உடனே புறப்பட்டு இருபத்துநான்கு மணிநேரம் எங்குந் தங்காமல் ஒரேயடியாய்ப்போய் அடுத்தநாட் காலையில் லக்னோவை யடுத்தான். அவன் ஊரையடுத்ததும் கலகக்காரர்கள் ஓடிவிட்டார்கள். சக்கிரவர்த்தியும் பரிவாரங்களும் ஏறியிருந்த குதிரைகள் நெடுந்தூரப்பிரயாணத்தால் களைத்துப்போயிருந்தமையின் அவர்களை (கலகக்காரர்களை)த்தொடர்ந்துசெல்ல முடியவில்லை. கலகக்காரத்தலைவன் திரும்பவும் அதிவேகமாக ஜான்பூர்க்குப்போய்த் தன்தோழர்களைக் கூட்டிக்கொண்டு அந்த இடத்தைவிட்டு நார்ஹான்துறையில் கோக்ராவைக்கடந்து சப்ராவுக்கு நாற்பது மயில்தூரத்தில் உள்ள அந்த நார்ஹானில் தங்கினான். அங்கிருந்தபடியே வங்காளத்தரசனிடம் அவனைத் தங்களுக்குதவிசெய்யும்படி பிரார்த்திப்பதற்காகக் காரியஸ்தர்களை யனுப்பினார்கள்.

இதன் மத்தியில் சக்கிரவர்த்தியின் சைனியமொன்று அவர்களுக் கெதிரில் வந்துசேர்ந்தது. அதன் அதிபதி சண்டையின்றியே சமாதானத்தில் காரியம் முடித்தலில் கருத்துடையவன். கலகக்காரர்களுடன் சமாதான உடன்படிக்கை சிலசெய்து அவற்றைப்பற்றிச் சக்கிரவர்த்திக்கும் விண்ணப்பித்தான். இந்த நடவடிக்கைகள் முடிந்ததும் முடியாததுமாக இருக்கையிலேயே சக்கிரவர்த்தியின் சேனை மற்றொன்று ராஜபுட்டானாவிலிருந்து மேனுக்கிவந்தது; அதிமூர்க்கனும் வீரனுமான அதன் அதிபதி சமாதான உடன்படிக்கையில் சம்மதிக்காமல் உடனே சண்டை தொடங்க

வேண்டுமென்று பிடிவாதம் செய்தான். அப்படியே சண்டை தொடங்கப்பட்டது. அதில் சக்கிரவர்த்தியின் சைனியங்கள் தோற்புண்டன. அடுத்தநாள் மீண்டுஞ் சந்திப்பதாக உத்தேசித்து ஷேர்கானுக்கோடின. முன்னே அதிபன் குறித்த சமாதான உடன்படிக்கைகளை இச்சண்டை தொடங்குதற்கு முன்பாகவே சக்கிரவர்த்தி அங்கீகரித்திருந்தான். தன் சேனைகளை அக்கலகக்காரர்கள் தோற்கடித்தார்கள் என்ற செய்தியைக் கேட்டபோதும் அவன் தன் தீர்மானத்திலிருந்து எள்ளளவும் மாறவில்லை. அவன் (சக்கிரவர்த்தி) "அவர்கள் பிழைகள் மன்னிக்கப்பட்டன" என்றுசொல்லித் தன் அமீர்களைச் சமஸ்தானத்துக்குத் திரும்பும்படி உத்திரவனுப்பினான். பின்பு அவன் சானாரிலுள்ள கோட்டையைப் பலப்படுத்துதற்காகச்செய்யவேண்டிய வேலைகளுக்கு ஒழுங்கேற்படுத்தவும் மீர்ஜாப்பூர்க்காடுகளில் யானைவேட்டையாடவும் தன்னால் மன்னிக்கப்பெற்ற கலகக்காரர்களின் பின்னடவடிக்கை எப்படி என்பதைக் கவனிக்கவும் கருதிச் சானாருக்குச்சென்றான். அக்கலகக்காரர்களை ஆயுதங்களோடிருக்குமாறுவிட்டது தப்பிதமென்றே எண்ணக்கூடியதாயிற்று. ஏனென்றால் அவர்கள் தங்களுக்குண்டான அற்ப ஜயத்தால் இறுமாந்து மறுபடியும் கலகத்துக்காரம்பித்துவிட்டார்கள். ஆயினும் ஆக்பர் தன் சேனையின் புத்திசாலித்தனத்தினால் அவர்களை அடக்கி மறுபடியும் மன்னித்துத் தன்னுடைய தயவுக்கு அவர்களைப் பாத்திரர்களாக்கினான். அவ்வருஷத்திடையில் சக்கிரவர்த்தியின் அதிபதிகள் பேகாரிலுள்ள ரோடாஸ் கோட்டையைச் சுவாதீனப்படுத்தினார்கள். ஒரிசாவுக்குக் காரியார்த்தமாக அனுப்பப்பெற்ற தூதர்கள் அளவற்ற வெகுமதிகளுடன் திரும்பினார்கள்.

1566 பனிக்காலத்தில் ஆக்பர் ஆக்ராவுக்குத் திரும்பினான். சண்டை சச்சரவின்றிச் சமாதானத்தோடிருந்த அக்காலத்தில் சக்கிரவர்த்தி ஒவ்வொரு சாயங்காலத்தையும் சோகான் விளையாட்டில் சந்தோஷமாகக்கழித்துக் கொண்டிருந்தான். சோகான் விளையாட்டு இங்கிருந்துதான் இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பெற்றது. அதை இப்போது உலகெங்கும் விளையாடும் மாதிரியாகவே ஆக்பரும் விளையாடிக்கொண்டிருக்கையில் இரவில் விளையாடுதற்காக ஒரு மார்க்கம் கண்டுபிடித்தான். இதற்காக அவன் பலசமரங்களால் (பலசு என்பது கனமற்றதும் நின்றெரியக்கூடியதுமான ஓர் மரம்) பந்துகளைச் செய்வித்துத் தீப்பொருத்தினான். அக்காலத்தில் அவ்விளையாட்டில் எல்லாரினும் பார்க்க அவனே சிரேஷ்டமானவன் என்று பேர்பெற்றிருந்தான்.

லாகூரிலும் காபூலிலும் அடுத்தடுத்துக் கலகம் நிகழ்கின்ற செய்தி இவன் இவ்வினோதத்தே மூழ்கியிருக்கையில் எட்டியது. உடனே (அவ்வருஷத்திறுதியில்) புறப்பட்டு அதிவேகமாகப் பிரயாணம்செய்து பத்துத்தினத்தில் டில்லியைச்சேர்ந்தான். அங்கிருந்து சர்ஹிண்டுக்குப்போனான். அதினின்று சந்தோஷத்தோடு லாகூருக்குப்போனான். கலகக்காரரைத் துரத்தும்படி அங்கிருந்து தன் அதிபதிகளையனுப்பினான். அவர்களும் அதுசெய்து திரும்பினார்கள். அப்போதே காபூலிலும் உபத்திரவம் ஒடுங்கியது. ஆனால் சக்கிரவர்த்தி வடமேற்கே நெடுந்தூரத்தில் இருந்ததினால் இங்கே ஜான்பூரில் கலகம்கிளம்பிவிட்டது. இதுவரை (1566 இறுதி) முக்கியவிஷயமான, இந்துஸ்தானத்தில் நிலைமையான

ஆட்சியை நாட்டும் விஷயத்தை ஆராய்ந்து முடிப்பதில் இறங்குதற்கு அசக்தனாகவே இருந்தானென்பது தெளிவாகின்றது. அப்போது அவனது (பாணிப்பட்டு யுத்தத்தினின்று தொடங்கிய) ஆட்சியின் பதினோராம் ஆண்டு முடிவுக்குவந்துகொண்டிருந்தது. அவனுடைய ஆட்சி நிலைக்கத் தக்கதாக இந்தியாவில் சொற்பவேர்களே யூன்றியிருந்தன. தற்செயலாக அவனுயிர்க்கிறுதி நேரும்பக்ஷத்தில் பின்பட்டம் திரும்பவும் ஆயுதத்தாலேயே நாட்டும்படியாக இருந்தது. 1567-ம் வருஷாரம்பத்தில் லாகூரில் வேட்டை முதலாகிய காரியங்களில் விநோதமாகக் காலங்கழித்துக்கொண்டிருந்தான். அவனால் மன்னிக்கப்பெற்ற உஸ்பெக்கியர்கள் அவன் லாகூரில் சென்றிருப்பதைத் தருணமாகக் கொண்டு கலகத்துக்காரம்பித்துவிட்டார்கள் என்றசெய்தி அவனை இவ்விநோதத்தினின்றும் கிளப்பியது; ஆதலின் மார்ச்சு 22-ல் லாகூரைவிட்டுப் புறப்பட்டுத் திரும்ப ஆக்ராவுக்கு வந்தான். வரும்வழியில் சர்கிண்டிலுள்ள தனீஸ்வரத்துக்கு வந்ததும் அங்கே இந்துக்களுள் யோகிகளும் சந்நியாசிகளுமாகிய இருதிறத்தார்க்கும் (க்ஷேத்திரத்திற்கு யாத்திரிகர்களால் செலுத்தப்பட்ட தங்கநகை நாணயங்களாகிய உபயப்பொருள்களின் சுவாதீனவிஷயமாக) நிகழ்ந்த விவாதத்தைக்கண்டு களித்தான். ஜான்பூரிலல்லாமல் டில்லியிலும் ஒருவிக்கினமிருந்தது. அங்கே (டில்லியில்) சிறைப்பட்டிருந்த ஒருதலைவன் தப்பியோடி விட்டான். இதனால் டில்லியின் அதிபதி தன்மேல் சக்கிரவர்த்தி அதிருப்தி கொள்ளுவான் என்றெண்ணி நகரத்தை விட்டோடிப்போய்க் கலகத்துக்காரம்பித்துவிட்டான்.

ஆக்ராவுக்குப்போன பின்பும் கலகவர்த்தமானந்தான் அவன் காதுக்கெட்டியது. கனோஜைச்சார்ந்த தேசம் கலகப்பட்டுக்கிடந்தது. அதன் அதிபதிகளிற் பெரும்பாலார் நம்பிக்கைக்குப்பாத்திரர்கள் அல்ல என்பது அவனுக்குத் தெரியும். இதற்காக அவன் ராய்பார்ளி ஜில்லாவிலுள்ள போஜ்பூருக்கும் அங்கேயிருந்து ராய்பார்ளிக்கும் சென்றான். கலகக்காரர்கள் கால்பியைநோக்கிப் போகும் உத்தேசத்தோடு கங்கையைக்கடந்தார்கள் என்ற செய்தியை அவன் அங்கேயறிந்தான். மழை அதிகமாக இருந்தது. தேசத்தில் எங்கேபார்த்தாலும் வெள்ளம்பெருகிக்கிடந்தது. ஆயினும் ஆக்பர் காரியத்திலே கவலையுள்ளவனாகத் தன்பிரதான சைனியங்களைக் கர்ராவுக்கனுப்பிவிட்டுத் தான்தேர்ந்த வீரர்கள் சிலரோடு பிரதாபகருக்கும் அலகபாத்துக்கும் இடைவழியில் இருக்கும் மானிக்பூருக்குப்போனான். அங்கே அவன் ஆனைமேலேறி யாற்றைக்கடந்து அதிவேகமாகப்போய்க் கலகக்காரர்களை மானிக்பூரண்டையில் பிடித்து முற்றுந் தோற்கடித்தான். கலகக்காரரின் பிரதானபுருஷர்கள் கொலையுண்டார்கள். அமர்க்களத்தினின்று ஆக்பர் பிரயாகையென்னப்பட்ட அலகபாத்துக்குப் போனான். பின்பு பனாரிசுக்கும் ஜான்பூருக்கும்போய் இடையே தேசகாரியங்களை ஒழுங்குபடுத்திவிட்டு ஆக்ராவுக்குத்திரும்பினான்.

இப்போது தன் கிழக்குராஜ்யங்கள் பத்திரப்பட்டுவிட்டதாகஎண்ணி ஆக்பர் ராஜபுட்டானாவைப்பற்றி யாலோசிக்கலானான். மேற்கிந்தியாவின் அப்பெரியபாகத்தில் (ராஜபுட்டானாவில்) உதயசிங்குதான் எல்லாரிலும் புராதனமன்னன். அவன் சுபாவத்தில் வெகுமுரடன். பிரசித்தமான சித்தூர்க்

கோட்டைதான் அவனுடைய பிரதான அரண். அது 1303-ல் அல்லாவுத்தீன்கிலிஜிக்குக் கீழ்ப்பட்டது; ஆயினும் அதுஒருவராலும் அசைக்கமுடியாதது என்ற பிரதாபத்தை மீண்டும் பெற்றிருந்தது. அது பனஸ்நதிக்குமேல் உயர்ந்து தீர்க்கசதுரமாக இருக்கும் ஒருகுன்றின்மேல் இருக்கின்றது. வெளிமதிலும் அம்மலைவடிவாகவே இருக்கின்றது. அது உண்மையும் ராஜவிசுவாசமுமுள்ள அதிபதியின்கீழ் நல்லவீரர்களான ஏழாயிரம் ராஜபுத்திரர்களால் காக்கப்பட்டிருந்தது. ஆகாரமும் ஜலமும் அதில் ஏராளமாக உண்டு. அது எல்லாவிதத்தும் ஒரு நீண்டமுற்றுகையைத் தாங்கக் கூடியதாகவே இருந்தது.

தான் கோட்டைக்கு முன்பாக உட்கார்ந்துகொண்டு ஆக்பர் சுற்றிடங்களைச் செயிக்குமாறு மற்றொருவகுப்பு சேனையை அனுப்பினான். அப்போது ராணா தனக்கு ஜயமுண்டாகும் என்ற நம்பிக்கையின்றிக் காடுகளுக்கோடிவிட்டான். ஆக்பர் அதிக தைரியத்தோடு முற்றுகையை நெருக்கினான். ராஜபுத்திரர்களும் அவ்வளவு தைரியத்தோடும் பிடிவாதத்தோடும் தங்களைக்காத்துக்கொண்டார்கள் ஆக்பர் முன் ஒருபோதும் இப்படிக்கொத்த பலம்பொருந்திய வீரர்களோடெதிர்த்ததில்லை. அவர்கள் இணங்காது அதிகபிடிவாதமாக இருந்தார்கள். இவனும் விடுவதில்லையென்று தீர்மானித்திருந்தான். கடைசியாக ஓரிடத்தில் அதை (கோட்டையை) இடித்து வழியுண்டாக்குவது சாத்தியம் என்பது தெரியவந்தது. அது செய்யுமாறு ஓரிரவில் உத்திரவு செய்தான். அவன் இருந்துபார்த்துச் சேனையை நடத்தத்தக்கதாக ஒருநிலை அமைக்கப்பட்டது. தன்

சேவகளைக் குறிப்பிட்ட இடத்தில் கோட்டையை இடிக்குமாறு ஆக்ஞாபித்துவிட்டுத் தான் அந்நிலையில் துப்பாக்கியுங் கையுமாக உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில் தன் சைனியங்களை எதிர்ப்பதற்காக வன்மையுள்ள அதிபனுடைய ஆக்கினையின்படி பராக்கிரமசாலிகளான இராஜபுத்திரவீரர்கள் கோட்டையிடிசலின் பக்கத்தில் கூடிநிற்றலைக் கண்டான். அவன் (ஆக்பர்) நின்ற இடத்துக்கும் அந்த இடிசலுக்கும் ஏறக்குறைய ஒருகாக்கை பறக்கும் தூரந்தானிருந்தது; ஒருஆறுதான் இடையே இருந்தது.

ஆக்பர் தீவர்த்திவெளிச்சத்தில் ராஜபுத்திரத்தலைவனை அடையாளங்கண்டு அவன் ஏற்றதூரத்திலிருப்பதாக அறிந்து அதே இடத்தில் அவனைத் தன்துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினான். அது (துப்பாக்கியால் சுட்டது) இருதிறத்துச் சைனியங்களும் கைகலக்குந்தருணத்தில் நேர்ந்தமையால், ராஜபுத்திரவீரர்கள், சமயத்தில் கலங்கிப்போனார்கள். ஆனால் அவர்கள் பின்பு சீர்ப்பட்டார்கள். இயன்ற அளவு முயற்சித்துத் தங்கள்சமர்த்தெல்லாஞ் செலுத்திப்பார்த்தார்கள். தருணம் தப்பிவிட்டது. இழந்த நலத்தைமீண்டுங் கைக்கொள்ள இயலவில்லை. விடிந்தவுடன் சித்தூர் ஆக்பருக்குச்சுவாதீனப்பட்டுவிட்டது. இதற்கு (ஜயத்திற்கு)ப்பின் ஆக்பர் தான் சித்தூர்க்கோட்டையின் முற்றுகை தொடங்குவதற்கு முன்பு பிரார்த்தனைசெய்துகொண்டபடியே சிஸ்டானைச்சார்ந்த (ஆஜ்மீர் மலையின் உச்சியிலிருக்கும்) மேய்ன்யூடீன்கிஸ்டீ என்னும் இந்தியாவின்முதன்மகமதிய யோகியின் பள்ளிவாசலுக்குக் காலால்நடந்து யாத்திரை போனான். அவன் ஆஜ்மீரில் பத்துநாள் தங்கியிருந்து பின்பு அவ்விடத்

தினின்று புறப்பட்டு மீவாத் மார்க்கமாக ஆக்ரா வந்து சேர்ந்தான்.

ஆக்பர் இலையுதிர்காலத்தையும் மழைக்காலத்தையும் ஆக்ராவில் கழித்தான். பின்பு அவன் ஜயப்பூரைச்சார்ந்த ராத்தம்பூர்க்கோட்டையைப்பிடிக்குமாறு சேனை சேர்த்தான். ஆனால் அச்சைனியங்கள் புறப்படுந்தருணத்தில் குஜராத்தில் நேர்ந்த குழப்பங்களைக்கேள்வியுற்றுத் தன் எண்ணத்தை மாற்றி அச்சைனியங்களைக் குஜராத்துக் கனுப்பிவிட்டான். பின்பு தானே நேரில் ராத்தம்பூருக்குப்போவதாகத் தீர்மானித்தான். அப்படியே அடுத்தவருஷம் (1569) ஆரம்பத்தில் செய்துமுடித்தான். அக்கோட்டையைக் கைப்பற்றியவுடன் ஆக்ராவுக்குத்திரும்பினான்; வழியில் மறுபடியும் யோகியின் மோசோலியத்தைத் தரிசிக்குமாறு ஆஜ்மீருக்குப் போய் ஒருவாரம் தங்கியிருந்துவிட்டு ஆக்ரா வந்து சேர்ந்தான்.

இவ்வருஷத்தில் மிக விசேஷமான பேட்பூர்சிக்ரியை நிர்மாணம் செய்வித்தான். அஜீர்ணமாகக்கிடக்கும் அதன் பகுதிகளைக்கண்டு தற்காலத்தில் யாத்திரிகர்கள் ஆச்சரியப்படுகின்றார்கள். ஆக்பருக்கு இரண்டுபிள்ளைகள் இரட்டைப் பிள்ளைகளாகப்பிறந்து இறந்தனவாம். ஆக்ராவுக்கு இருபத்திரண்டு மயில்தூரத்ததாகிய சிக்ரியில் இருந்த ஷேக்சாலிம் கிஸ்டி என்பவர் ஆக்பருக்குத் தீர்க்காயுசுள்ள ஆண்பிள்ளை பிறக்குமென்று அனுக்கிரகித்தாராம். ஆக்பர் இவ்வாக்கு நிறைவேறும் என்பதில் பூரணநம்பிக்கையுடையனாகி (ராத்தம்பூரிலிருந்து திரும்பிவந்த பின்பு) ச்சிக்ரிக்குப் பலமுறை

யாத்திரைபோய்வந்தான். ஒவ்வொருமுறையிலும் பத்து நாளுக்குக்குறையாமல் இருபதுநாள்வரைத் தங்குவானும். பின்பு அங்கே உன்னதமாக இருந்த ஓரிடத்தில் ஓரரண்மனையும் கட்டினன். சந்நியாசியும் அரமனைக்கருகில் ஒரு மடமும் பள்ளிவாசலும் கட்டினன். சமஸ்தானத்தைச் சார்ந்த அதிபதிகளும் இவர்கள் செய்ததைப்பார்த்துத் தங்களுக்கும் ஒவ்வொரு வீடுகட்டிக்கொண்டார்கள். ஆக்பரின் அரண்மனைவேலை நடந்துகொண்டிருக்கும்போது அவன்மனைவியர்களுள் ஒருத்தி கர்ப்பவதியாயினள். ஆக்பர் அவளைச் சந்நியாசியின் ஆச்சிரமத்துக் கழைத்துச்சென்றான். அதற்குக் கொஞ்சகாலத்துக்குப்பின் குஜராத்தை ஜயித்தபின் தன் அபிமானத்தலமாகிய சிக்ரிக்கு பேட்பூர் (ஜயபுரி) என்று பேர்தந்தான். அந்த இடமானது அதற்குப்பின் பேட்பூர்சிக்ரி என்ற பேராலேயே சரித்திரங்களில் வழங்கப்பட்டிருக்கின்றது. சிக்ரியில் வசிக்கும்படி அனுப்பப்பெற்ற ஆக்பரின்மனைவி, வருஷமுடிவில் சந்நியாசியின் மடத்தில் ஓர் ஆண்பிள்ளையைப்பெற்றுள். அக்குழந்தை சந்நியாசியின் பெயர்ப்படி சலீம் என்றழைக்கப்பட்டாலும் சரித்திரங்களில் ஜஹாங்கீர் என்றழைக்கப்படுகின்றுன். அவனுடையதாய் ஜாட்பூர் (ராஜபுத்ரவம்சத்தைச்சார்ந்த) ராஜகுமாரி. ஆக்பர் இச்சம்பவத்தின் (புத்ரஜனனத்தின்) ஞாபகக்குறியாக பேட்பூர்சிக்ரியில் அழகான மாளிகையொன்று கட்டுவித்தான்; அதைச்சுற்றிலும் பலமான கன்மதிலெழுப்பியிருந்தான். அதன் பின்பு மறுபடியும் ஒருமுறை ஆஜ்மீரிலுள்ள யோகியின் மௌசோலியத்துக்குக் காலால் நடந்து யாத்திரைபோனன். அங்கே தன்பிரார்த்தனைகளைச் செலுத்திவிட்டு டில்லிக்குப் போனுன்.

அடுத்த வருஷாரம்பத்தில் ஆக்பர் ராஜபுட்டானாவுக்குப் புறப்பட்டு ஜாட்பூரைச்சார்ந்த நாகூரில் தங்கினான். அங்கே ராஜபுட்டானாவில் உள்ளவர்களுள் பிரசித்தனாக இருந்த ஜாட்பூர் ராஜாவின் புதல்வனும், பைகானாமன்னனும், அவன் புதல்வனும் வந்து ஆக்பரைத்தரிசித் துபசரித்தார்கள். பைகானாமன்னனின் ராஜவிசுவாசத்தை ஆக்பர் அபிமானித்து அதற்கு அறிகுறியாக அவன்மகளை மணம்புரிந்துகொண்டான். ஆக்பர் அங்கே நாகூரில் விசேஷமாக இருந்த காட்டுக்கழுதைகளை வேட்டையாடுதலில் சிலகாலம் விநோதமாகக் காலங்கழித்துக்கொண்டிருந்து பின்பு பஞ்சாப்பிலுள்ள டிப்பல்பூருக்குப்போனான். அங்கே ஓர் விசேஷித்த தர்பார் நடத்தினான். அடுத்த வருஷத்தின் ஆரம்பத்தில் லாகூருக்குப்போனான். பஞ்சாப்பின் காரியங்களை ஒழுங்கு படுத்திவிட்டு அந்த வருஷத்தைக் குஜராத்தைஜயிப்பதில் கழிப்பதென்று நினைத்துக்கொண்டு பேட்பூர்சிக்ரிக்குத்திரும்பினான்.

மேற்கிந்தியாவிலுள்ள குஜராத்துக்கு அப்போது (ஆக்பரின் காலத்தில்) சூரத், புரோச், கெய்ரா, அமதபாத், பரோடா என்னப்படுகிற தேசத்தில் பெரும்பகுதி, மாகிகாந்தா ரிவாகாந்தா தேசங்கள், பஞ்சமகாஸ், பாலன்பூர், ராதன்பூர், பலின்னா, கம்பே, காண்டே, பெரிய தீபகல்பமான காத்தியாவார் என்பவை சேர்ந்திருந்தன. இத்தேசத்திற்கு நெடுநாளாக ஒரு சரியான மன்னனிருந்ததில்லை. அது அநேக நாளாகப் பல வேறு ஜில்லாக்களாகப் பிரிபட்டுப் பெருத்ததிரளான குடிகளுக்கு அன்னியனான ஒவ்வோர் மகமதியத்தலைவனால் ஆளப்பட்டு அதிபதிகள் அடிக்கடி ஆதிபத்தியம் பெறு

வருத்திக் குடிகளை வருத்துவதும் அவர்கள் இவர்களை எதிர்ப்பதும்ஆகக் கலகத்துக்கே இடமாக இருந்து கொண்டிருந்தது. சில வேளைகளில் அடுத்த மாகாணம் கையிலிருத்திருப்பதறிந்து மற்ற அதிபதிகள் ஒன்றுசேர்ந்து உடனே படையெடுப்பார்கள். இதனால் குஜராத்தானது ஒழுங்கீனத்துக்கே உறைவிடமாக இருந்தது. குடிகளுக்கு அதிக உபத்திரவம் இருந்தது. அவர்களையாண்ட குறும்பரசர்களோ அயலாரைவருத்தியே தங்கள் நன்மை நாடுபவர்களாக விருந்தார்கள். ஆக்பர் இந்த அலங்கோலங்களையெல்லாம் நெடுநாட்கு முன்பாகவே தெரிந்துகொண்டு இப்போது அவற்றை ஒருமிக்கத் தொலைத்துவிடத் தீர்மானித்தான்.

ஆக்பர் குஜராத்தின் மீதெடுத்த படையெடுப்புத்தான் அவனுடைய ஆட்சியில் நிகழ்ந்த பிரசித்தமான படையெடுப்பு. ஆக்பர் தானே சேனாதிபதியாக 1572 செப்டம்பரில் பேட்பூர்சிக்ரியைவிட்டுப் புறப்பட்டு ஜேயப்பூர்க்குத்தெற்கே பதினெட்டு மயில்தூரத்திலேயுள்ள சங்கனர்வழியாகப்போய் அக்டோபர் நடுவில் ஆஜ்மீரைச்சார்ந்தான். அங்கே யோகியின் மோசோலியத்தைத் தரிசிப்பதற்காக இரண்டுநாள் தங்கியிருந்து பதினாயிரம் குதிரைவீரர்களை முன்னடியனுப்பிவிட்டுப் பின் பெரிய சேனையுடன் ஜாட்பூர்க்கு வடக்கில் எழுபத்தைந்து மயில் தூரத்திலுள்ள நாகூரைச்சார்ந்தான். இவன் அங்கே போனவுடன் தன்யால் ராஜகுமாரன் என்றழைக்கப்பெற்ற தவதியபுத்திரஜனன சுபசமாரத்தை ஓர் தூதன் மூலமாக அறிந்தான். அங்கே தன் சேனையின் ஆகாராதிகளுக்கு வேண்டிய எற்பாடுகளைச் செய்தலுக்கா

கப் பதினென்றுநாள் தங்கியிருந்து பின் மெஹிருக்குச்சென்று சரஸ்வதிக்கரையிலிருக்கும் பட்டாணுக்கு நவம்பர்மாதத்தில் சென்று அடுத்தமாதம் ஆரம்பத்தில் அமதபாத்தையடைந்தான். பட்டாணிலிருந்து அமதபாத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில் குஜராத்தின் ஸ்ரேஷ்டாதிபதியென்று உரிமை பாராட்டிய அதிபதிவந்து தலைவணங்கினான். ஆனால் அவனுடைய ஆதிபத்யம் பேர்மாத்திரையிலே இருந்ததேயன்றி வேறொன்றுமில்லை. அப்போது குஜராத்தில் முதன்மையானதாக இருந்த அமதபாத்தில் ஆக்பர் மேற்கிந்தியாவின் சக்கிரவர்த்தியென்று அங்கீகரிக்கப்படுத்தப்பட்டான்.

ஆயினும் தங்கள் அதிகாரத்தை இழக்க மனமில்லாத அதிபதிகள் இன்னும் சேர்ப்படவில்லை. அவர்களுள் புரோச், பரோடா, சூரத்துகளின் அதிபதிகளும் சேர்ந்தவர்கள். தேசக்ஷேமத்துக்கனுகூலமாக அமதபாத்தில் காரியங்களை யொழுங்குபடுத்தியதும் சக்கிரவர்த்தி காம்பேயை நோக்கிப்புறப்பட்டு ஐந்துநாள்களில் அங்கே போய்ச்சேர்ந்தான். அங்கேதான் அவன் முதன்முறையாகக் கடலைக்கண்டானென்று சரித்திரக்காரர்கள் கூறுகின்றார்கள். அங்கே ஏறக்குறைய ஒருவாரம் தங்கியிருந்தபின் புறப்பட்டு இரண்டுதினத்துள் பரோடாவைச்சார்ந்தான். அங்கே அமதபாத்தை ராஜதானியாக ஏற்படுத்தித் தன்னுடன் ஆக்ராவிலிருந்துவந்த அதிபர்களுள் ஒருவனை அதற்கு அதிபதியாக நியமித்துத்தேசத்தின் ராஜாங்கவிஷயத்தை ஒழுங்குபடுத்தினான். அங்கேயிருந்துங்கூட புரோச்சையும் சூரத்தையும் கைப்பற்றும்படி இருவேறு சைனியங்களை அனுப்பினான். அப்போது புரோச்சின் அதிபதி அவ்வூரில் மொகலாயரைச் சார்ந்த காரியஸ்

தன் ஒருவனைக் கொலைசெய்து விட்டு உள்நாட்டிற் பிரவேசிக்கக்கருதிப் பரோடாவிற்குப் பதினைந்துமயில்தூரத்துட் போய்க் கொண்டிருக்கின்றானென்று ஆக்பருக்குச் செய்தி எட்டியது. ஆக்பர் உடனே தன் கையிலிருந்த சேனையுடன் அவனைப் பின்பற்றிச் சென்றான். இரண்டாநாள் இரவில் ஒருசிறுநதியின் மேற்பக்கத்தில் சர்சாவில் அவன் தண்டிறங்கிய இடத்திற்கருகே போய்ச் சேர்ந்தான்.

அப்போது ஆக்பரிடத்தில் நாற்பதே குதிரைவீரர்கள் இருந்தார்கள். ஆறு தாண்டக்கூடியதாக இருந்தது. துணைச் சேனைகள் வந்துசேரும்வரைத் தன் மனிதர்களை மறைத்து வைக்க முயன்றான். அறுபதுபேர்வரை அடங்கிய அச் சேனை இரவில்வந்து சேர்ந்தது. அவர்களையும் முன் சேனையுடன் சேர்த்து நூறுபேராகச் செய்துகொண்டு ஆக்பர் தன் சேனையைவிடப் பத்துமடங்கு அதிகமான சேனையை எதிர்ப்பதுகருதி ஆற்றைக்கடந்தான். கலகக்காரர் தலைவன் அங்கே நிற்காமல் தனது ஏராளமான சைனியத்துக்கு வாய்ப்பாயிருக்கும்படி வெளியிடத்துக்குச் சென்றான். ஆக்பர் ஒரே பாய்ச்சலில் ஊரைக் கைப்பற்றிக்கொண்டு பின் பெதிரியைப் பின்பற்றினான். அவ்விடங்களில் எங்கே பார்த்தாலும் குறுக்கேயும் நெடுக்கேயும் இட்டேரிகள் இருந்தன. அவ்விட்டேரிகளின் இருபக்கங்களிலும் காக்டஸ் மரவேலிகளிருந்தன. ஒருவேலியின் பக்கத்தில் ஆக்பரின் சைனியம் முற்றும் ஒருங்கேநின்று போர்புரிய அங்கே இடங்கிடையாது. எதாவதொரு வேலியைச்சார்ந்து எதிரிகள் நிற்பார்கள். அவர்களோடு நேரே எதிரிட்டுப் போர்புரிவதென்றால் மூன்றுபேர்க்குமேல் நிற்க அங்கே இடமில்லை.

ஆக்பர் தன் மனிதர்களுக்கு முன்பக்கத்தில் நின்றான். தன் மனைவியுடன்பிறந்தானும் ஜெயப்பூர்ராஜாவும்ஆன பராக்கிரமம்பொருந்திய ராஜாபகவன்தாஸ் ஒருபக்கத்திலும் ராஜாவின் சகோதரிபுத்திரனும் ராஜாவுக்குப்பின் பட்டத்திற்கென் றுத்தேசிக்கபெற்றவனும் அக்காலத்திற் சிறந்த போர்வீரர்களுள் ஒருவனும் ஆகிய மான்சிங் ஒருபக்கத்திலும் ஆக இருவர் ஆக்பருக் கிருபக்கத்திலும் நின்றார்கள். இம்மூவரும் பெருத்த அபாயத்திலிருந்தார்கள். ஏனென்றால் எதிரிகள் இவர்கள்மேல் பாய்வதற்காக அசாத்திய பிரயத்தனம் பண்ணினார்கள். ஆனால் இதுவரைத் தன் சேனைகள் அணிவகுத்து நிற்றலுக் கிடையூறாக இருந்த காங்டஸ்வேலி இப்போது இவர்களுக்கொரு பாதுகாப்பாக இருந்தது. ஏனென்றால் எதிரிகளால் அதைக்கடந்து வரமுடியவில்லை. பின்பு எதிரிகளுள் சிரேஷ்டனைப் பகவன்தாஸ் தனது ஈட்டியால் குத்திக்கொன்றான். ஆக்பரும் மான்சிங்கும் வேறிரண்டுபேரைக் கொன்றார்கள். அதனால் எதிரி சைனியங்கள் கலங்கின. அத்தருணம் பார்த்து மூவரும் ஒன்றுசேர்ந்து எதிரிகளைத் துரத்தினார்கள். அஞ்சா நெஞ்சுள்ள பராக்கிரமசாலிகளான சக்கிரவர்த்தியின் படைவீரர்களும் தங்கள் சுபாவத்தோடு சக்கிரவர்த்தி தனிமையாகச் செல்லுவதில் உண்டாகக் கூடிய அபாயத்தைப்பற்றிய பயமும் தூண்ட அதிவேகமாகத் தொடர்ந்து துரத்தினார்கள். கலகக்காரரின் பரிவாரங்கள் ஆக்பரின் பரிவாரங்கள் போலக் கலங்காமையும் ஊக்கமும் காட்டவில்லை. அவர்கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராகத் தருணம் வாய்க்க வாய்க்க நழுவிவிட்டார்கள். கலகக்காரர் தலைவனும் தன்பரிவாரங்கள் கைவிட்டதும் கூடிய வேகமாக

அமதபாத்தையும் டோசாவையும் கடந்து ராஜபுட்டானாவிலுள்ள சிரோகிக் கோடிவிட்டான்.

இதற்குள்ளாகப் புரோச் பிடிப்பட்டது. சூரத்தொன்றுதான் பாக்கியாக இருந்தது. ஆக்பரின்மகன் காலத்திலும் பேரன்காலத்திலும் அங்கிலேய வியாபாரிகளுக்கு நன்றாகத்தெரிந்திருந்த அந்தச் சூரத்தை நோக்கித் தானே சைனியத்தை நடத்திக்கொண்டு ஆக்பர் புறப்பட்டான். சூரத்துக் கோட்டையானது அக்காலத்தில் குடைந்துவழிசெய்வதற்கேற்பட்ட ஆயுதங்களுக் கசையாததாக இருந்தது. ஆனால் சக்கிரவர்த்தி அதிக ஊக்கத்துடன் முற்றுகையை நெருக்கினான். எதிரிகள் ஒருமாதமும் பதினேழுநாளும் கழியும்வரை இணங்காதிருந்து பின் ஆகாராதிகள் அறவேயொழிந்தமையால் அடிபணிந்து கோட்டையையொப்புவித்துவிட்டார்கள். ஆக்பர் சூரத்தில் போதுமானகாலம் தங்கியிருந்து குஜராத்து மாகாணங்களின் காரியங்களை ஒழுங்குபடுத்திவிட்டு ஆக்ராவுக்குத் திரும்பினான். படையெடுப்பில் ஒன்பதுமாதம் சென்றிருந்து 1573 ஜூன் 4ல் ஆக்ராவைச் சார்ந்தான்.

ஆக்பர் சூரத்தை முற்றுகை போட்டுக்கொண்டிருக்கையில் முன் சர்சாவில் அவனுக்குத் தோற்றுச் சிரோகிக் கோடிய கலகக்காரத்தலைவன் உபத்திரவம்செய்ய முயன்றுகொண்டிருந்தான். அவன் மற்றொருவலியகலகக்காரனுடன் சேர்ந்துகொண்டு பட்டாணை நோக்கிப்போய் அங்கே சக்கிரவர்த்தியின் சேனையைக் கண்டு அவர்களை எதிர்த்து ஏறக்குறைய முறியடித்தான், அவனுடைய சைனியங்கள் கொள்ளை

யடிக்கக்கருதி யயற்பக்கங்களிற் சிதறிய தருணம்பார்த்துச் சக்கிரவர்த்தியின் சைனியங்கள் மீண்டும் ஒருங்குபட்டு அவனுடைய (கலகக்காரத்தலைவனுடைய) படையுட்புகுந்து கலக்கித் தோல்வியைஜயமாக மாற்றிக்கொண்டன. இச்செய்தி சூரத்து முற்றுகை முடிவாகிறதற்கு முன்பாகவே ஆக்பருக்கு எட்டியது கலகக்காரன் பின்னும் தன்னால் இயன்ற அளவுக்குத் தீங்குசெய்வதிலேயே கருத்துடையனாக ராஜபுட்டானா மார்க்கமாகப் பஞ்சாபீக்குச் சென்றான். வழியில் இரண்டு மூன்றிடங்களில் தோல்வியடைந்தான். ஆனால் பிராணாபாய மில்லாமலே தப்பித்துக்கொண்டு பாணிப்பட்டு, சான்பட்டு, கர்னால் என்ற இடங்களில் கொள்ளை யடித்துச் சென்றான். பஞ்சாப்பில் சக்கிரவர்த்தியின் சைனியத்தால் தோற்புண்டான். கடைசியாக மூல்தானுக்குப் பக்கத்தில் ஒரு செம்படவக்கூட்டத்தாரால் காயம்பட்டுச் சிறைப்பட்டான். பின்பு அக்காயத்தாலேயே ஆவியிழந்தான். அவன் தொலைந்தது நலம். ஏனென்றால் அவன் மிகவலியவன். இந்த வருஷத்தில் மொகலாய சைனியங்கள் ஜாலந்தர்கூடலையடுத்த காங்கரா கோட்டையை முற்றுகை போட்டிருந்தார்கள். ஆனால் அது எறக்குறையச் சுவாதீனப் படக்கூடிய தருணத்தில் மேலே நாம்கூறிய (மூல்தானுக்குப் பக்கத்தில் இறந்த) கலகக்காரனை அடக்குதற்காக முற்றுகையை விட்டுவிட்டு வந்துவிடவேண்டியவர்களாயினார்கள். காங்கராவானது மொகலாயருக்கு ஆக்பரின் புதல்வனது ஆட்சிவரைச் சுவாதீனப்படவில்லை.

ஆக்பர் குஜராத்தில் தன்னுடைய ஜெயம் நிலைபெற்றதென்றும் அங்கே தான்செய்த ஏற்பாடுகளினால் குடிகளது

நம்பிக்கையையும் அபிமானத்தையும் பெற்றிருப்பதாகவும்
நம்பிக் குஜராத்து மாகாணத்தை விட்டுச்சென்றான். ஆனால்
முன் ஆட்சிபுரிந்த அதிபதிகளின் உள்ளத்தில் மீண்டும் ஆட்
சியைக்கைக்கொள்வதில் எவ்வளவு ஆவல் இருந்ததென்ப
தை அவன் சரியாகக் கவனிக்கவில்லை.

ஆக்பர் ஆக்ராவைச் சேர்ந்தானோ இல்லையோ இந்த ஆ
திபத்தியமிழந்த தலைவர்கள் சைனியஞ்சேர்க்கவுந் தேசத்
திற்குத் தீங்கிழைக்கவுந் தொடங்கிவிட்டார்கள். சக்கிரவர்
த்தி இத்தீங்கை முளையிலேயே களையவேண்டி மேற்கிந்தி
யாவின்மீது இரண்டாமுறை தண்டெடுத்துச்செல்ல ஆயத்
தப்பட்டுத் தன்சைனியத்தை முன்னாடி யனுப்பிவிட்டுத்
தான் (செப்டெம்பர் மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை)
அதிவேகமாகச் செல்லும் ஓரொட்டகத்தின் மீதேறித் தன்
சைனியங்களோடு கூடுமாறு புறப்பட்டு எங்குந் தங்காமல்
எழுபதுமயில் ஒரேஅடியாகச் சென்று ஜேயப்பூருக்கும் ஆஜ்
மீருக்கும் எறக்குறைய மத்தியதூரத்திலிருக்கும் டோடா
வைச் சார்ந்தான். மூன்றுநாட்காலையில் ஆஜ்மீரைச் சார்ந்
து வழக்கப்படி யோகியின் பள்ளிவாசலைத் தரிசித்துக்கொ
ண்டு மாலையில் மீண்டும் பிரயாணம்போய் டீசா வழியிலிருக்
கும்பாலியில் தன்சைனியங்களைச் சந்தித்தான். அவன்
அவற்றை உடனழைத்துக்கொண்டு பாட்டணுக்குச் சமீ
பத்தில் போனவுடன் வேறு சில சைனியங்களும் அவ
னோடு கூடின. அவை அவனுடைய காரியஸ்தர்களால்
சேர்க்கப்பட்டு மேனோக்கிப் போவதற்கு அவனது வரு
கையை எதிர்நோக்கி இருந்தவை. எதிரிகள் சேர்த்து
வைத்திருக்கும் சைனியத்தொகையைப் பார்த்தால் ஆக்

பர் வசமிருந்தவை மிகச்சொற்பமென்று சொல்லவேண்
டும்; ஆனால் அவனிடத்திருந்தவர்களெல்லாரும் மகாவீரர்
கள். ஆக்பருடைய தீவிரகதியும் அவனுக்கு நன்றாய்ப் பயன்
பட்டது. ஆக்பர் எதிரிகளுக் கடுத்தகையில் இருக்கும்
போதுங்கூட எதிரிகளுக்கு அவன் ஆக்ராவை விட்டுப் புறப்
பட்டதாகத் தெரியாது. ஆக்ராவிலிருந்து அவ்வளவு தூரப்
பிரயாணத்தை ஒன்பதுநாளில் முடித்து ஆக்பர் தங்கள்
இலேமலிருக்கும்போது அவர்கள் அமதபாத்துக்குப் பக்
கத்தில் தங்கள் கூடாரங்களில் யாதொரு கவலையுமின்றி
உறங்கிக்கொண்டிருந்தார்கள். இங்கே ஆக்பருடையபெருந்
தன்மையொன்று கவனிக்கத்தக்கது. சக்கிரவர்த்தி எதிரி
கள் தண்டிறங்கியிருந்த இடத்துக்கடுக்க வந்ததும் அவர்
கள் அயர்ந்துறங்குதலைக் கண்டான். உடனே அவர்கள்
மேல் வீழ்ந்தடித்தொழிப்பது மிக எளிதாக இருந்தும்
அவன் அதுசெய்யச் சம்மதிக்கவில்லை. “உணர்வின்றி உறங்
குபவர்மேல் பாய்வது சரியல்ல. அவர்கள் விழிப்படையும்
வரைக்காத்திருந்து பின்பெதிர்ப்பதே கவுரவம். அவர்கள்
விழிப்படையுமாறு பறைகொட்டுங்கள்” என்று தன் மனி
தர்க்குக் கட்டளையிட்டான். கலகக்காரரின் பிரதானாதிபன்
அதற்குப் பதினான்கு நாள்களுக்கு முன்வரை ஆக்பர் ஆக்
ராவிலேயே இருந்ததாகத் தன் வேவுகாரராற் கேள்வியுற்
றிருந்தான். ஆதலால் அவன் தனக்கு முன்னிருக்கும் சே
னையில் ஆனைகளில்லாமையால் அக்குதிரைப்படையைச் சக்
கிரவர்த்தியின்படையல்லவென்றே அப்போதும் உறுதி
யோடுரைத்தான்; ஆயினும் அவன் சண்டைக்காயத்தப்
பட்டான். சக்கிரவர்த்தி அப்போதும் கவுரவமுடையவனா
க அவன் தயாராகும்வரைக் காத்திருந்து ஆனைமெதிரிந்

நவுடன் ஆற்றைக்கடந்து எதிர்ப்புறத்துக்கரையில் தன்சேனைகளை அணிவகுத்து எதிரிமேற் கடும்புலிபோலப் பாய்ந்தான். மொகலாய சேனையின் மற்றொருபகுதி எதிரியை அள்ளைப்பக்கத்தில் வந்து தாக்கியது. எதிரியால் நிர்வகிக்கமுடியவில்லை. கலகக்காரர்கள் முற்றிலுந் தோற்புண்டார்கள். அவர்கள் அதிபன் புண்பட்டுச் சிறைப்பட்டான்.

ஒரு மணிநேரத்திற்குப்பின் ஏறக்குறைய ஐயாயிரம் வீரர்களடங்கிய மற்றொரு பகைச்சைனியம் எதிர்ப்பட்டது. அச்சைனியமும் முறியடிக்கப்பெற்றது. அதன் தலைவனும் கொலையுண்டான். சண்டையின்போதும் தோற்றோடும் போதும் ஏறக்குறைய இரண்டாயிரம் வீரர்வரை உயிரிழந்தார்கள். பின்பு ஆக்பர் அமதபாத்துக்குப் போய் எவ்வெவர்களுக்குப் பரிசளிக்கவேண்டுமோ அவ்வவர்களுக்குப் பரிசளிப்பதிலும் அந்த மாகாணம் நிலையாய்ப் பத்திரப்பட்டிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதிலும் ஏற்பட்டு அங்கே ஐந்துநாள்வரைத் தங்கியிருந்தான். பின் புறப்பட்டு கேய்ரா ஜில்லாவிலுள்ள நகராகிய மாமுதாபாத்து, சிரோகிகளில் தங்கி ஆஜமீருக்குப் போய்ப் பிரசித்தமான யோகியின் மொசோலியத்தைத் தரிசித்துக்கொண்டு பின் இரவும் பகலும் விடாதுபிரயாணஞ்செய்து (பின் திவானாக ஏற்படப்போகிற) ராஜாதோடார்மாலை ஜெயப்பூருக்குப் பதினன்குமயில் தூரத்தினதாகிய ஒருகிராமத்தண்டை சந்தித்து குஜராத்தில் நிலவரிவிதிக்கும் விஷயமாகச் சில ஒழுங்குகளை யோசித்தேற்படுத்தநிமித்தம் தங்கினான். பின் சக்கிரவர்த்தி அங்கிருந்து நேரே தான் நாற்பத்துமூன்று தினங்களுக்குமுன் விட்டுப்புறப்பட்ட பேட்பூர்சிக்ரியை ஜயசிலனாய்ச் சார்ந்தான்.

அவனுடைய ஆட்சியின் பதினெட்டாம்வருஷத்திறுதியாகியஇப்போது வடமேற்கு, மத்திய இந்தியாக்களும், பஞ்சாப்பு, காபூல்கள் உள்ளிட்ட மேற்கிந்தியாவும், அவனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தன. அவனுடைய ஆட்சி மேற்கே கரமான்ஸாக்கரைவரை எட்டியிருந்தது. அந்நிக்கப்புறத்தில் பேகார், பெங்கால் ராச்சியங்கள் சுவாதந்தரியம் வகித்திருந்தன. அவை சில சமயங்களில் பயமுறுத்திக்கொண்டும் இருந்தன. ஆதலால் அடுத்தவருஷத்தில் எதிர்பாராததேதேனும் சம்பவியாதிருக்கும் பக்ஷத்தில் அதை (அடுத்தவருஷத்தை) வங்காளத்தையும் அதைச் சார்ந்த தேசங்களையும் ஜெயிப்பதில் செலவழிக்கவேண்டுமெனத் தீர்மானித்தான். அப்படையெடுப்புக்குமுன் ஆஜ்மீர் மலையிலுள்ள சமாதை மற்றொருமுறைத் தரிசிக்கும்படி யாத்திரை சென்றான்.

இதற்கு முன்பக்கங்களில் ஆக்பரின் படையெடுப்புகளையும் அவனுடைய சைனியங்களின் தேர்ச்சியையும் பற்றிச் சொல்லியிருக்கின்றோம். அப்படையெடுப்புகளில் ஆக்பர் கொண்ட ஏற்பாடுகளைப்பற்றியும் சில சொல்லவேண்டுவதவசியம். சமீபகாலத்துக்கு முன்னிருந்தவர்களுள்ளும் போர்க்கென்றே போரை விரும்பிச் செய்தவர்கள் பலருண்டு. மொகலாயராஜ்யம் தள்ளாடிக்கொண்டிருக்கையில் இந்தியாவின்மீது படையெடுத்த நாகரீகமற்ற கோரஸானியரும் ஆப்கானியரும் அவ்வாறு போர்க்கென்றே போரைவிரும்பிச்செய்தவர்கள். ஆனல்ஆக்பருடையகொள்கை அதுவல்ல. அவன், போரானது தான் கட்டிக்கொண்டிருந்த அரசாட்சியென்னும் அருமாளிகைக்கு அஸ்திபாரமாக விருந்தாலல்

லது அதிற்பிரவேசிப்பதில்லை. அவ்வஸ்திபாரமில்லையேல் அவ்வருமாளிகை அடுத்துவரும் மாருதத்திற்காற்றாது அடியற வீழ்ந்து விடுமாதலால் அஃது (போர்) இன்றியமையாமையென்பதுபற்றியே புரியத்துணிவான். அப்படி அவசியமென்று தோற்றிச்செல்லும் படையெடுப்பிலும் குடிகளுக்கு யாதொரு தீங்கும் உண்டாகாவண்ணம் பார்த்துக்கொள்ளுவான். படையெடுப்பில் ஓரிடத்தில் தண்டிறங்கினால் அடுத்திருக்கும் விளைநிலங்களுக்குத் தன்சைனியங்களால் கேடு யாதும் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளும்படி காவற்காரர்களை நியமிப்பான். அவ்விடம்விட்டுப் புறப்படும்போது தான் தண்டிறங்கியிருந்ததால் குடிகளுக்கேதேனும் நஷ்டம் நேரிட்டிருந்ததா என்பதைவிசாரித்து இருந்ததென்று கண்டால் அதை மதிப்பிட்டு அந்நஷ்டத்திற்கீடான தொகையைக் குடிகளுக்குச் செலுத்திவரும்படி சில கண்காணிகளை விட்டுச் செல்லுவான். தண்டெடுத்துச் செல்லும் மார்க்கத்திலுள்ள குடிகளுக்கு யாதொரு இம்சையும் கொடாதுசெல்லும் இந்த ஏற்பாடானது, மொகலாயராட்சிக்குப்பின் உண்மையில் பட்டம்பெற்ற ஆங்கிலேயதர்மதுரைத்தனத்தின் ஏற்பாட்டை முற்றும் ஒத்திருக்கின்றது.

ஆஜ்மீரிலுள்ள கோரியைத் தரிசிக்கச்சென்ற ஆக்பர் அங்கே பன்னிரண்டுநாள் தங்கினான். அவன் அதைவிட்டுப் புறப்படுவதற்குள் பேகார் பெங்கால்களின் நிலைமையைப் பற்றிச் சிறிது ஆராய்வோமாக. வடமேற்குமாகாணங்களை மொகலாயர் திரும்பச்செயித்துக்கொண்டிருந்தபோது பெங்கால் பேகார்களின் ஒன்றுசேர்ந்த சிம்மாசனத்தில் வீற்றி

ருந்த ஆப்கானியாராஜன் கொஞ்சகாலத்திற்குப் பின்பு ஆக்பரின் ஆதிக்கத்தைக் கடிதமூலமாக அங்கீகரித்திருந்தான். ஆனால் அது ஒரு எட்டுச்சுரைக்காயாகத்தா னிருந்தது. அவன் இவனுக்குத் திறைசெலுத்தியது மில்லை; திருமுடி தாழ்த்தியது மில்லை. ஆக்பர் குஜராத்தின்மீது இரண்டாமுறைபடை யெடுத்தபோது இவ்வரசன் இறந்தொழிந்தான். அவனுக்குப்பின் பட்டம் பெறவேண்டியவனான அவன்புதல்வனை அவன் சமஸ்தானத்தைச் சார்ந்த அதிபதிகள் தங்கள் கூட்டம் குறைவாக இருந்தாலும் கைவலுத்தவர்களாக இருந்தமையால் உடனே கொன்றகற்றிவிட்டு முன்மன்னனின் இளயசகோதரனை தாவுத்கான் என்பவனைச் சிம்மாசனத்தேற்றினார்கள். ஆனால் தாவுத்கான் உலகவின்பமன்றி ஒன்றையும் பொருட்படுத்தாதவனாக இருந்தான். ஆகையால் அவன் பட்டத்துக்கு வந்ததும் லோடி வம்சத்தைச் சார்ந்த ஒரு வன்மையுள்ள அதிபதி அரசனுக்கு விரோதமாகக் கிளம்பிப் பேகாரைச சார்ந்த ஷஹாபாத்துச் சில்லாவிலுள்ள ரோட்டாஸ்கர்க் கோட்டையில் சிம்மாசன மேறித் தான் சுயாதீனன் என்பதைப் பகிரங்கப்படுத்தினான். ஆயினும் பிற்பாடு அவர்களுக்குள் ஒரு சமாதான உடன் படிக்கை ஏற்பட்டது. தாவுத்கான் அவ்வுடன்படிக்கையையும் லோடிவமிசத்தான் தன்மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் வாய்ப்பாகக்கொண்டு, அவனைப் பிடித்துக் கொலை செய்துவிட்டான்.

இந்தச்சமாசாரம் ஜான்பூரின் மொகலாய அதிபதிக் கெட்டியது. பேகாரின்மீதே கண்ணாயிருந்து சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி நடக்கும்படி ஆக்பரால் ஏவப்பட்டிருந்த

அவ்விதமே உடனே ஈர்மான்ஹானைக் கடந்து பலமிகுந்திய யாட்ருக்கோட்டையை நோக்கிப்போயினான். தாவுத்கான் வெளியே இருந்து மொகலாய சைனியத்தோடெதிர்த்து நிர்வகிக்க முடியாதென்று நினைத்து அக்கோட்டைக்குள் புகுந்தடைத்துக்கொண்டிருந்தான். ஆக்பர் குஜராத்திலிருந்து திரும்பிய கொஞ்சநாளுக்குள், நிலைமை, இவ்விதமாக இருந்தது. ஆக்பர், சேனைகளைத் தானே நடத்தவேண்டும் என்றெண்ணமுடையவனாகத் தான் வரும்வரைக் காரியங்களை நிறுத்திவைக்கவேண்டுமென்று தன் காரியஸ்தனுக்கு உத்திரவனுப்பினான். பிற்பாடு நாம் முன் குறித்தபடி ஆஜ்மீருக்குத் தரிசனார்த்தமாகச் சென்று அங்கிருந்து சில சைனியத்துடன் தண்ணீர்மார்க்கமாகப் புறப்பட்டு விரைவில் அலகபாத்துவந்து சேர்ந்தான். அங்கே தங்காமல் முன்போலவே தண்ணீரிலேயே பிரயாணம்போய்ப் பனாரிசைச் சார்ந்து அங்கே மூன்றுநாள் தங்கி மீண்டும் படவேறிக் கங்கைநதியில் கும்டிநதிபாயும் ஸ்தானத்தைச் சேர்ந்தான். அங்கேயிருந்து தன் காரியஸ்தனிடமிருந்து செய்தியை எதிர்பார்த்து ஜான்பூருக்குச் செல்லவேண்டிக் கும்டியை எதிரேறிச்சென்றான். ஆயினும், அதிவேகமாகப் பாட்னாவந்து சேரவேண்டுமென்று அவனுடைய காரியஸ்தன் சொல்லியனுப்பிய செய்தி அவன் ஜான்பூருக்குச் செல்லும் வழியிலேயே கிடைத்தது. படவுக்காரர்களை, இராஜகுமாரர்களையும் ராஜஸ்திரீகளையும் அழைத்துக்கொண்டு ஜான்பூர்க்கே போம்படி ஏற்படுத்திவிட்டுத் தான் திரும்பித் தன்சைனியங்களை விட்டுவந்த இடத்தைச்சார்ந்து அவர்களைப் படவுக்குமுன்பாகக் கரையில் நடந்துவரும்படி கட்டளையிட்டுச் சவுசாவில் இறங்கினான். இது (சவுசா) ஆக்பரின் பிதாவாகிய உமாயூ

னைமுன் ஷெர்கான் தோற்கடித்த இடமென்பது இதைப்படிப்பவர்களுடைய ஞாபகத்தில் இருக்கக் கூடியவிஷயமே. இங்கேயும் சக்கிரவர்த்திக்கு அவனுடைய காரியஸ்தனிடமிருந்து கடிதம்வந்தது. அதில் "எதிரி பாட்னுக்கோட்டையுள்ளிருந்து ஒருசேனையை வெளியே அனுப்பினன். அதினல் அதிக கேடுண்டாயிற்று" என்பதாகக் கண்டிருந்தது. ஆதலால் ஆக்பர் உடனே புறப்பட்டுப் பின்னும் தண்ணீரிலேயே விரைந்துசென்று, பாட்னுவில் முற்றுகைபோட்டுக்கொண்டிருந்த சைனியத்தை எழாநாட் கூடினன்.

அடுத்தநாள் அவன் தன் மனிதர்களையெல்லாம் ஒன்றுசேர்த்துச் சண்டையைப்பற்றி ஒருமந்திராலோசனை செய்தான். அதில் அவன், முற்றுகைக்காரர்கள் அக்கோட்டையைத்தாக்குதற்குமுன்பாகப் பாட்னுவுக்கெதிரில் கங்கை கண்டகி சங்கமத்திலிருக்கும் ஹாஜிபூரைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளவேண்டும் என்பது, தன் அபிப்பிராயமென்றன். எல்லாரும் அதற்கிசைந்தார்கள். அடுத்தநாளிலேயே ஹாஜிப்பூர் சுவாதீனப்பட்டது. தாவுத்கான் இந்த ஜயத்தால் அதிகமாகப்பயந்தான். பின்பு முற்றுகைபோட்டுக்கொண்டிருக்கும் சைனியத்தின் பலத்தை அறிந்து அவ்விரவிலேயே பாட்னுக்கோட்டையை விட்டுவிட்டுப் பாட்வாவண்டையில் பூன்பூன் நதியை அது கங்காநதியுடன் சங்கமமாகும் இடத்தில் கடந்தோடிவிட்டான். விடிந்தவுடன் ஆக்பர் ஜயசீலனக நகரத்துட்பிரவேசித்தான். ஆனல் தாவுத்தைப் பிடிக்கவேண்டுமென்று கவலைகொண்டிருந்ததினல் அங்கே நான்குமணிநேரம்தான் இருந்தான். பிற்பாடு தன் சைனியங்களைத் தன் காரியஸ்தனிடம் விட்டுவிட்டுத் தான்

சிறந்த குதிரைவீரர்களை உடனழைத்துக்கொண்டு எதிரியைத் தொடர்ந்து புறப்பட்டான். குதிரைமேலிருந்தபடியே பூன்பூன் நதியை நீந்திக்கடந்து விரைவாகத் தாவுத்தின் பரிவாரங்களைப் பின்பற்றினான். பின்பற்றியோடுகையில் எதிரியின் ஆனைகளை ஒன்றன்பின்னொன்றாக டேரயாப்பூர் போவதற்குள்ளாக இருநூற்றறுபத்தைந்து யானைகளைக் கைப்பற்றினான். பின்பு தான் டேரயாப்பூரில் இருந்துகொண்டு, பகைவனைத் தொடர்ந்து செல்லும்படி தன் நம்பிக்கையுள்ள காரியஸ்தர் இருவரை யனுப்பினான். அவனை அவர்கள் பின்னும் பதினான்குமயில்வரைத் துரத்திப் பின்பு அவன் எங்கேயோ நழுவிவிட்டான் என்பதைத் தெரிந்து திரும்பிவிட்டார்கள்.

பாட்னாவில் ஜயத்தால் ஆக்பருக்குப் பேகார் சுவாதீனப்பட்டது. அவன் பின்னும் ஆறுநாள்வரை டேரயாப்பூரில் தங்கியிருந்து அம்மாகாணத்தின் ஆட்சியை ஒழுங்குபடுத்தினான். அதன் பிரதான உத்தியோகத்தில், அப்படையெடுப்புக் கேற்பாடுசெய்தவனாகிய காரியஸ்தனையே நியமித்து மீதியேற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தும்படி அவனை அவ்விடத்திலேயே விட்டுவிட்டுத் தான் ஜான்பூருக்குத் திரும்பினான். அங்கே முப்பத்தாறுநாள் தங்கி இராஜ்யத்தை முன்னிருந்ததைப்பார்க்கிலும் சீராக ஆளுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து முடித்தான். இவ்வண்ணத்தோடு ஜான்பூர், பனாரீஸ், சானார்களையும் அவற்றைச் சூழ இருந்த மகல்களையும் நேரே ராஜாங்கதிவானின் அதிகாரத்துக் குட்படுத்திப் புதிதாகக் கிடைத்த கரமான்ஸாவுக்குத் தெற்கேயுள்ள மாகாணங்களைப் பிரத்தியேகமான ஆட்சிக் குட்பட்டதாகச்

செய்தான். இதைச்செய்தபின்பு அவன் ஆக்ராவுக்குத்திரும்பிச் செல்லும்மார்க்கத்தில் கான்பூருக்குப்போய் அங்கே வங்காளத்திலிருந்த தன் அதிபதியிடமிருந்து சமாசாரத்தை எதிர்நோக்கி நான்குநாள் காத்திருந்தான். அவ்வதிபதி வங்காளத்தில் ஒன்றன்பின்னொன்றாக மாங்கீர், பாகல்பூர், கார்ஹி, டண்டா என்பவைகளைக் கைப்பற்றியதும் பின்னும்மேற்செல்ல முயற்சித்துக் கொண்டிருப்பதும் ஆகிய செய்திகளைச் சக்கிரவர்த்திக்குச் சொல்லியனுப்பினான். அவ்வதிபதி அதிகவூக்கத்தோடு உத்தேசத்தை நிறைவேற்றினான். அன்றியும் தாவுத்கானை இரக்கமின்றித் துரத்திக் கொண்டேபோய்க் கடைசியாக அவனைக் கட்டாக அண்டையில் அடிபணியச்செய்தான். இவ்வரசன் அடிபணிந்தபின் பங்காளம் கைவசப்பட்டதென்றே கருதலாம்.

ஆக்பர் தனக்குக் கான்பூரில் கிடைத்த இச்சுப சந்தோஷச்செய்தியால் மிகமகிழ்ச்சியடைந்து வங்காளத்தின் படையெடுப்பு இதனோடுவிட்டதென்று எண்ணிக்கொண்டு டில்லிக்குப்போய் அங்கே சிலநாள்வேட்டையாடிக்கொண்டிருந்து புறப்பட்டு மீண்டும் ஒருமுறை ஆஜ்மீருக்குச்சென்றான். வழியிலும் வேட்டையாடிக் கொண்டேபோனான். நார்நூலண்டையில் அவனுடைய பஞ்சாப்புக் குஜராத்துகளின் அதிபதிகள்வந்து அவனைத்தரிசித்தார்கள். தன்னுடைய ஆட்சி எல்லா இடங்களிலும் குடிகளுடைய இதயங்களில் வேரூன்றி வருவதாக அவ்வதிபதிகளால் கேள்வியுற்றுத் திருப்தியடைந்தான். அவ்வதிபதிகளுடன் சிலவிஷயங்களைப்பற்றிச் சல்லாபனை செய்தபின் புறப்பட்டு ஆஜ்மீருக்குப்போய்க் கோரியைத்தரிசித்துக்கொண்டு, ஜாட்பூர் வனங்களிலிருந்து அடிக்

கடி தொந்தரவுகொடுத்துக்கொண்டிருந்த ஒரு சிற்றரசனின் தலையெடுப்பையடக்கிப் பின்பு பேட்பூர் சிக்ரியில் தனதிஷ்டக் கிரகத்தைச்சார்ந்தான்.

அவன் தான் சென்ற பலபிரயாணங்களிலும் தன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் பல இடங்களில் அநேக நிலங்கள் தரிசாய்க்கிடப்பதைக் கவனித்திருந்தான். நிலமோ நல்ல சாரமுடையதாயிருந்தது. குடிகளும் சோம்பேறிகளல்ல. ஆதலால் அதற்கு நிலமும் குடிகளும் காரணமல்லவென்று கண்டான். விஷயத்தை அடிப்படைவரை ஆராய்ந்து, குற்றம் கோமகனிடத்ததே என்றும் அரசிறை அளவுக்கு மிஞ்சியிருப்பதால் ஏழைகள் வேளாண்மையைக் கைக்கொள்ள முடியாதிருக்கின்றதென்றும் கண்டான். முதல்வருஷத்தின் ஆதாயத்தைக் கோனுக்கும் குடிக்குமாகப் பங்கிடத்தக்க ஓர் ஏற்பாட்டை அறிந்தேற்படுத்தக் கூடுமானால் இக்கேடு பரிகரித்து விடக்கூடியதே என்று அவன் கருதினான். இவ்விஷயமாகத் தீர்க்கவிசாரம் செய்தபின்பு அவன் தன்னிலங்களையெல்லாம் சோதித்து அவற்றைப் பத்துக்கோடி டங்கா வசூலாகக்கூடிய பகுதிகளாகப்பிரித்து அப்பகுதிகளொவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரியஸ்தனை நியமித்தான். அப்படி நியமிக்கப்பெற்ற ஒவ்வொருவருக்கும் கரோரி என்று பெயர்தந்தான். (டங்கா என்பது நமது ரூபாவுக்கு நாற்பதில் ஒரு பங்கான ஒருநாணயம். பத்துக்கோடி டங்காவுக்கு ஐம்பதினாயிரம் ரூபாவாகின்றது.) இக்கரோரிகள் தங்கள்தங்கள் பகுதிகளிலுள்ள நிலங்களை மூன்றுவருஷங்களுக்குள்ளாக விளைவுதரும் நிலைமைக்குக் கொண்டுவந்து இராஜாங்

கத்துக்குக் கந்தாயம் வசூலாகும்படியான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியவர்களாக இருந்தார்கள். இவ்வேற்பாடு நடந்தேறி நம்பிய நலமெல்லாம் நல்கியது.

இவ்வாறாக ஆக்பரின் ஆட்சியின் பத்தொன்பதாம் வருஷமானது இளய இந்துராஜ்யத்திற்கு ஒருவிஷயத்தில் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் சுபகரமானதாகவே இருந்தது. பெங்காலும் பேகாரும் புதிதாகச் சேர்க்கப்பட்டன. உண்மையில் விந்தியபர்வதங்கட்கு வடக்கே இந்தியா முழுமையும் உமாயூனின்புதல்வனதாட்சிக்குட்பட்டிருந்தது. இன்பங்களுக்கு விலக்காயிருந்த ஒரு துன்பமென்னவென்றால் மேற்கிந்தியா முழுவதிலும் பஞ்சமும் கொள்ளைநோயும் மிகுந்திருந்தது. இக்கேடு அநேகமாக எல்லாரையும் பாதித்தது. தவசதான்யங்களெல்லாம் அரியவிலைக்கு விற்றன. கால்நடைகளெல்லாம் பயிர்பச்சை யில்லாமல் மரப்பட்டைகளைத் தின்னவேண்டியிருந்தது. இப்பஞ்சம் ஆறு மாதம்வரை இருந்தது.

அடுத்த வருஷத்தின் (1575) முதற்பாகமெல்லாம் தாவுத்கானைத் துரத்துவதிலும் ஒரிசாவைச் சேர்த்துவதிலும் கழிந்தது. அந்தத் தாவுத்கான் என்னும் ஆப்கானியராஜன் டாஜுராவண்டைத் தோற்றோடியதும் பின் கட்டாக்கண்டை பிடிபட்டதும் முன்னமே சொல்லியிருக்கின்றோமல்லவா? அப்படி அவன் பிடிபட்டபோது அவன் ஆக்பருக்குப் பிரதிநிதியாக இருந்து ஒரிசாவை ஆட்சிபுரிவதென்ற உடன்படிக்கையின்மேல் ஆக்பரின் காரியஸ்தன் அவனை விட்டுவிட்டான். தாவுத்கான் அச்சமயத்தில் இசைந்த ஒப்பந்தத்தின்படி பின் நடந்துகொள்ளவில்லை. சமயம்பார்த்துக் கொண்டேயிருந்த

வாய்த்த முதற்றருணத்திலேயே கலகத்துக்காரம்பித்தான். அதற்கிரண்டு வருஷத்துக்குப்பின் நடந்த பெரிய சண்டையில் மொகலாய அதிபதியால் கொலைபட்டுயிரிழந்தான். ஆயினும் சிலகாலம்வரை ஒரிசாவையும் வங்காளத்தையும்பற்றி மொகலாய அதிபதிகள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருந்தது.

இபாதத்கானா என்னும் வித்தியா சபாமண்டப நிர்மாணம் இவ்வருஷத்தில் நிகழ்ந்த விசேஷித்த இதர சம்பவம். அது இவ்வருஷமுடிவில் நிறைவேறியது. அம்மண்டபம் நான்குபகுதிகளாகத் தடுக்கப்பட்டிருந்தது. மேற்குப்பாகம் ஸையத்து (மகம்மதுவின் பரம்பரையார்) களுக்காகவும் தெற்குப்பாகம் அறிவடைந்த வித்துவான்களுக்காகவும் வடபாகம் ஞானிகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. கிழக்குப்பாகம் சமஸ்தானத்தைச்சார்ந்த அதிபதிகளுள்ளும் பரிசனங்களுள்ளும் மேற்குறிக்கப்பட்டவர்களுள் ஒருவகையாருடைய கருத்தோடிசைந்தவர்களா யிருப்பவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தது. அக்கட்டிடம் முடிந்ததும் அக்பர் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளிலும் இதர புண்ணியதினங்களிலும் இராக்காலங்களில் அங்கே போய் அறை அறையாகச்சென்று அங்கே யிருப்பவர்களுடன் சல்லாபனை செய்துகொண்டிருப்பது வழக்கம். அவ்வவ்வறைகளில் இருப்பவர்கள் அரசனுக்குக் கவனிக்கப்படவும் பரிசுபெறவும் தக்கவனென்று எவனை நினைக்கின்றார்களோ அவனைச் சக்கிரவர்த்தியின்முன் பேட்டிசெய்விப்பார்கள். சக்கிரவர்த்தி அவன் திறமறிந்து விசேஷித்த சன்மானஞ்செய்வான். அங்கே சக்கிரவர்த்தியின் பேட்டிக்காக வந்தவர்களுக்குள் பரிசுபெறாதகன்றவர்கள் இல்லை.

அடுத்தவருஷம் (1576) சம்பவசூன்யமானது. ஆனால் அதை அடுத்ததாகிய (1577) வருஷம் முன்சொல்லிய ஒரிசாவின் (தாவுத்கான்செய்த) கலகத்தால் கவனிக்கப்படத்தக்கது. அக்கலகமானது, நிகழ்ந்துகொண்டிருக்கையில், அதிகபயங்கரமானதாக இருந்தது. ஆனால் தாவுத்கானும் அவனுடைய சிற்றப்பனும் இறந்தொழிந்ததோடு அப்பயங்கரமும் ஒழிந்தது. இவ்வருஷத்தில் அப்படியே இராஜபுட்டாணாவில் உபத்திரவம் இருந்தது. இராஜபுட்டாணாவிலுள்ள மற்ற ராஜாக்களெல்லாரும் ஆக்பருக்கிணங்கியிருந்தாலும் மேவார்ராணா மட்டும் இணங்கவேயில்லை. அவன் தன்னை மகாஉத்கிருஷ்டவம்சத்தவன் என்றெண்ணிக்கொண்டான். மற்றவர்களைப்போல ஆக்பருடன் விவாகசம்பந்தம் செய்வது மிகவும் இழிவான செயலென்பது அவனுடைய அபிப்பிராயம். வலியக்கிடைப்பதாக இருந்த ஆக்பரதுசம்பந்தத்தை அவன், தான் அதிக கஷ்டஸ்திதியில் இருக்கையிலுங்கூட ஏற்றுக்கொள்ளப் பின்வாங்கினான். ஜாட்பூர்வேந்தன் ஆக்பருக்கிணங்கினமையால் மிகுந்த பொருள்வருவாயுள்ள நான்கு ஜில்லாக்களைத் தன் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு மகோன்னத பதவியிலிருப்பதை அவன் (மேவார் ராணா) கண்கூடாகக்கண்டும் மறுதலித்துவிட்டான். ஆக்பரை லட்சியஞ்செய்யாமலே சுயாதிக்கம் பாராட்டி வந்தான். ராணா உடயசிங்கு 1568-ல் தன் ராஜதானியை இழந்துபோய் ராஜபிப்லாரண்யத்துக்கோடி அங்கே 1572-ல் உயிர்துறந்தான். அவன் மகன் பிரதாபசிங்கு தன் தகப்பனது முரட்டுத்தனத்தோடு தன்பாட்டன் சங்காராணாவின் பெருந்தன்மைகளையும் கொண்டிருந்தான். அவன் ராஜதானியும் பரிசனங்களும் இன்றி உழன்றமையால் அவனைச்சார்ந்தவர்கள் அதிகமெலி

வடைந்தார்கள். அவன், சிற்றூரானது கைவசமிழந்த கைம்பெண்போலத் தங்கள் வம்சத்தவர்களைவிட்டுப் பாழ்பட்டதில் அதிக வருத்தமுடையவனாக இருந்தான். அதை எப்படியாவது மீட்கவேண்டுமென்பது அவனுடைய உத்தேசம். சிற்றூரை இழந்ததற்கறிகுறியாக அவன் க்ஷவரம் செய்துகொள்ளாமல் தாடிவளர்த்தான். பொன் வெள்ளிக் கிண்ணிகளையொழித்துவிட்டு இலைகளில் உண்டான். புஷ்ப சயனத்திற்பள்ளிகொள்வதைவிட்டு புல்லணையிற்புரண்டான். அவனைச் சார்ந்தார்களும் அப்படியே செய்தார்கள். அதை அனுசரித்து இக்காலத்தும் அச்சந்ததியார் தங்கள் முன்னோர்க்குண்டான குறைவின்நினைவுக்கறிகுறியாகத் தங்கள் பொற்கிண்ணத்துண்டாலும் அதன்கீழ் ஒரு தழையும், பஞ்சமெத்தையிற்படுத்தாலும் அதன்கீழ் ஒரு புல்லும் வைத்துக்கொள்ளுகின்றார்கள். அவன் கோமால்மீயரில் இருந்துகொண்டு தன் தேசத்தைத் திருப்பிக்கொள்ளுதற்குவேண்டிய பிரயத்தினங்களைச் செய்துகொண்டிருந்தான். இச்செய்தி ஆக்பர் வருஷந்தோறும் செல்லுகிற வழக்கப்படி 1576 - ல் ஆஜ்மீருக்கு யாத்திரைபோயிருக்கையில் அவனுக்கெட்டியது. ஆக்பர் உடனே பிரதாபசிங்கை அடக்கும்படி சைனியத்தை ஜெயப்பூர் வேந்தனாகிய மான்சிங்கோடனுப்பினான். கோகண்டா என்னப்படுகிற ஹல்டிகாட் என்ற இடத்தில் 1576 - ல் இருசைனியங்களும் சந்தித்தன. அதில் பிரதாபசிங்கு முற்றிலும் தோற்று ஆரவல்லித்தொடர்களுக்கோடிவிட்டான். அவனைத்தொடர்ந்து அவனுக்குள்ளபலத்தையெல்லாம் ஒழித்து ஊரையெல்லாம் பாழ்படுத்தி வரும்படி ஆக்பர் ஒரு சைனியத்தை அனுப்பினான். சக்கிரவர்த்தி, தானே நேரில் மீவாருக்குப்போய்க் காரியங்களை ஒழுங்கு

பதித்தினான். பின்பு அதன்மேற்கேயுள்ள மால்வாவுக்குப் போய் பர்ஹான்பூரைச்சார்ந்த மாகாணங்களின் ஆட்சியைப் பற்றி ஒழுங்கு செய்துவிட்டுக் குஜராத்தின் காரியத்தை விருத்திசெய்தான். இவ்விஷயங்களில் 1577 - 8 வருஷங்கள் கழிந்தன. பின்பு அவன் பஞ்சாப்புக்குப் புறப்பட்டுப் போனான். சக்கிரவர்த்தி பஞ்சாப்புக்குப்போகும் மார்க்கத்தில் ஒரு விசேஷ சம்பவம் நிகழ்ந்தது அவன் டில்லியைக் கடந்துபோகையில் ஹாஜீ ஒருவன் சந்தித்துத் தான் ஐரோப்பாவுக்குப் போய்வந்ததாக அங்கேயிருந்து கொண்டுவந்த சில சாமான்களை அவனுக்குக் காட்டினான். அவன் அதைக்கொண்டுவந்து காட்டினான் என்பதைவிட அதிகமாகச் சரித்திரக்காரர்கள் ஒன்றும் சொல்லுகிறதில்லை. அத்துணிமணிகள் ஐரோப்பாவின் எப்பகுதியிலிருந்துவந்திருக்கும் என்பதையும் அதைக்கண்ட சக்கிரவர்த்தி முதலியோர் என்ன எண்ணியிருப்பார்கள் என்பதையும் நாம் ஊகிக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். ஆக்பர் பஞ்சாப்பில் சொற்பகாலந்தான் தங்கினான். பின்பு அவன் அதை விட்டுப்புறப்பட்டு டில்லிக்குத்திரும்பி வழக்கம்போல ஆஜ்மீருக்குயாத்திரைபோய் அங்கே ஓரிராத்திரிமாத்திரம் தங்கியிருந்து புறப்பட்டு ஒன்பதே வீரர்கள் தன்னுடன்வர அதிவேகமாக நாளுக்கு நூறுமயிலுக்கு மேலாகவே சவாரி சென்று மூன்றுநாள்மாலையில் பேட்பூர்சிக்ரியைச் சார்ந்தான்.

அடுத்த வருஷம் (1580) ராஜ்யம் அதிகமேலானவாழ்வுடையதாக இருந்தது. வங்காளத்தில் கலகமில்லை. அது மட்டுமல்ல; அங்கேயிருந்து ராஜாங்கத்திற்குப் பணவருவாயும் இருந்தது. மீவார் ராணாவை மட்டும் அக்காலத்தும் சக்கிர

வர்த்தியின் சைனியங்கள் தூரத்திக்கொண்டிருந்தன. அதைத் தவிர வேறெங்கும் சண்டையென்ற சத்தமே கிடையாது.

இந்துஸ்தானத்தில் உள்ள பலவேறு தேசங்களும் பலவேறுமன்னர்களால் ஆளப்பட்டு வந்த காலத்தில் அவ்வப்பகுதிகளின் க்ஷேமார்த்தமாக ஏற்பட்டிருந்த சுவதேச சுங்கங்கள் அத்தேசங்களனைத்தும் ஒரு குடைக்கீழ்வாழும் இக்காலத்தில் (ஆக்பரின் காலத்தில்) வேற்றுமை விளைத்தலுக்கேயன்றி வேறொன்றுக்கும் காரணமல்லாதிருக்கும் தன்மையை, ஆக்பர், தான்சென்ற பற்பல பிரயாணங்களிலுங்கண்டு, குறிப்பிட்டிருந்தான். பின்பு 1581 - ம் வருஷாரம்பத்தில் அந்த டாம்கா என்னும் உள்நாட்டுச்சுங்கத்தைத் தன்மாகாணங்களிலேயே எங்கும் இராவண்ணம் நீக்கினான். முன்னாண்ட மகமதியர்கள், (மகமதிய) மார்க்கானுசாரிகளல்லாத மற்றவர்கள் எல்லாரும் தலைக்கிவ்வளவு செலுத்தவேண்டுமென்று ஜிஸ்யா என்ற பெயரால் ஒருவரி ஏற்படுத்தியிருந்தார்கள். அதையும் ஆக்பர் அப்போதே (1581) அகற்றினான். மதவிஷயங்களில் தலையிடக்கூடாது; பிரஜைகளை அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நோக்கத்தின்படி பரமாத்துமாவைப் பணியும்படி விட்டுவிடவேண்டும்; என்பது சக்கிரவர்த்தியின் மகத்தானநோக்கம். அவன் இந்நோக்கத்தைத் தன் ஆயுள் முடியும்வரையும்கொண்டிருந்தான். வங்காளத்திலிருந்த விசுவாசமற்ற அதிபதிகள் சிலர் ஒன்று சேர்ந்து கலகஞ்செய்தார்கள். இதுதான் ராஜாங்க விஷயமாக அவ்வருஷத்தில் நிகழ்ந்த விசேஷசம்பவம். அவர்கள் தங்களுக்குள்ளாக ஐக்கியமில்லாதிருந்தமையால் மிக எளிதில் தோற்புண்டார்கள்.

அடுத்த வருஷத்தில் (1582) காபூலிலிருந்து படையெடுத்துவந்த தன் சொந்தச் சகோதரன் அக்கீம்மிர்சாவை எதிர்த்தகற்றும்பொருட்டு ஆக்பர் சைனியத்தோடு பஞ்சாப்புக்குப் புறப்பட்டான். ஆக்பர் பாணிபட்டைச் சேருவதற்குள்ளாக அவன் சகோதரன் லாகூர்வரை வந்துவிட்டான். ஆயினும் அவன் ஆக்பரின் வருகையைக் கேள்வியுற்றதும் திரும்பிப்போவதே நலமென்றெண்ணினான். அவ்வாறே அவன் லாகூர் மார்க்கத்தைவிட்டுப் பின்திரும்பிக் காபூலுக்கேயோடிவிட்டான். ஆக்பர் சர்க்கிண்டு, காலனூர், ரோடாஸ்களின் மார்க்கமாக அவனைத்தொடர்ந்துபோய் இப்போது அட்டாக்கிருக்கும் இடத்துக்குச் சமீபத்தில் இந்துநதியைத் தாண்டினான். தாண்டிச்செல்கையில் அங்கே ஒரு கோட்டைகட்டும்படி உத்திரவு செய்துவிட்டுச் சென்றான். பின்பவன் மேனோக்கிப் பிஷாவருக்குச்சென்று அங்கிருந்து ஒரு சைனியத்தோடு தன் மகன் ம்யூராட் என்பவனைக் காபூலைக் கைப்பற்றுமாறனுப்பினான்.

ம்யூராட் கெடுநெடென்று வளர்ந்திருப்பான். ஒல்லியான உடம்புடையவன். மகாகுடியன். அக்குடியினாலேயே பிற்காலத்தில் அவனும் அவனுடைய சகோதரன் தன்யாலும் ஆவியிழந்தார்கள். ம்யூராட் மிக விரைவாகச்சென்று கர்ட் காபூலண்டை தன்சிற்றப்பனைச் சந்தித்துத் தோற்கடித்தான். துணைப்படையோடு அவனைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த ஆக்பர் அவனுக்குப்பின் மூன்றுநாள் காபூலினுட்புகுந்தான். அங்கே அவன் மூன்றுவாரம்வரைத் தங்கியிருந்து தன்சகோதரனை மன்னித்துக் காபூலுக்கு அவனையே பின்னுமதிபதியாக நியமித்துக் கைபர் மார்க்கமாக லாகூருக்குப்

போய்ப் பஞ்சாப்பின் காரியங்களைச் சீர்ப்படுத்திவிட்டு டில்லியின் மார்க்கமாகப் பேட்பூர்சிக்ரியைச் சார்ந்தான். அப்போது அவன் அதிக பேட்பூர்சிக்ரியில் பலவகைத் தருமங்களைச் செய்துகொண்டும் நீதி செலுத்திக்கொண்டும் ராஜ்யகாரியங்களைச் சீர்ப்படுத்திக்கொண்டும் சிலகாலம் வீற்றிருந்தான்.

அடுத்த வருஷமும் முழுதும் அங்கேயே (பேட்பூர்சிக்ரியில்) இருந்தானென்று சொல்லலாம். அப்போதும் வங்காளம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. ஆனால் அங்கே சக்கிரவர்த்திக்குப் பிரதிநிதிகளிருந்தார்கள். அவர்கள் அப்போதப்போது கலக சம்பவங்களைச் சக்கிரவர்த்திக்கறிவித்துக்கொண்டிருந்தார்கள். சக்கிரவர்த்தியும் அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதங்களைப்பற்றிக் கற்பனையனுப்பிக்கொண்டே இருந்தான். கலகமும் அவ்வளவு பெரிதாக இருந்திருக்கவில்லை. ஆனால் அதிக அலக்கழிப்புக்கேதுவாக இருந்து இராஜாங்கத்திற்குரிய கந்தாய வசூலை அதிகமாகப் பாதித்தது.

1584-ம் வருஷத்திலும் ஆக்பர் பேட்பூர்சிக்ரியில் இருந்தான். அவ்வருஷத்தின் விசேஷ சம்பவங்கள்: வங்காளத்தின் குழப்பம் சாந்தமெய்தியது; குஜராத்தில் குழப்பம் தலையெடுத்தடங்கியது; அசீர்கர், பர்கான்பூர்களின் அதிபதிகள் விரோதப்பட்டது; தக்ஷிணத்தின் குழப்பங்கள்; காபூலை அப்போது ஆண்டுகொண்டிருந்த அதிபதியின் (சக்கிரவர்த்தியின் சகோதரனின்) மரணம்; என்பவையே. அக்கலகங்களெல்லாம் அடக்கப்பட்டன. காபூலுக்குப் புதிய அதிபதி நியமிக்கப் பெற்றான். அவ்வருஷமுடிவில் ராஜ்யம் நல்வாழ்வோடிருந்தது.

சக்கிரவர்த்தியோடு விசேஷ ஐக்கியப்பட்டு அவனால் பாதுகாக்கப்பட்டிருந்த அரசர்களுள் ராஜபுதனத்தான் என னும் ஜயப்பூர்வேந்தன் ஒருவன். அவன் சக்கிரவர்த்திக்கு ராணுவ விஷயங்களில் அதிக உதவி செய்திருந்தான். அது மட்டுமல்ல; அவனுடைய உறவினனாகிய ராஜாமான்சிங்கு சக்கிரவர்த்தியின் சைனியத்தில் உயர்ந்த உத்தியோகம் பெற்றிருந்தான். பிரஸ்தாபகாலத்தில் இந்த ராஜபுத்திர வேந்தன் பஞ்சாபுக் கதிபதியாக இருந்தான். அவன் குடும்பத்திலிருந்து சக்கிரவர்த்தி தன்குமாரனாகிய (பிற்காலத்தில் ஜகாங்கிர் சக்கிரவர்த்தி யென்னப்பெற்ற) சலீம் ராஜகுமாரனுக்கு ஒருபெண்ணை விவாகத்துக்குத் தேர்ந்தெடுத்தான். அவ்விவாகம் பேட்பூர்சிக்ரியில் மகாஆடம்பரத்துடன் நடந்தேறியது. ராஜபுத்திரர்கள் மகமதியருடன் விவாக சம்பந்தம் செய்தலை இவனுடைய (ஆக்பருடைய) ஆட்சிவரை முற்றும் வெறுத்திருந்தார்கள். ஒன்றுபடுத்தவேண்டுமென்பதே ஆக்பருடைய நோக்கம். ஜாதிபேதமும் மதபேதமும் பற்றி மனிதருள் பேதமிருத்தல் கூடாதென்னும் தன் எண்ணத்தை நிறைவேற்றக்கருதினான். அநேகர் முரட்டுத்தனமாக இருந்தார்கள். அவர்களுள்ளும் ராஜபுத்திரர்கள் இணங்குவது அதிக பிரயாசையாக இருந்தது. மீவார்ராணா கடைசிவரைக்கும் சுவாதீனப்படவே இல்லை. மற்றவர்கள் இணங்கினார்கள். இந்தியாவில் முன்னொருபோதும் கேட்டிராத நற்குணங்கள் பல ஆக்பரில் குடிகொண்டிருப்பதைக் கண்டார்கள்.

அவன் ஏற்படுத்தும் கொள்கைகளெல்லாம் முன் இந்தியாவில் ஒருபோதும் காதாலும் கேட்டிராத அவ்வள வு

மையானவை என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல. அவனுடைய பார்வையில் யோக்கியதை யாரிடத் திருந்தாலும் யோக்கியதையாகவே இருந்தது. இந்துவிடத்திலிருந்தாலுஞ்சரி, உஸ்பேக் மகமதியனிடத்திருந்தாலுஞ்சரி, ஒன்றை அபிமானிப்பதும் மற்றதை அசட்டைசெய்வதும் என்பது இல்லை. ஒருவனுக்கு யோக்யதை இருந்தால் அதற்கு தக்கபடி உயர்ந்த உத்தியோகம் அல்லது கவுரவம் பெறலாம்; ஜாதி சமயங்கள் அதைத் தடைசெய்யமாட்டா. ஆதலினாற்றான் பகவந்ததாஸ், மான்சிங்கு, தோடார்மால் என்ற இவர்களைப் போன்றவர்கள், தாங்கள் தங்கள் சுவாதீனமான பிதிரார்ஜித ராஜ்யங்களை வகித்திருந்தால் பெற்றிருக்கக்கூடியதைவிட மிக உன்னதமான பதவியை இம்மகம்மதிய சக்கிரவர்த்தியிடத்தில் பெற்றிருந்தார்கள். அவர்கள் சக்கிரவர்த்தியின் மாகாணங்களை யாட்சிபுரிந்தும் சைனியங்களில் ஆதிபத்தியம் வகித்தும் வந்தார்கள். அதுமட்டுமல்ல; அதுவரையில் ஐக்கியமின்றி ஒன்றோடொன்று மாறுபட்டிருந்த மாகாணங்களை, அவற்றின் அந்தஸ்துக்காவது கவுரவத்துக்காவது யாதொரு குறைவும் இன்றியே ஒன்றுபட்டொருகுடைக்கீழிருக்கச்செய்வதுகருதி;முன்னிருந்தவேறுபாடுகளையும் துரபிமானங்களையும் போக்குவதே நோக்கமாக உடைய அவ்வாக்பர் சக்கிரவர்த்தியின் மந்திராலோசனைச் சபையிலும் அவர்கள் இடம்பெற்றார்கள்.

ஆக்பர் தன்னோக்கத்தை நிறைவேற்றுவதற்குச் சுதேசராஜாக்களோடு விவாகசம்பந்தஞ்செய்தலை ஒருமார்க்கமாகக் கொண்டான். விவாகத்தைப்போல, இருவேறு திறத்தாரை ஒன்றுபடுத்துவது வேறொன்றுமில்லை என்பது அவன்

கருத்துடன் ராஜபுத்திர வேந்தர்களும் தாங்கள் சக்கிரவாத்
திக்கு உறவினர்களாக ஏற்படுவது தங்கள் நிலைமையை ஸ்தி
ரப்படுத்துகிறதென்று கண்டார்கள். அவர்கள் ஆக்பருக்கு
முன் இந்துஸ்தானம் இருந்த நிலைமையைக்கவனித்தபோது
இதற்குமுன் ஐந்து நூற்றாண்டுகளாக இந்தியாவின்மீது
படையெடுத்துவந்த மகமதியர், ஒற்றுமையின்றிச் சண்டை
யும் சச்சரவுமேயுண்டாக்கியகல, இவன், (ஆக்பர்) ராஜ்யதந்
திரங்களில் சிறிதும் அனுபவமில்லாத சிறுவனாகத் தங்கள்
முன்வந்து தான்ஜெயித்தஇடங்களிலெல்லாம் நல்லஆளுகை
யும் ஒழுங்கும் பெருமையும் நீதியும் நாட்டியதும் இவ்வேற்
பாடுகளை நாட்டுவது கருதியே தேசங்களைஜெயித்தான் என்ப
தும் அவன் தங்களிடத்தில் தங்கள் ஜாதிமதாசார பேதங்கள்
காரணமாக வித்தியாசம் பாராட்டவில்லை என்பதுங்காணும்
போது, ஆக்பரின் நடக்கையில் சாதாரணமனிதசுபாவத்
துக் கதீதமாகத் தெய்விகச் செயல்கள் சில இருக்கக்கண்டு
(தேவாவதாரத்தில் நம்பிக்கையுடைய) அவர்கள் அவனை
தேவாவதாரமென்றே கருதியிருப்பார்கள். ஆதலினாலேயே
அவர்கள் தங்கள் ஜாதி, சமயம், அக்கம்பக்கத்தியவர்களு
டைய அபிப்பிராயம், என்பவைகளைக் கவனியாமலே அவ
னுடைய ஏற்பாட்டுக் கிணங்கினார்கள். அவனும் அதற்
கேற்றபடி அன்னியமதங்களில் துவேஷம் கொள்ளாம
லும் ஒருவரைத்தேறினால் அவரில் ஒருபோதும் ஐயம்
கொள்ளாமலும் தயாளமும் உன்னதமுமான ஏற்பாடுகளை
ஏற்படுத்தியும் இருந்தான். ராஜபுத்திரர்கள், இதரர்களை,
அவர்கள் இந்துக்களாக இராததுபற்றி அசுத்தமானவர்
கள் என்றுகருதும் துரபிமானங் கொண்டிருந்தது அவ
னுக்குப் பிரியமில்லை. தன்னைப்போலவே அவர்களும் அன்

வியாதி சமயங்களில் ஔஷதம் பிராசனிக்கக்கூடாது என்பது அவனுடைய அபிப்பிராயம். இதை அவன் வெளியிட்டபோது அவர்களுள் (ராஜபுத்திர வேந்தர்களுள்) ஒருவன் தவிர எல்லோரும் அதற்கிணங்கினார்கள். வேறு ஜாதியாருடன் விவாகசம்பந்தஞ் செய்யக்கூடாதென்னும் தங்கள் சம்பிரதாயத்தைக் கடந்துநடத்தல், தங்கள் தேசத்துக்கு வாழ்வும் தங்களுக்குக் கௌரவமும் மதிப்புங்கொடுக்கும் ஏற்பாட்டை அவசியம் பலப்படுத்தும் என்று அவர்கள் கருதினார்கள்.

ஆனால், காபூலில் தன் தம்பி இறந்தான்; படாக்ஷனின் எல்லைமாகாணத்தை உஸ்பெக்கியர் கைப்பற்றிக்கொண்டார்கள்; அவர்கள் காபூலையும் கைப்பற்றப் பார்க்கின்றார்கள்; என்று தன் ஆட்சியின் முப்பத்தொன்றாம் வருஷாரம்பத்தில், கேள்வியுற்றான். நிலைமையானது மிகவும் அபாயமானதாக இருந்ததனால் அந்தக்ஷணமே தான்நேரில் அங்கே போக வேண்டுமென்று தீர்மானித்தான். அப்படியே நவம்பரிடையில் ஒரு சேனையுடன் பஞ்சாப்பை நோக்கிப்புறப்பட்டு அடுத்தமாதக் கடைசியில் சட்லிஜைச் சார்ந்து அங்கிருந்து நேரே ராவல்பிண்டிக்குப் போனான். காபூலில் காரியங்கள் தனக்கு அனுகூலமாகக் கூடிய நிலைமையில் இருப்பதாக அறிந்து தன்னுடைய புதிய அட்டாக் கோட்டைக்குப் போனான். அங்கிருந்துகொண்டு தன் சேனையின் ஒருபகுதியைக் காஷ்மீரைச் சயிக்கும் பொருட்டுப் பகவந்ததாசுடன் அனுப்பினான். பெலூசியர்களை அடக்குதற்கும் ஒருபகுதியை அனுப்பினான். ஸ்வாத்தைச் சுவாதீனப்படுத்துதற்கும் ஒன்றனுப்பினான். இம்மூன்று படையெடுப்புகளில் மூன்

[illegible] கபூரயம் சேர்ந்தது. யுசப்சேயர்கள் முதலில் [illegible]ளோடு எதிர்த்த மொகலாயசைனியத்தை முறியடித்தோட்டி விட்டார்கள். அதுமட்டுமல்ல; பின்பு அக்[illegible] தனக்கு மிகவும் வேண்டியவனாக இருந்த பீர்பால்[illegible] கீழ் அனுப்பிய துணைப் படைகள் வந்தபோதும் எதிர்த்[illegible] எண்ணாயிரம் வீரர்களைத் தொலைத்துவிட்டார்கள். பிரா[illegible] குலத்திற் பிறந்தவனும் மகாகவியும் சங்கீதத்தில் வி[illegible]னனும் தயாளசிந்தையுடையவனும் ஆகிய பீர்பால்வே[illegible]னும் அப்போரில் ஆவியிழந்தான். அவ்வாறு மொகலா[illegible]யர்கள் ஒருபோதும் தோல்வியடைந்ததில்லை. அந்த[illegible] பரிகரிப்பதற்காகச் சக்கிரவர்த்தி தனது சிரேஷ்ட சே[illegible] பதியாகிய தோடார்மாலை அவனுக்குத் துணையாக மான்சி[illegible] என்னும் ஜெயப்பூர்வேந்தனைச் சேர்த்தனுப்பினான். அ[illegible] தலைவர்கள் ராணுவங்களைச் சாக்கிரதையாக நடத்திக்கொண்டேபோய்க் கடைசியாகக் கைபர்கணவாயில் யுசப்சேயர்களை எதிர்த்து முறியடித்தார்கள்.

இதற்குள் காஸ்மீரை நோக்கிச்சென்ற சைனியம் சிறி[illegible]தளவுக்குச் செயம்பெற்றன. அச்சேனாதிபதிகள் சூலியால[illegible] கணவாய்களைச் சார்ந்ததும் அது, அதைஆளும் மகமதியவா[illegible] சனால் வழியடைக்கப்பட்டிருத்தலைக்கண்டார்கள். அ[illegible] ஆகாரத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரிக்[illegible] சிலகாலம் காத்திருந்தார்கள். ஆயின் மழையும் பனி[illegible] வருத்தியது. அதைவிட்டுப் புறப்படுவதற்குள் முன்கூறி[illegible] யுசப்சேயர்களால் நேர்ந்த அபஜயத்தைக் கேள்விப்பட்டார்கள். இருந்தபிடமும் அதனால் இழந்து காஸ்மீர் வேந்தனைப் பெருக்குமாத்திரம் ஆக்பருக்குக் கீழ்ப்பட்டவனாக இருக்கு

மாறு உடன்படுத்திவிட்டு ஆக்பரிடம் திரும்பினார்கள். சக்கிரவர்த்தி அவர்களது தைரியக்குறைவை வெறுத்து அவர்களை விருப்போடேற்றுக்கொள்ளாமல் அவர்களைத் தன் சமுகத்துக்கு வராவண்ணம் விலக்கினான். ஆனால் ஆக்பருடைய மனம் நிலைத்து வர்மஞ்சாதிக்கக்கூடியதல்ல. ஆதலின் அவன் அவர்களைச் சீக்கிரமே மன்னித்து விட்டான்.

மூன்று படையெடுப்புகளில் பெலூசியர்மீது சென்றதொன்றுமட்டும் உடனே ஜயம்பெற்றது. இக்கடியவீரர்கள் தடைசெய்யாமல் மொகலாய சக்கிரவர்த்திக்குக் கீழ்ப்பட்டார்கள். தோடார்மால், மான்சிங்குகளின் முயற்சியால் கைபர்கணவாய் சுவாதீனப்பட்டவுடன் ஆக்பர் ஜய்ப்பூர்வேந்தனுடைய சுற்றத்தானை மான்சிங்கைக் காபூலுக்கு அதிபதியாக நியமித்து வேண்டிய ராணுவத்துடன் அவனை அங்கே அனுப்பினான். அவனுக்குப் பதிலாக யுசப்சேயர்நாட்டில் தங்குதற்கென்று வேறு சைனியத்தைஅனுப்பினான். பிஷாவரையும் பத்திரமாகக்காக்கும்படி செய்தான். பின்பு ஆக்பர் லாகூருக்குத் திரும்பிவிட்டான். அங்கிருந்து காஸ்மீரின் மீது இரண்டாமுறை படையனுப்பினான். இச்சைனியங்கள் 1587 கோடைகாலத்தில் கணவாயைச்சார்ந்தன. சார்ந்ததும் சிரீநகர் அரசனுக்கு விரோதமாகக் கலகம் கிளம்பியது. ஆதலின் சக்கிரவர்த்தியின் சைனியங்கள் அத்தேசத்துட் பிரவேசித்துச் செயங்கொள்ளுதற்கு யாதொரு தடையும் இல்லாதிருந்தது. இதனால் அது மொகலாய ராஜ்யத்துக்குட்பட்டு ஆக்பருக்குப்பின் மொகலாய சக்கிரவர்த்திகளுக்கு வசந்தகாலத்தில் தங்கும் இடமாக ஏற்பட்டது. கைபர்கணவாயின் பிரவேசஸ்தானத்தில் இருக்கும் ஜம்

ரூத்தைச் சேர்வதற்கு மான்சிங்கு வேறொரு மலைஜாதியா ருடன் சண்டைசெய்து ஜெயிக்கவேண்டியதாக இருந்தது. ஆயினும் அவன் காபூலையடைந்து நிலையான ஆட்சியைத் தாபித்தான். ஆயின் காபூலியர்களும் அவர்களின் அதிபதி களுந் தங்களுக்கு ராஜபுத்திரவேந்தனின் ஆட்சியில் பிரியமில்லை யென்று ஆக்பரிடம் புகார்செய்தார்கள். அப் போது வங்காளத்தில் கெட்டிக்காரனுடைய ஆட்சி அவசிய மாக இருந்தது. ஆதலினால் ஆக்பர் மான்சிங்கை வங்காளத் தின் ஆதிபத்தியத்துக்கு அனுப்பிவிட்டுக் காபூலின் ஆதி பத்தியத்துக்கு ஒருமகமதியனை அனுப்பினான். அப்போ தே தானும் அவ்விராச்சியத்தைக் கண்காணிக்க வருவ தாயும் சொல்லியனுப்பினான்.

அவன் முதலாவது சிந்தைச் (1588) சுவாதீனப் படுத் திக்கொண்டான். பிற்பாடு அடுத்த வசந்தகாலத்தில் காஸ் மீரத்துக்குப் புறப்பட்டான். பிம்பாரைச்சேர்ந்ததும் தனது அந்தப்புறத்து ஸ்திரீகளை மூராட் ராஜகுமாரனிடம் விட்டுத் தான்மட்டும் ஒரே அடியாகச் சிரீநக்ருக்குச் சென்றான். மழைக்காலம் வரும்வரை அங்கே தங்கியிருந்து கொண்டு சூழவுள்ள இடங்களைச் சந்தித்துக்கொண்டிருந்தான். மழைக்காலம் வந்ததும் தன் ஸ்திரீகளை ரோடாசுக் கனுப்பினான். பின்பவர்கள் அவனை அவன் காபூலுக்குச் செல்லும் வழியில் அட்டாக்கில் சந்தித்தார்கள். மலைச்சாதியாரிடம் விரோதமொன்றும் இல்லாமையால் அவ்விராஜதானிக்கு (காபூலுக்குச்) செல்வதில் அவனுக்கு யாதொரு தடையும் இல்லாதிருந்தது. ஆதலினால் ஆக்பர் அட்டாக்கில் இந்நதியைக்கடந்து அங்கிருந்து யாதொரு பிரயாசையும் இல்லா

யில் காபூலைச் சேர்ந்தான். அவன் அங்கே இரண்டுமாதம்
தங்கித் தோட்டங்களையும் மற்ற விசேஷித்த இடங்களை
யும் பார்த்துமகிழ்ந்து கொண்டிருந்தான். அவன் அங்கே
பிரசன்னமாயிருந்ததில் அங்கேயிருந்த பிரபுக்களும் பஞ்
சைகளும் ஆகியஎல்லாருக்கும் நன்மையுண்டென்கின்றார்
கள். அவன் காபூலில் இருக்கையிலேயே ராஜாதோடர்மா
லின் மரண (1589 - நவ-10) சமாசாரம் எட்டியது. அக்ப
ரின் நம்பிக்கையுள்ள மற்றொரு இந்துநண்பனாகிய ஜேயப்
பூர்வேந்தன் பகவந்ததாசும் அதேதினத்தில் (1589 - நவ
10-ல்) மரணமடைந்தான். ஆதலால் ஆக்பர் காபூல், குஜரா
த்து, ஜான்பூர் என்பவைகளின் ஆட்சிகளைப்பற்றிப் புதிய ஏற்
பாடுகள் செய்துவிட்டு இந்துஸ்தானத்தை நோக்கித் திரும்
பிவிட்டான்.

நாம்முன்னமே குறித்தபடி வங்காளத்தின் ஆட்சியைப்
பற்றி முன்பே ஏற்பாடுசெய்து விட்டான். 1590 - ம் வரு
ஷாரம்பத்தில் அவன் தன்னூருக்குப்போகும் மார்க்கத்தில்
லாகூருக்குவந்தான். அவனுடைய செவிலியின் புதல்வனும்
குஜராத்துக்குப் புதிதாக நியமிக்கப்பெற்றவனுமாகிய அதி
பதி காத்தியாவார் கட்சுவேந்தர்களுடன் விரோதப்பட்டிருப்ப
தாக அவன் (ஆக்பர்) அங்கே லாகூரில் இருக்கையில் செய்தி
யெட்டியது. அவ்விரண்டு தேசங்களும் சக்கிரவர்த்தியின்
ராச்சியத்தோடு சேர்க்கப்பட்டன. மேற்கிந்தியாவில் பல
வாறு தொந்தரவுகளை உண்டாக்கிக்கொண்டிருந்த அவ்வாப்
கானிய வேந்தனும் தற்கொலை புரிந்துகொண்டான். இவற்
றோடு அவ்விரோதமும் ஒழிந்தது. சக்கிரவர்த்தி அப்போது
லாகூரிலிருந்தமையால் சிந்தின்கலகங்களை முற்றும் அடக்கு

தற்கு வசதியாகவிருந்தது. ஆயின் அம்மாகாணத்தின் காரியங்கள் பிரதிகூலமாக இருந்தன. அம்மாகாணத்தை முற்றும்ஜெயிப்பது, எதிர்பார்த்திருந்ததைவிட அதிக கஷ்டமாகமுடிந்தது. அதிகசைனியங்களும் எச்சரிக்கையும் வேண்டியிருந்ததனால், அதுவிஷயத்தில் இரண்டுவருஷஞ்சென்றது; அதற்குள்ளாகக் காஸ்மீரத்தில் கலகங்கிளம்பியது.

சக்கிரவர்த்தி இந்த இரண்டுவருஷங்களும் லாகூரில் தங்கியிருந்தான். சிந்தின் காரியங்கள் அனுகூலப்பட்டன என்று அறிந்தவுடன் அவன் தன்சேனைகளைப் பீம்பாருக்கனுப்பிவிட்டுத் தான் சேனாப்கரையில் வேட்டையாடிக்கொண்டிருந்து பின் புறப்பட்டு, முன்சென்ற தனது சைனியத்தைச் சாரும்படிபோனான். இதற்குள்ளாக முன்சென்ற வீரர்கள் தங்களை எதிரிகள் பலமாகத்தாக்கினும் லக்ஷியஞ்செய்யாது அவர்களை முறியடித்துக் கணவாயில் வழிபெற்றுச் சென்றார்கள் என்றசெய்தி அவனுக்கு (சக்கிரவர்த்திக்கு) வழியில் எட்டியது. இதனால் எதிரிகளின் உபத்திரவம் ஒழிவதற்கு வழியேற்பட்டது. ஏனென்றால் கலகக்காரத்தலைவனின் சைனியங்கள் அவனுடையசெயலில் வெறுப்புடையவர்களாக இரவில் அவன்மேற்பாய்ந்து அவனுடைய் தலையை வெட்டி அதை ஆக்பருக்கனுப்பினார்கள். பின்பு ஆக்பர் ஸ்ரீநகரை நோக்கிச்சென்று ஆட்சியின் காரியங்களை ஒழுங்குபடுத்துவதில் ஏற்பட்டு எட்டுநாள்வரை அங்கேதங்கிப்புறப்பட்டு பாரமுலாவழியாக ரோடாசுக்குப்போய் அங்கிருந்து லாகூருக்குப் போயினான். சக்கிரவர்த்தியின் அதிபதியான ராஜா மான்சிங்கு ஒரீசாவைச் சக்கிரவர்த்தியின் ராச்சியங்களுடன் நிரந்தரமாகச் சேர்த்துவிட்டான் என்றசெய்தி அவ

னுக்கு (சக்கிரவர்த்திக்கு) அங்கே எட்டியது. மான்சிங்கு தான் ஓரிசாவில் பிடித்த நூற்றிருபது யானைகளைச் சக்கிரவர்த்திக்குக் காணிக்கையாக அனுப்பினான்.

விந்திய பர்வதங்களுக்குத் தெற்கேயுள்ள தக்ஷிண மாகாணங்களைச் சக்கிரவர்த்தியின் ஆட்சிக்குட்படுத்தும் பிரயத்தனம் அடுத்த வருஷந்தொடங்கியது. அது எட்டு வருஷம் வரை நிகழ்ந்தது. மொத்தத்தில் பிரயத்தனம் வீணாகவில்லை, ஜயகரமாகவே முடிந்தது. டௌலதாபாத், கேர்வா, நாசிக், அசீர்கர், ஆமத்நகர்என்ற வலுத்த இடங்கள் நீண்ட முற்றுகைகளுக்குப்பின் சக்கிரவர்த்தியின் சைனியங்கட்குச் சுவாதீனப்பட்டன. ஆமத்நகரைச்சார்ந்த மாகாணங்கள் 1637 வரை பூர்ணசுவாதீனப்படாவிட்டாலும் மொகலாயர்கள் ஒரு நூற்றாண்டு வரையாவது வகித்திருக்கக் கூடிய கௌரவத்தை அப்போதையஸ்திதி ஆக்பருக் களித்ததென்பதிற் றடையில்லை.

ஆக்பர் பதினான்கு வருஷம் லாகூரில் கச்சேரிசெய்துகொண்டிருந்தான். பின்பு 1598-ல் தென்னிந்தியாவை நோக்கி வரவேண்டியவனாயினான். ஆக்பர், அசீர்கர் ஆமத்நகர்களைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு காண்டேஷ், பேரார்களின் அதிபதியாக தன்யால் ராஜகுமாரனையும் ஆமத்நகரைச்சார்ந்த மாகாணங்களை ஜயிப்பதற்கு அபூல்பேசலையும் ஏற்படுத்திவிட்டு 1601 வசந்தத்தின்போது ஆக்ராவை நோக்கிப் புறப்பட்டான்.

ஆக்பரைத் தத்காலம் ஆக்ராவுக்குப் போம்படி செய்த செய்த சம்பவம் மிகவும் விசனகரமானது. சலீமின் விஷயம்

இளமைவிநாட்டு எப்போதும் சக்கிரவர்த்திக்குக் கவலைக்கிடமாக இருந்தது. அவன் மனிதனாக வளர்ந்த பின்பும் அது தீர்ந்தபாடில்லை. பிற்காலத்தாரால் ஜகாங்கீர்சக்கிரவர்த்தி என்றழைக்கப்பெற்ற அச்சலீம் மிக குரூரசுபாவமுடையவன். தனக்குண்டாகுங் கோபங்களை அடக்கிக்கொள்ள அவனால் இயலாது. அவன் ஆதிமுதற்கொண்டே அபூல்பேசலில் துவேஷங்கொண்டிருந்தான். சக்கிரவர்த்தியிடத்தில் அபூல்பேசலுக்கிருந்த செல்வாக்கைக்கண்டு இவனுக்கு (சலீமுக்கு) உண்டான பொறாமை கொஞ்சமல்ல. அன்னிய மதஸ்தரில் துவேஷங்கொள்ளும் மற்ற மகமதியர்களைப்போலிராமல் ஆக்பர் சர்வமதத்தர்களையும் ஒப்பநோக்கும் உன்னத நோக்கமுடையவனாக இருப்பதற்கு இவ்வபூல்பேசலே காரணமென்று சலீம் கருதினான். இதுதான் இவனுக்கு அபூல்பேசலின்மீது வெறுப்புண்டாவதற்குக் காரணம். தன் மகனுக்குண்டாயிருந்த வெறுப்புச் சிறிது தணியும் என்று கருதித்தான் ஆச்பர் அபூல்பேசலைத் தெற்கே அனுப்பினான். பின்பு சலீமை ஆஜ்மீருக்குச்சிரேஷ்டாதிபதியாக நியமித்து, அப்போது மீண்டுங்கிளம்பியமீவார் ராணாவின்கலகத்தை அடக்கும்படி இரண்டசைனியத்தோடு அனுப்பினான். பிரசித்திபெற்ற ராஜாமான்சிங்கையும் சலீமுக்குத் துணைபுரியும்படி கூட்டியனுப்பினான். இவ்விரு ராஜகுமாரர்களும் மீவாரை நோக்கிப் புறப்பட்டுப் போனார்கள். இதற்குள்ளாக வங்காளத்தில் கலகம் கிளம்பியதாகச் செய்திவந்தது. ராஜமான்சிங்கு வங்காளத்தின் சிரேஷ்டாதிபதியாதலால் அங்கேயுண்டான கலகத்தை யடக்குதல்நிமித்தம் வங்காளத்துக்குத் திரும்பிவிடவேண்டியவனாயினான். உசாத்துணைக்கும் ஒருவருமின்றி ஒருங்கே பெருத்தசைனியமும் , கையில் இருந்தமை

மால் சலீம் தெற்கே தன் தந்தை இல்லா திருந்ததைச் சமய மாகக்கொண்டு சிம்மாசனத்தைத் தைரியமாகக்கைப்பற்றத் தீர்மானித்தான். உடனே மீவார்ப்பிரயாணத்தை விட்டுவிட் டுத் தன் சைனியத்துடன் ஆக்ராவுக்கு ஆத்திரமாகத்திரும்பி னான். அப்போது அங்கேயிருந்த கோட்டைத்தலைவன் ரா ஜிகவர் சமூகத்தினனாகச் சலீமைப்புறத்தேவிட்டுக் கோட் டைக்கதவை யடைத்துக்கொண்டான். ஆதலால் சலீம் அல காபாத்துக் கோடிக் கோட்டையைச் சுவாதீனப்படுத்திக் கொண்டு அயோத்தி பேகார் மாகாணங்களைக் கைப்பற்றி ரா ஜா என்னும் பட்டத்தையும் வகித்தான்.

இச்சம்பவங்கள்தான் ஆக்பரை ஆக்ராவை நோக்கிப் புறப்படச்செய்தன. சலீம் இவ்வாறு நடந்துகொண்டதற்கு அவனது மூர்க்கசுபாவமே காரணமென்று ஆக்பர் கருதி னான். ஆதலால் அவனைத்தண்டிக்கக் கருதாது வழிப்படுத்த வேண்டுமென்றே கருதினான். அவ்வாறே சக்கிரவர்த்தி சலீமுக்கு ஒருகடிதம் எழுதியனுப்பினான். அதில் "நீ மீண் டும் என் ஆதிக்கத்துக்குட்படும்பக்ஷத்தில் உன்னை எப்போ தும்போல ஆதரித்து வருவேன். இல்லையேல் பெருந்துன் பத்துக்காளாவாய்" என்று குறித்திருந்தான். சலீமுக்கு இக்கடிதம் கிடைக்கையில் ஆக்பர் சொற்பதொகையினராக இருந்தாலும் தேர்ந்தவர்களான வீரர்களுடன் ஆக்ராவை நோக்கி வந்துகொண்டிருந்தான். சலீம் அக்கடிதங்கிடைத் ததும் ஆலோசித்துப்பார்த்து தன்னிலைமையை நிர்வகிப்பது சாத்தியமல்லவென்றும் தான்பிடிவாதமாயிருந்தால் தனக் குப் பட்டத்துரிமையே பறந்துவிடுமென்றும் கண்டு, மிகப் பணிவாகச் சக்கிரவர்த்திக்குப் பதில் எழுதினான். ஆயினும்

அவனுடைய [illegible] ஆக்பருடைய வார்த்தைகளுக் கிசைந்தனவாக இருக்கவில்லை. தன் தகப்பன் சைனியத் துடன் தக்ஷிணத்தில்தான் இருக்கிறான் என்பதை [illegible] நேரத்துக்குப்பின் கேட்டுப் பெருத்த சைனியத்துடன் [illegible] தந்தையைச் சந்திக்கக்கருதி இடாவா [illegible] கொண்டிருந்தான். ஆயினும் ஆக்பர் மோசம் [illegible] "சொற்பசைனியங்களுடன் இங்கேவா, அல்லது [illegible] அலகபாத்துக்குப்போ" என்று தன்மகனுக்கு [illegible] பினான். சலீம் பின்னையதையே கைக்கொண்டான். [illegible] ஓரிசா வங்காள மாகாணங்களின் வருவாயைப்பெற [illegible] ளுகிறதென்று வாக்குப்பெற்றுக்கொண்டு அலகபாத் [illegible] சென்றான் என்கிறார்கள். எப்படியோ அவன் அம் [illegible] களின் வருவாயை அடைந்துவந்தான் என்பது நி [illegible] ஆக்பர் இவ்வாறு இசைந்ததற்குக் காரணம் அப்போது [illegible] னிடத்திருந்த சைனியம் சொற்பமென்று கருதியதோ அல் லது தன்சொந்தப் புதல்வனையே விரோதியாகக்கொண்டு போர்செய்ய மனமில்லாமையோ அல்லது அவன்மேல் இரு க்குள்ள வாஞ்சையினால் அவனை உபத்திரவிக்க மனமில் லாமையோ அல்லது இம்மூன்று காரணமும் ஒன்றுகூடி யோ அறியோம். ஆக்பர் சலீமை நல்வழிப்படுத்தும்படி எவ் வளவு முயற்சித்தாலும் அவன் திருந்தவில்லை. நல்லஞான சக்தியும் தீர்க்கவயிரம் கொள்ளும் சுபாவமும் உடைய [illegible], அபூல்பேசல் தக்ஷிணத்திலிருந்து சொற்பசைனியத்துடன் தி ரும்பிவருகின்றான் என்றசெய்தி அறிந்து ஆர்ச்சாவேந்தனை யேவி அவனை (அபூல்பேசலை) வழிமறித்துக் கொலைசெய் வித்துவிட்டான்.

தன் பிள்ளைகள் கொலையுண்டது ஆக்பருக்குப் பெருத்த கஷ்டம். ஆனால் பாக்கியவசத்தால் அவன் அக்கொலைவிஷயத்தில் தன் மகனுக்கிருந்த சம்பந்தத்தை ஒருபோதுமறியவேயில்லை. ஆர்ச்சாவேந்தன்றான் அபராதி என்றுகருதி அவன்மீது ஒரு சைனியத்தை அனுப்பினான். ஆர்ச்சாவேந்தன் அருள்ளோடு ஆரண்யமே கதியாகஓடிப்போய் ஆக்பரின் அந்தியகாலம்வரை அகப்படவேயில்லை. பின்புவெளிப்பட்ட அவனைச் சலீம் கடைசிவரை அன்புடன் ஆதரித்துவந்தான். சக்கிரவர்த்தி சலீமுடன் ஒப்புரவாகி மீண்டும் அவனை மீவார்க் கலகத்தை அடக்கும்படி யனுப்பினான்.

இவ்வுபத்திரவங்கள் ராணாபிரதாபசிங்கு மொகலாய சக்கிரவர்த்தியின் ஆட்சிக்குப் பிடிவாதமாக ஆதிதொட்டு அடங்காதிருந்ததால் அடிக்கடி விளைந்தன. 1576-ஜூலையில் ஹல்திகாட்டில் தோல்வியடைந்ததும் அவன் ஆரண்யத்திற்கோடிவிட்டான். சக்கிரவர்த்தியின் சைனியமும் பின்பற்றியது. அவனும் அவன்மனைவிமக்களும் அதிவேகமாக ஓடுகையில் சக்கிரவர்த்தின் சைனியம் நெருங்கிப் பின்பற்றிச்சென்றதினால் ஒரேதினத்தில் ஐந்திடங்களில் சமைத்து அவற்றைச் சாப்பிட நேரமில்லாமல் அவ்வவ்விடங்களிலேயே விட்டகன்றார்களாம். அநேகநாள் புல்லரிசிமாவாலாகிய ரொட்டியைக்கொண்டுதான் அவனும் மனைவிமக்களும் அரைவயிறு கால்வயிறு நிரப்பிக்கொண்டு அலைந்தார்களாம். இப்படியெல்லாம் கஷ்டங்கள் வாய்த்தாலும் சக்கிரவர்த்திக்குக் கீழ்ப்படிந்து விடுகிறதென்றபேச்சுமட்டும் அவனிடத்தில் (பிரதாபசிங்கிடத்தில்) கிடையாது. பின்புண்டான சண்டைகள் ஒன்றிலாவது தனக்கு ஜயங்கிடையாமல் தோல்வியே நிகழ்ந்த

மையால் பிரதாபசிங்கு தன் குடும்பத்தையும் நம்பிக்கையான நண்பர்களையும் அழைத்துக்கொண்டு மீவாரையே விட்டுவிட்டுப்போய் இந்துநதிக்கரையில் வேறோர் ராஜ்யம் ஏற்படுத்திக்கொள்ளத் தீர்மானித்து மீவாரைவிட்டுப் புறப்பட்டான். அதற்குள்ளாக அவனுடைய மந்திரியின் ஆலோசனைக்கிணங்கி அவன் உதவிய படையைக்கொண்டு மீண்டும் ஒருமுறை முற்சித்துப்பார்த்தான். அதில் 1586-ல் சித்தூர்க்கோட்டையும் மண்டல்கரும் தவிர மீவார் முழுவதும் சுவாதீனப்படுத்திக்கொண்டான். சித்தூரை இழந்தமையால் உதயப்பூரைப் புதியராஜதானியாக ஆக்கிக்கொண்டான். பின் அவ்விராஜ்யத்திற்கே உதயப்பூர்ராஜ்யம் எனப் பெயர் உண்டாயிற்று. அவன் 1597-ல் இறந்தபோதும் தன் சுயராஜ்யத்தை உடையவனாகவே இருந்தான். அவன் தன்னுடைய அந்தியகாலத்தில் அதிக கலக்கமுடையவனாக இருந்ததைச் சமீபத்தே இருந்தவர்கள் கண்டு 'எதைப்பற்றிக் கவலைப்படுகின்றீர்? ஆவி அமைதியாகப் பிரியேன் என்கின்றதே' என்று கேட்க, 'துருக்கர்களுக்கு உட்படுத்திவிடாமல் எனக்குப்பின்னும் மீவாரின் சுவாதந்திரியத்தைக் காப்பாற்றுவீர்களோ என்பதுபற்றித்தான் கவலைப்படுகின்றேன்' என்றானாம். அதற்கு அண்டையிலிருந்த நண்பர்களெல்லாரும் 'நாங்கள் உம்முடைய மைந்தனை ராணுவாக ஏற்றுக்கொண்டு உம்முடைய குடும்பத்தின் சுவாதந்திரியத்தை காப்பாற்றுவோம்' என்று உறுதியிட்டுரைத்தபின் பிரதாபசிங்கு உவப்போடு உயிர்பிரிந்தானாம். அவனுக்குப்பின் அவன்மகன் அமரா ராணு பட்டத்துக்குவந்தான் இவன் மொகலாய சைனியங்களுக்குப் பிரஸ்தாபகாலத்தில் (1603) அதிகதொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தான்.

சலீமிடத்தில் இரண்டு சைனியமிருந்தும் அவன் சரியானபடி உபயோகியாமையால் ஆக்பர் அவனை உடனே அழைத்து அவன் ஏறக்குறைய சுவாதந்தரியாதிபத்தியம் செலுத்தும அலகபாத்துக்குப் போம்படி யனுப்பிவிட்டான். அங்கே அவன் விபசாரம் முதலிய துஷ்கிருத்தியங்களிற்றலையிட்டுக் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான். அவன் தனக்கு வேண்டியவர்களாயிருந்த பரிவாரங்களின் விஷயங்களிலும் கூடக் கவுரவஹீனமாக நடந்துகொண்டான். தான் அங்கே சென்றால் ஒருவேளை தன்மகன் குணப்படக்கூடும் என்று கருதி ஆக்பர் அலகபாத்தை நோக்கிப் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றான். அதற்குள்ளாகத் தன் தாயாருக்கு அதிக காயலாவென்று சமாசாரம் வந்ததினால் உடனே திரும்பிவிட்டான். இதைக்கேட்டுச் சலீம் தானே போய்த் தந்தையைக்காண்பதுகருதிச் சொற்ப சைனியத்துடன் ஆக்ராவுக்குவந்து தந்தையை அடிபணிந்தான். ஆகிலும் தன் நடத்தைகளிற்றிருந்தவில்லை. அவன் தன் ஜேஷ்ட புதல்வனான குஸ்ருவுடன் அடிக்கடி விவாதம் செய்துகொண்டிருந்தது சமஸ்தானத்துக்கே மிகுந்த பழிப்புக்கிடமாக இருந்தது.

சக்கிரவர்த்தி உண்மையாகவே தன் பிள்ளைகள் விஷயத்தில் பாக்கியசாலி அல்ல. அவனுக்கு முதலில் இரட்டைப்பிள்ளைகளாகப் பிறந்த இரண்டு பிள்ளைகளும் சைசவத்திலேயே இறந்தொழிந்தன. ஜேஷ்டனென்று தவறாகச் சொல்லப்படுகின்ற மூன்றாவது குமாரன் சலீம். நான்காவதவனாகிய மூராட் ராஜகுமாரனின் கதியைப்பற்றியோ முன்னமே சொல்லியிருக்கின்றோம். அதிகவளர்ச்சியும் திடமும் சௌந்தர்யமும் பொருந்தியவனென்று வர்ணிக்கப்பெற்றவ

னும் ஆனைகுதிரைகளில் அதிக ஆசையுடையவனும் இந்துஸ்தானி பாஷையில் கவிகள் புனைவதில் வன்மையுடையவனும் ஆகிய ஐந்தாவது குமாரன் தன்யால் என்பவனும் தன் சகோதரன் முராட் என்பவனைப்போலவே குடியில் மூழ்கிக் கடைசியாகப்பிரஸ்தாபகாலத்தில் அக்குடியாலேயே உயிரிழந்தான் அவனை மிதமிஞ்சிய குடியினின்று தவிர்க்கும்படி சக்கிரவர்த்தி அதிக பாடுபட்டான். அவனும் திருந்துவதாக வாக்குத்தானமும் செய்திருந்தான். ஆதலால் அவன் மரணம் ஆக்பருக்கு ஆற்றொணாத் துயரத்தை விளைத்தது. சமஸ்தானத்தில் சக்கிரவர்த்திக்குப் பேரப்பிள்ளைகள் அநேகர் இருந்தார்கள். அவர்களுள் குர்ராம் என்பவன்தான் அதிகமாக அபிமானிக்கப்பெற்றான். அவன்தான் பிற்காலத்தில் ஜகாங்கீர்க்குப்பின் ஷாஜஹான் என்ற பெயரோடு பட்டம் பெற்றவன்.

தன்யால் ராஜகுமாரன் குடியால் இறந்தசெய்தி சக்கிரவர்த்தியை அதிகமாகப்பாதித்தது. அப்போது அவன் வியாதியாகவிருந்தான். அவ்வியாதியிலிருந்து அவன் பிழைப்பது சாத்தியமாகத்தோற்றவில்லை ஆதலால் சூழவிருந்தவர்கள் அவனுக்குப்பின் பட்டம் யாருக்கென்பதைபற்றி யாலோசிக்கத்தொடங்கினார்கள் சக்கிரவர்த்தியின் குமாரர்களோ ஏறக்குறைய எல்லாரும் முன்பே இறந்துபோனார்கள். ஸலீம் என்னும் ஏகபுத்திரன்தான் உள்ளவன். அலகாபாத்திலும் ஆக்ராவிலும் மற்ற விடங்களிலும் அவன் நடந்து கொண்ட மாதிரி சரித்ரம் தகுதியாக இருக்கவில்லை. ஆதலால் அவனுக்குப்பட்டம் புனைவதில் ஒருவருக்கும் பிரியமில்லை. அவனுடைய (ஸலீமுடைய) ஜேஷ்டகுமாரன் [illegible]

ஏனெனில் அவன் சிலாக்கியமான நடையுடையவனாக இருந்தமை யால் அவனுக்குப் பட்டங்கட்டுவதில் எல்லாரும் கருத்து டையவர்களாக இருந்தார்கள். அவன் ஜாட்பூர் ராஜகுமாரி யின் மகன் ஆதலால் ராஜாமான்சிங்குக்கு நெருங்கிய உறவி னன். அன்றியும் அவன், (குஸ்ரு) சக்கிரவர்த்தியின் ராணுவத் தில் மகோந்நதபதவி வகித்துவந்த மகமதியப் பிரபுவின் மகளை மணம்புரிந்திருந்தான். அப்பிரபு சக்கிரவர்த்திக் கமியான முள்ள செவிலியின் மகன். இவ்விருபிரபுக்களும் சலீமைப் பட்டத்தினின்று நீக்கவும் குஸ்ருவுக்குப் பட்டம் புனையவும் வேண்டிய முயற்சிகளைச் செய்யத் தொடங்கி னார்கள்.

இதற்காக அவர்கள் ஆக்பர் நோயாய்ப்படுத்திருந்த ஆக் ராக்கோட்டையைச் சூழத்தங்கள் சைனியங்களை நிறுத்தியி ருந்தார்கள். இத்தருணத்தில் ஆக்பர் இறந்திருந்தால் ஒரு ராஜகலகம் கிளம்பியிருக்கும். ஏனென்றால் சலீம் தன்பாத் தியதையை இழக்கமனங்கொள்ளமாட்டான். ஆனால் அவன், ராஜமான்சிங்கும் சிரேஷ்டசேனாதிபதியும் தனக்கு விரோத மாக ஒன்றுபட்டிருக்கின்ற விஷயத்தை யறிந்தவுடன் தன் னுயிர்க்குப் பயந்து ஆக்ராவுக்குச் சமீபித்த ஓரிடத்திற்கு ஓடிவிட்டான். ஆக்பர் தன் அந்தியகாலத்தில் சலீமைப்பிரிந் திருப்பதில் அதிகமான வருத்தமுடையவனாகி (எல்லாவற்றி னும்பார்க்க நியாயத்தில் அதிகவிருப்புடையவனாதலால்) சம ஸ்தானத்தைச்சார்ந்த பிரபுக்களையெல்லாம் ஒன்றுசேர்த்து "எனக்குப்பின் சலீம் பட்டம்பெறுதல்தான் நியாயம். குஸ்ரு வுக்கு வங்காளத்தின் ஆட்சியளிக்கப்படலாம்" என்று அறி வித்தான்.

ஆக்பருக்கிருந்த செல்வாக்கு அச்சமயத்தில் தான் விசேஷமாக வெளிப்பட்டது. சலீமைப் பட்டத்தினின்று விலக்குவதென்றால் அவன் அப்போது வாயைத்திறந்திருந்தால் போதும். ஆனால் அவன் அதற்கு மாறாக அவனுக்கு அனுகூலமாக அபிப்பிராயப்பட்டான். அதைக்கண்டு பிரபுக்கள், அரைமனதுடையவர்களையும் மனதில்லாதவர்களையும் இணங்குவித்துச் சக்கிரவர்த்தியின் நோக்கத்தை நிறைவேற்றத் துணிந்தார்கள். குஸ்ருவின் விஷயமாக மான்சிங்குடன் சேர்ந்துபட்டிருந்த அவன் (குஸ்ருவின்) மாமனாராகிய சிரேஷ்டசேனதிபதியும் இணங்காதிருக்கக்கூடவில்லை. அவன் விஷயத்தை ஆதரிப்பதாக அந்தரங்கத்தில் சொல்லியனுப்பினான். அச்சமயத்தில் விசேஷ செல்வாக்குடையவனாக இருந்த மான்சிங்குங்கூட சலீமை ஆதரிப்பதாக வாக்களித்தான். இவ்வாறாகப்பட்டம் தனக்கென்பது நிராக்ஷேபமாக உறுதிப்பட்டபின் சலீம் அரமனைக்குச்சென்றான். அங்கே அப்போது மரணத்தறுவாயிலிருந்த சக்கிரவர்த்தியால் அன்போடேற்றுக் கொள்ளப்பெற்றான். சலீம் சக்கிரவர்த்தியண்டைபோய் வந்தனை வழிபாடுகள் செய்தபின் சக்கிரவர்த்தி சலீமைநோக்கி "சபைத்தானத்தைச்சார்ந்த பிரபுக்களை எல்லாம் இங்கேவரச்சொல்லு. உனக்கும் என்னோடு பலநாள் உடனிருந்துழைத்து உறவாடிவந்த பிரபுக்களுக்கும் யாதொரு மனவருத்தமும் இருக்கக்கூடாது. அதுநான் சகிக்கக்கூடாத காரியம்" என்று சொன்னான். அவ்வாறே உடனேபிரபுக்களெல்லாம் அழைக்கப்பட்டுவந்து சக்கிரவர்த்தியை வணங்கினார்கள். சக்கிரவர்த்தி அவர்களையெல்லாம் முதலில் ஒருங்கே நோக்கிச் சிலவார்த்தைகள் பேசிப் பின் ஒவ்வொருவரை

தனித்தனியாக நோக்கித் தான் அவர்களுக்கேதாவது குற்றம் செய்திருந்தால் அதைப்பொறுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். பின்பு சலீம் அழுதுகொண்டு அவனடியில் வீழ்ந்தான். ஆக்பர் தன் பரிசனங்களைப்பார்த்துத் தன் பட்டாக்கத்தி பாகை, அங்கிமுதலிய ராஜசின்னங்களைச் சலீமுக்குச்சூட்டும்படி சைகைசெய்தான். அவர்கள் உடனே அவ்வாறு செய்தார்கள். ஆக்பர் அதன்பின் அரமனையின் ஸ்திரீகளைச் சலீமி[illegible]ணைக் கொ[illegible]புக்கொடுத்துத் தன் பழய நண்பர்[illegible] பரிச[illegible]ங்களையும் அன்போடும் கவுரத்தோடும் நடத்தும்படி அவனை வேண்டிக்கொண்டு பின்பெல்லாக் கவலையும் தீர்ந்ததுகண்டு சந்தோஷத்தோடு பகவானை வணங்கி (15. அக். 1605) ப்பரகதியடைந்தான். அப்போது அவனுக்கு வயது அறுபத்து மூன்று.

மொகலாயராஜ்யத்தை ஸ்தாபித்தவனாகிய சக்கிரவர்த்தி இவ்வாறு சித்தசமாதானத்தோடு உயிர் துறந்தான். அவன் தன்தாதையையும் மூதாதையையும்விட அதிக அதிருஷ்டசாலியாகவும் அதிக தூரதிருஷ்டியும் இயற்கையானகுணம் செயல்களும் அவற்றைக்காட்ட அதிககருணங்களும் உடையவனாய் இந்தியாவின் பலவேறு ஜாதியாரையும் தங்கள் தங்கள் க்ஷேமமும், சுபாதீனமும், தங்கள் தங்கள் பூர்விகமதாசாரங்களை ஆசரித்தொழுகலும் ஆகிய இம்மதிப்பரிய நலங்களெல்லாம் தன்னுடைய ஆட்சிக்கடங்கியிருத்தலையேசார்ந்திருக்கின்றன என்பதை யறிந்துகொள்ளச் செய்யப் போதுமானகாலம் உயிர்வாழ்ந்திருந்தான். பாரபக்ஷமென்பது அவனிடத்தில் கிடையவேகிடையாது. உஸ்பெக், ஆப்கன், பார்ஸி,

இந்துமுதலிய எவ்வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களிடத்தில் விவேகமும் நன்றியும் உண்மையும் உள்ளன என்று கண்டால் அவர்களுக்கு அவன் உத்தியோகங்களை வலியக்கொடுத்துவந்தான். அவன் ஆட்சிபுரிந்த நாற்பத்தொன்பதுவருஷமும் இந்தியாவின்மீது புறதேசத்தாருடைய படையெடுப்புக் கிடையாதென்பது இந்தியாவில் வசித்த பலவேறு குடிகளுக்கும் நன்றாகத்தெரியும். இந்த உட்கல[illegible]ங்களையும் [illegible]றைப் பயத்தாலும் சிலவற்றை நயத்தாலும் [illegible]முற்றுந்தொலைத்தான் என்பதும் அவர்கள் கண்டார்கள். அவன் விசேஷமாகச் சாமோபாயமே கைக்கொண்டுவந்தான். இன்றியமையாதபோதுதான் தண்டோபாயங் கைக்கொள்ளுவான். நானுதேசத்துமிருந்து நானுவிதமானவர்களும் அவனுடைய சமஸ்தானத்துக்குவந்தார்கள். எல்லாவகுப்பாருள்ளும் ஐக்கியம் ஸ்தாபிக்கப்பட[illegible]ந்தமையால் ஒவ்வொரு வகுப்பாரும் அவனுடைய [illegible] காப்பில் க்ஷேமமாக வசித்துவந்தார்கள். ஆக்பர் சக்கிரவ[illegible]தியின் ஆட்சி இப்படியாக இருந்தது. அவன் [illegible] பேர்க்கெ[illegible]த்தமனிதன் என்பதைக் காட்டும்படி அவன[illegible] [illegible]ளைகளை அடுத்த அதிகாரத்தில் விவரிப்போம்.

ஏழாவததிகாரம்.

ஆக்பரின்கொள்கைகள்.

சிறிதாக இருப்பினும் பெரிதாக இருப்பினும் ஒரு ஆட்சியின் எல்லாப்பகுதிகளும் சீராய் நடைபெறுதலும் குடிகளின் விருப்பநிறைவேற்றமும் அவ்வாட்சியைக் கைக்கொண்டு நடத்தும் அரசனின் வாழ்க்கைத்திறத்தைச் [illegible]

இருக்கின்றதென்று அப்னி ஆக்பரின் ஆசிரியன் கூறுகின்றான். இந்நியமத்தைக் கருவியாகக்கொண்டு சோதித்தால் ஆக்பர் பலவிதத்தும் சிறப்படைந்த காரணம் தெரியவரும். அவன் ஒவ்வொருகாரியத்தையும் ஒவ்வொரு ஏற்பாட்டின்படியே செய்துமுடிப்பான். அவ்வேற்பாடொவ்வொன்றிலும், தன்னயங்கருதாதுதான், குடிகளிருதயத்தில் ஊன்றிப்பல்திவாரமிட்டுக் கட்டநினைத்த நீதியரசாட்சிக்கட்டிடத்தை நிர்மாணஞ்செய்யத்தக்க வழியென்ன என்பதையேகவனிப்பான். இக்காரியத்தைச் செய்துமுடிப்பதற்கு அவன் கைக்கொண்ட சாதனங்களை விவரிக்குமுன்னர் எல்லாவிஷயங்களுக்கும் ஆதாரபூதமாக இருக்கின்ற ஆவிக்கடுத்தகாரியங்களில் அவன் தன்மையென்ன என்பதைச் சிறிதுவிவரிக்க வேண்டியதவசியம்.

மகமதியர்கள் இத்தேசத்தைச் செயித்தவர்கள் அதுமட்டுமல்ல. கத்தியும் கையுமாய் நின்றே தங்கள் மதத்தைப் பரவச்செய்தவர்கள். அவர்கள் இந்துக்களிலும் அவர்கள் மதத்திலும் அதிக துவேஷங்கொண்டு பெரிதும் அவமதித்து வந்தார்கள் என்பது அக்காலத்திய சரித்திரக்காரர்களுள் ஒருவனான படேளனியின் நூலைத்திருப்பினால் அதன் ஒவ்வொருபக்கத்தும் பரக்கக்காணலாம். இவ்வவமதிப்பு இந்துமதத்துக்கு மாத்திரமல்ல, மகமதியமொழிந்த எல்லாமதங்கட்கும் அதுவேகதி.

அந்தச்சாதியில்தான் ஆக்பர் பிறந்தான். ஆயின் அவன் எதையுந்தீர ஆராயும் தன்மையுள்ள மனத்தோடு பிறந்தான். அவன்மனம் எதையும் காரணமின்றி ஏற்றுக்கொள்ள இசையாது. அவனுடைய சமுகத்து உத்தியோ

கர்த்தர்கள். இந்துராஜாக்களோ அவர்கள் இன்னும் சுதந்தரர்களாக இருக்கின்ற ஒரே காரணத்தைக் கருதி அவர்களுக்குத் தீங்கைத் துயர்புரியக்கருதினார்கள். இவன் (சக்கிரவர்த்தி) தான் பயிற்சிசெய்துகொண்டிருந்த அக்காலத்திலேயே இந்து ராஜாக்களின் பெருந்தன்மையையும் பக்தியையும் தானத்தையும் குறிப்பிட்டறிந்துகொள்ள அவனுக்கு அநேக சந்தர்ப்பங்கள் நேர்ந்திருந்தன. அவர்களும் அவர்களைப் போலவே [illegible]ருதப்பெற்ற மனிதர்களுந்தான் தன்குடிகளுள் பெரும்பாகத்தினர் என்பதும் அவன்கவனித்திருந்தான். அதுமட்டுமல்ல. அவ்வனேகருள்ளும் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரர்களாக இருந்தவர்கள் லௌகிகவிஷயமாகக் கவனித்தால் தாங்கள் தங்கள் சுவமதத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டு ராஜாங்கமதமாகிய மகமதியத்தைத் தழுவுவதனால் விசேஷித்த லாபமடையலாமென்றறிந்தும் அவ்வாறு செய்யாது தங்கள் சுவமதத்திலேயே உறுதியாக நிற்கின்றார்கள் என்பதையும் கவனித்திருந்தான். ஆதலால் தேசத்தை ஜெயித்தவனும் ஆட்சிசெய்பவனும் ஆகிய தான் மகமதியனாக இருக்கநேர்ந்ததுகொண்டே எல்லாமனிதர்களுக்கும் அதுவே சத்தியமார்க்கமாக இருக்கவேண்டுமென்னும் கொள்கையை ஆதிமுதற்கொண்டே அவன்மனம் ஏற்றுக் கொள்ள இசையவில்லை. வரவர அவனுடைய எண்ணங்கள் வாய்விட்டும் வெளிப்பட்டன. அவன் "நான் வழிகண்டல்லவோ மற்றவர்களுக்கு வழிகாட்டவேண்டும்" என்று கூறினான். வேறு ஜாதி மதாசாரங்கொண்டவர்களுடைய கொள்கைகளை ஆராயுந்தோறும் அவனுடைய சந்தேகங்கள் உறுதிப்பட்டு, ஒருமதச்சார்பையே பெரிதாகக்கருதும் விரிவிலா அறிவின் குறைவைப் பிரதிதினமும் கவனித்தவன்

னை. ஆதலால் எதிலும் நம்பிக்கைகொள்ளாமல் எல்லா மதங்களையும் ஒப்புக்கொள்ளும் பொதுநோக்கமே அவனுக்கு காலபோக்கில் வளர்ந்துவந்தது.

அம்மாறுதல் ஒரு நொடியில் உண்டானதல்ல. சக்கிரவர்த்தி தன் இளமைமுதற்கொண்டே இஸ்லாமதத்துக்கு முற்றும் மாறான மதக்கொள்கைகளைப் பல வேறுபுத்தகங்களிலுமிருந்து உள்ளபடி அறிந்தும் அவற்றுள் தக்கனவெனத் தனக்குத் தோன்றியவைகளைக் கைக்கொண்டொழுகியும் வந்தான் என்று அவன்செயல்களைப் பக்தியீனமானவை என்றுகருதி வருந்திய படௌனி என்னும் சரித்திரக்காரன் கூறுகின்றான். இவ்வாறு அவன் (சக்கிரவர்த்தி) இஸ்லாமதத்துக்கு முற்றும் மாறான பலவேறுமதக்கிரந்தங்களையும் அவற்றில் வல்லவர்களின் உதவியுடன் பாரபக்ஷமின்றிப் பொதுநோக்கோடு ஓதி அவற்றை உள்ளபடி உணர்ந்தான். ஆதலால் ஞானிகளும் அற்புதசக்தியுடையவர்களும் ஒவ்வொருமதத்தினருள்ளும் உண்டு; எல்லாமதங்களிலும் உண்மைப்பொருள் உண்டு; இப்படி எல்லாமதத்திலும் உண்மைப்பொருள் உரைக்கப்படுமாயின், அது (உண்மைப்பொருள்) ஏன் ஒரேமார்க்கத்துக்கு, அதிலும் மிகச்சிறுதொகையினரால் ஆசரிக்கப்பட்டுவருவதும், ஆயிரவருஷத்தியதாகவே கருதப்படுவதால் மற்றமதங்களை நோக்க நவீனமானதும், ஆகிய ஒருமதமார்க்கத்தே உட்பட்டதாக இருக்கவேண்டும்? ஒருமதம் மறுப்பனதை ஒருமதம் ஏன் உரைக்கவேண்டும்? மற்றவர்களால் அங்கீகரிக்கப்படாத ஏற்றத்தை ஒருமதம் ஏன் பாராட்டவேண்டும்? என்று சக்கிரவர்த்தியின் அவனுடைய உள்ளத்தில் தோற்றியது என்றும் அச்சரித்திரக்காரன் கூறுகின்றான்.

ஆக்பர் பிராமணர்கள், சுமானிகள் என்பவர்களுடன் கலந்து புனர்ஜன்மக்கொள்கையையும் கைக்கொண்டான் என்றும் படௌனி [illegible] சக்கிரவர்த்தியைப் பாலவே மகமதுமார்க்கத்திற் பிறந்து வளர்ந்த பேய்சி, அபுல் பேசல் என்ற இருசகோதரர்கள் சக்கிரவர்த்தியின் இவ்விர மத ஆராய்ச்சிக்குக் காரணங்களாக இருந்தார்கள் என்பதிற்றடையில்லை. அவ்வளவு பிரசித்தர்களாகவும் செல்வாக்குடையவர்களாகவும் இருந்த அவ்விருவரையும் பற்றி சிறிது சொல்லவேண்டியது அவசியம். அவர்கள் ராஜபுத்தானவிலுள்ள நகர் என்ற இடத்தில் வசித்த அரபிய ஷேக் வமிசத்தைச் சார்ந்த ஷேக் முபாரக்கின் புதல்வர்கள். ஷேக் முபாரக் தன் மூன்னோர்களின் மதகிரந்தங்களை முற்றும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்தவன். அவன் தீர்க்கா[illegible]ரம் செய்யும் நோக்கமும் கண்டறியும்புத்தியும் [illegible]ளைத் தெளிந்த ஞானியாக இருந்தமையால் தன் மக்களை நன்றாய்ப் பயிற்றுவித்தான். அது, [illegible]வும் அறியவும் கூடியனவாக இருந்த அவர்கள் [illegible] நன்றாய்ப்பதிந்தது. அதனால் அவர்கள் சென்ற [illegible]லெல்லாம் சிறந்துவிளங்கினார்கள். மூத்தவன் பேய்சி தன்பிதா குடியேறிய ஆக்ராவுக் கடுத்த [illegible] 1547-ல் பிறந்தான். ஆதலின் இவன் அக்பருக்கு [illegible] வயதுக்கிளையவன். ஆக்பர் வடமேற்கு மாகாணங்களை [illegible]டும் ஜயித்த உடம்பத்தில், அப்போது [illegible] வயதுடைய பேய்சி, ஆடம்பரமின்றி அமைதியுடன் காவியமும் வைத்தியமும் கற்கத்தொடங்கினான். [illegible] ராயனென்று பேர்பெற்றான். அவன் தனக்கு [illegible] உள்ளதயாளத்தினால் தன்னைத்தியவரும்படி [illegible]

அநேக தருமதாரியங்களை நடத்தினன். அவன் ஏழைகளுக்கு இலவசமாகவே வைத்தியம் செய்வான். மதவிஷயங்களில் அவன் தன் தகப்பனைப்போலவே ஷியாக்களின் கொள்கையிலேயே சார்புடையவனாக இருந்தான். ஒருசமயத்தில் இவன் ஒரு சிறு பூமிக்காகக் காதரண்டை தர்க்காஸ்து விண்ணப்பம் எழுதிக்கொண்டான். அப்போது சுன்னிமதஸ்தனாய் இருந்த அவ்வுத்தியோகஸ்தன், இவன் (பெய்சி) ஷியாவாக இருக்கின்ற ஒரு காரணம் பற்றியே அவ்விண்ணப்பத்தை மறுதலித்ததுமன்றி அவனைத்திட்டி யவமதித்துத் தன் சமுகத்தை விட்டகற்றினனும். அக்காலத்தே சித்தூர்க்கோட்டையை முற்றுகை போட்டுக்கொண்டிருந்த ஆக்பர் இவனுடைய (பெய்சியின்) திறமையைப் பற்றிக் கேள்விப்பட்டு அவனைத் தான் தண்டிறங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்துவரும்படி சொல்லியனுப்பினன். அவ்வுத்திரவைப் பெய்சியின் விரோதிகள் (அவனுக்குப்பலபேர் முக்கிய சுன்னிமதஸ்தர்கள் விரோதிகளாக இருந்தார்கள்) அவனைப் பரிசீலனை செய்வதற்காக அனுப்பிய உத்தரவென்று அர்த்தம்பண்ணிக்கொண்டு அவனைத் தப்பியோடி விடாவண்ணம் பார்த்துக்கொள்ளும்படி ஆக்ராவின் அதிபதியை எச்சரித்தார்கள். ஆனால் தப்பியோடும் எண்ணம் பெய்சிக்கு இருக்கவில்லை. ஆயினும் அவன் ஆக்பர்தண்டிறங்கிய இடத்துக்கு ஒரு சிறையாகத்தான் கொண்டுபோகப்பட்டான். ஆயின் சக்கிரவர்த்தி அவனை அதிகமரியாதையுடன் ஏற்றுக்கொண்டு அவன் திறமையாதிகளில் வசீகரப்பட்டு மகிழ்ந்தான். சமீபகாலத்திலேயே அவனைத் தன் பிள்ளைகளான ராஜகுமாரர்களுக்கு மேற்றரக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியனாக நியமித்துத் தன் சமஸ்தானத்து

டன் சம்பந்தப்படுத்தினன். சிற்சில சமயங்களில் அவனைத் தூதனாகவும் நியமித்தவர்தான்.

பெய்சிக்கு அதிக சாவகாசமிருந்தது. அதை எல்லாம் கவிபாடுவதிலேயே செலவழித்தான். அவன் தன்னுடைய முப்பத்துமூன்றாம் வயதில் கவிஞர்தலைவனாக நியமிக்கப் பெற்றான். தன்னுடைய சங்கத்தில் அதிகமகிழ்ச்சியுற்றுத் தன்னுடன் சம்பாஷித்திருப்பதைப் பெரும்போகமாகக் கருதியிருந்த ஆக்பரின் தயவுக்கும் எப்போதும் பாத்திரனாகவே இருந்து அதற்கு எழுவருஷத்துக்குப்பின் பரகதியடைந்துவிட்டான். அவன் நூற்றொரு பிரபந்தங்கள் இயற்றியிருக்கின்றான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. கையால் எழுதப்பட்ட அருமையான நாலாயிரத்து முந்நூறு கிரந்தங்களடங்கிய அவனுடைய கிரந்தகோசம் இராஜாங்க கிரந்தகோசத்துடன் சேர்க்கப்பட்டது.

ஷேக்பெய்சி ஆக்பரின் தயவில் உயர்ந்து விளங்கினான் என்றால் அவன் சகோதரனும் "அய்னி ஆக்ப" ரின் ஆசிரியனும் ஆகிய ஷேக் அபூல்பேசல் அவ்விஷயத்தில் அவனினும் சிறந்து விளங்கினான். அபூல்பேசல் 1551 ஜனவரி 14-ல் ஆக்ராவில் பிறந்தான். அவனும் தன்சகோதரனைப்போலவே தன்தகப்பனுடைய தெளிவும் விளக்கமுமான போதனையால் பயன்பெற்றவன். தன்தகப்பன் தன்னுடைய விரிவான அறிவின்படி அனுசரித்த மதவிஷயத்துக்காக பஹிஷ்காரம் செய்யப்பெற்றதை அறிந்து மனவருத்தப்பட்டிருந்தான். இதனால் அவன், (அபூல் பேசல்) எந்த மதத்திலும் துவேஷம் கொள்ளுதல்கூடாது; எல்லாமதத்தையும் ஒப்

பக்குதி உண்மையறியவேண்டும் என்று எல்லாருக்கும் நன்ருக மனதிற்படும்படி போதிக்கத்தொடங்கினன். இதனுல் பலவேறு நூல்களையும் கஷ்டப்பட்டுப்படிக்க அவனுக்குச் சமயங்கள் நேர்ந்தன. ஆதலால் அவன் தன் பதினேந்தாவது வயதுக்குள்ளாக நியாய நூல்களையும் சமயசாஸ்திரங்களையும் பற்றிய எல்லாவிஷயங்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து தனது இருபதாவது வயதில் உபதேசகுருவாக வெளிப்பட்டான். அக்காலத்திலேயே அவனுடைய பயிற்சி எவ்வளவு சிறந்திருந்ததென்பதை விளக்க ப்ளாக்மேன் பண்டிதர் ஒரு விஷயம் கூறுகின்ருர். அது வருமாறு: அரிய நூலாகிய இஸ்பகானியின் கையெழுத்துப் பிரதியொன்று அவனிடம் அகப்பட்டது. துரதிர்ஷ்டவசத்தால் அதன் ஒவ்வொருபக்கமும் தீப்பட்டதினுலேயோ சிதலரித்தனுலேயோ பாதிபாதி படிக்கக்கூடாதபடி சிதைந்துபோயிருந்தது. இவன் அச்சிதைந்த பகுதியை நன்ருய்ச் சிதைத்தெறிந்துவிட்டு புதிய காகிதங்களை அக்குறைப்பகுதிகளோடு ஒட்டி அவ்விய விஷயத்தைத் தன்சொந்த மொழிகளால் பூர்த்திசெய்தெழுதிச் சேர்த்தான். பின்பொரு காலத்தில் சிதையாத புத்தகம் ஒன்று அகப்பட்டு ஒத்துநோக்கியபோது சிற்சில இடங்களில் வார்த்தைகள் வேறுபட்டிருப்பினும் பெரும்பான்மையும் கருத்திணங்கியிருக்கக்கண்டு எல்லோரும் அவனுடைய (அபூல்பேசனுடைய) (வேறொரு ஆசிரியனின் கருத்துள் நுழைந்து அவனுடைய நடையை ஒட்டியெழுதும்) அற்புதசக்தியை வியந்து கொண்டாடினர்கள்.

அபூல்பேசல் எப்போதும் கல்வியிலேயே கருத்தைச் செலுத்திவந்தமையின் அநேகநாள்வரை ஆக்பர் விரும்பிய

வாறு அவனுடைய சமஸ்தானத்தை நாடிச்செல்லவில்லை. ஆயினும் கடைசியாகச் சிலர் (1574 ஆரம்பத்தில்) அவனை அக்பரிடம் அழைத்துப்போய்ப் பெய்சியின் சகோதரன் என்று பேட்டி செய்வித்தார்கள். அப்போது அக்பர் அவனை அன்போடேற்று அதிகமாக உபசரித்தான். அதனால் அபூல்பெசல் அதிகமகிழ்ச்சியுடையவனாயினான். முன் சந்நியாசத்தில் விருப்பங்கொண்டிருந்த அவன் உள்ளம் பின்னும் ஆவரத்தோடுறைய இசைந்தது. அப்போது அவனுக்கு இருபத்துமூன்று வயதுதான் ஆகியிருந்தது. அப்போதே அவன் தன்தேசத்திற் கிடைக்கக்கூடிய எல்லா நூல்களையும் ஆய்ந்தறிந்திருந்தான். இவ்விஷயமாக அவன் கூறுவது இது: “என்மனத்துக்கு ஓய்வில்லை. மங்கோலியசன்னியாசிகளையும் லிபானன் மேலுள்ள முனிவர்களையும் என்மனம் நாடிச் செல்லுகின்றது. திபத்திலேயுள்ள லாமாக்களுடனும் போர்த்துகல் பாதிரிகளுடனும் சல்லாபஞ்செய்யவேண்டுமென்று என்மனம் விரும்பியது. பார்சீகமோபதர்களுடனும் ஜெந்தாவஸ்தாவிற்றேர்ந்த ஞானிகளுடனும் உட்கார்ந்துவடறுவான் உள்ளத்தன் ஆயினேன். என் தேசத்து ஞானிகளுடன் உட்கார்ந்துட்கார்ந்து நான் சலித்துப்போனேன்.”

இக்காலமுதல் அவன் சமஸ்தானத்தோடு சம்பந்தம் பெற்றான். அதுமுதல் அவ்விருவருக்கும் ஒருவர்மீது ஒருவர்க்குள்ள மதிப்பினாலும் ஒருவர்கருத்துடன் மற்றவர் கருத்தொன்றுபட்டிருக்குந் தன்மையினாலும் உயிர்வாழ்க்கையில் உவப்புக்கேதுவான நட்புண்டாயிற்று. அபூல்பேசல், கல்வியைக் காதலிப்பவர்களுள் சக்கிரவர்த்தியை முதன்மையானவனாக்கண்டான். சக்கிரவர்த்தி வேட்டை

யாடிக்களைத்தவிர்த்தும் ஆட்சிவினையிற் கவலையுற்ற போழ்தும் போரிடைக்களைப்புற்றபோழ்தும் மதிப்புள்ள தனது ஸபையார்க்கும் அவனைத்திக்கரிக்கக் கருதிய மதவெறிகொண்ட மற்ற மகம்மதியஞானிகளுக்கும் இடையே நடக்கும் மதவாதங்களைக் கேட்டுக்கொண்டு விநோதமாகக் காலங்கழிப்பான். சக்கிரவர்த்திக்கு அவ்விஷயத்திற்போல வேறெதிலும் அவ்வளவு உற்சாகமிருந்ததில்லை. அவனுடைய ஆட்சியில் இவ்வாதங்கள் விசேஷித்த விஷயமாக இருந்தது.

அவைகளைப்பற்றிச் சிறிதளவுக்காவது விவரித்தாலன்றி ஆக்பரின் சுபாவத்தை அறிந்துகொள்ளுவது சாத்தியமல்ல. துவேஷமின்றி எல்லாரையும் தத்தம் மதத்தை அவலம்பித்துவர இடங்கொடுத்துப் பாரபக்ஷமின்றி எல்லாரையும் ஒரேவிதமாக ஆளத்தொடங்கிய காலம் இந்துதேச சரித்திரத்தில் ஒருவிசேஷகாலமாகக் குறிப்பிடக்கூடிய அவ்வளவு சிறப்புடையது. ஆக்பர் இக்கொள்கைகளை ஒரே திவஸத்தில் கைக்கொண்டுவிடவில்லை. முதல் இருபதுவருஷமும் அவன் தன் ஆதிக்கியத்தை நாட்டிக்கொள்ளுதற்காக அநேக ஜெயங்களைப்பெறவேண்டியிருந்தது. வங்காளம், பேகார், ஒரிசா, குஜராத்து, காண்டேஷ் உட்பட்ட மேற்கிந்தியா இவைகளை இழந்த ராஜவம்சத்தார்கள் எப்போதும் போர்க்குச் சமயம் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். இவன் ஓய்ந்துட்கார்ந்தால் அதை அவர்கள் போர்க்குத் தருணமாகக்கொள்ளுவார்கள். ஆதலால் இவன் எதிரேற்க வேண்டியவனாக இருந்தான். இந்தியா உட்கலகமின்றி நிம்மதியாக இருக்கவேண்டுமானால் அதுமுற்றும் ஒருகுடைக்கீழ் அமையவேண்டுமென்று முன்னும் அவ்வப்போது முன்

